நவரச நாடகங்கள்

எஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.Ed.

நம்பிக்கை

கதை மாந்தர்கள் :

அலமேலு	—	லதாவின் தாய்
	—	செல்வமணியின் சகோதரி
	—	வயது 45
லதா	—	அலமேலுவின் மகள்
	—	செல்வமணியின் அக்காள் மகள்
	—	வயது 20
கௌரி	—	லதாவின் தோழி
		வயது 20
மோகினி	—	நடிகை
	—	வயது 22
செல்வமணி	—	அலமேலுவின் தம்பி
	—	வயது 25

முன்னுரை

ஒன்பது ஓரங்க நாடகங்கள் அடங்கிய இந்த நூலுக்கு 'நவரச நாடகங்கள் எனும் தலைப்பினைத் தந்திருக்கிறேன்.

ஒன்பது நாடகங்களும் ஒவ்வொரு சுவை யுள்ளதாக அமைந்திருக்கிறதா என்ற கேள்விக்கு, இல்லை என்ற பதிலைத் தந்து உங்களை ஏமாற்ற விரும்பவில்லை, பல்சுவை பகுதிகளாக ஒவ்வொரு நாடகமும் அமைந்து இருக்கிறது என்று மட்டும் உங்களுக்கு முன் கூட்டியே சொல்லிவிடுகிறேன்.

படித்து மகிழ விரும்புவோர்க்கு படிக்கச் சுவையாக இருக்க வேண்டும், நடித்து மகிழ விரும்புவோர்க்கு நடிப்பினை வெளிப் படுத்திக் காட்டும் வண்ணம் நுணுக்கங்கள் உள்ளனவாக அமைந்திருக்க வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவன் என்பதால், இந்நூல் என் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

லட்சக்கணக்கான ரசிகர்கள் சென்னை வானொலி நிலைய வர்த்தக ஒலிபரப்பில்

வண்ணச் சுடர் நாடகப் பகுதியில் ஒலிபரப்பிய (முதல்) ஆறு நாடகங்களும்; சென்னை தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்பிய (கடைசி) மூன்று நாடகங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

நாடக நூல்கள் விற்பனையாகாது என்று பயப்படுத்துகின்ற இந்நாளில், இது எனது நான்காவது நாடக நூலாகும். இனி பல நாடக நூல்கள் தொடர்ந்து வெளி வர இருக்கின்றன.

விற்பனைக்கென்று கவர்ச்சியான நிகழ்ச்சிகளை சேர்த்து விடுகின்ற மனோபக்குவம் இல்லாததால், விறுவிறுப்பாகச் செல்கின்ற 'ஜனரஞ்சகமான' நிகழ்ச்சிகளை வைத்து உணர்ச்சிகரமான உரையாடல்களினால் உருவாக்கப் பட்டிருக்கும் இந்நூலை, படித்து முடித்ததும் நீங்கள் உணரக்கூடும் என்ற நம்பிக்கையில், இந்நூலுக்குரிய முன்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

எனது ஆரம்பகால எழுத்து முயற்சிகள் நாடகத்தில்தான் முகிழ்த்தன. நாடகங்கள் எழுதுவதிலும், நடிப்பதிலும், கல்லூரி நாட்களில் ஈடுபட்டிருந்த நான், சென்னைக்கு வந்து நாடகத் தயாரிப்பாளனாகவும் இருந்து, கஷ்டப்பட்டு பெற்ற அனுபவங்கள், இந்த நாடக நூலை எழுதும் பக்குவத்தை ஊட்டின.

அன்று அல்லற் படுத்திய நாடக உலகத்திற்கு. இன்று என்னால் பல நல்ல நூல்களைத் தரமுடிகிறது என்ற எண்ணம், கசப்பான

கஷ்டங்களை எல்லாம் கனிரசம் மிகுந்ததாக ஜீரணித்துக் கொண்டிருக்கிறது.

நேற்றைய நிகழ்ச்சி இன்றைய வரலாறு என்பது போல் நேற்றைய அனுபவங்கள் இன்றைய நூல்களாகப் பரிணமித்துக் கொண்டிருக்கின்றன.

வரவேற்று வாழ்த்தி உதவுகின்ற வாசகர்கள் உலகம், இந்நூலையும் ஏற்று ஆதரிக்கும் என்று நம்புகிறேன்,

இந்நூலை அழகுற வெளியிடும் சாந்தி மலர் பதிப்பகத்தார்க்கும் அழகுற அச்சிட்ட கிரேஸ் பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கும், ஆக்கபூர்வமாக உதவிடும் திரு R. ஆதாம் சாக்ரட்டீசுக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞானமலர் இல்லம்
சென்னை-17

எஸ், நவராஜ் செல்லையா
26-10-81

பொருளடக்கம்

1. நம்பிக்கை

2. கீதோபதேசம்

3. சந்தர்ப்பம்

4. பார்வதி விஜயம்

5. டியூஷன்

6. தலையெழுத்து

7. கொஞ்சம் பொறுங்க!

8. அந்த நேரம்!

9. நானும் வர்றேன்!

ஆசிரியரின் பிற நூல்கள்

ஒலிம்பிக் பந்தயத்தின் கதை (மத்திய அரசு பெற்ற நூல்)	3	00
விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும்	11	00
விளையாட்டுக்களின் கதைகள் (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்)	15	00
கிரிக்கெட் ஆட்டத்தின் கதை	4	50
விளையாட்டுகளுக்குப் பெயர் வந்தது எப்படி?	3	25
விளையாட்டு உலகில் வீரக்கதைகள்	3	50
வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள்	3	25
விளையாட்டுக்களின் விதிகள்	14	00
கால் பந்தாட்டம்	4	00
கைப் பந்தாட்டம்	4	00
கூடைப் பந்தாட்டம்	4	00
வளைகோல் பந்தாட்டம்	4	00
கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில்	4	00
பூப்பந்தாட்டம்	5	00
மென் பந்தாட்டம்	6	00
வளையப் பந்தாட்டம்	2	50
கோகோ ஆட்டம்	4	00
சடுகுடு ஆட்டம்	7	00
கேரம் விளையாடுவது எப்படி?	4	00
சதுரங்கம் விளையாடுவது எப்படி	4	00
நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம்	6	00
ஒரு நூறு சிறு விளையாட்டுகள்	6	50
கூடி விளையாடும் குழு விளையாட்டுகள்	4	50
விளையாட்டு விருந்து	5	00

விளையாட்டு விழா நடத்துவது எப்படி?	6	00
விளையாட்டுக்களில் விநோதங்கள்	4	50
விளையாட்டு அமுதம்	8	50
விளையாட்டு உலகம்	3	50
விளையாட்டுச் சிந்தனைகள்	3	00
விளையாட்டுக்களில் வினாடி வினா விடை	3	50
விளையாட்டுத்துறையில் சொல்லும் பொருளும்	4	50
விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள்	5	00
வாழ்க்கைப் பந்தயம்	6	00
பாதுகாப்புக் கல்வி	2	50
Quotaions on Sports and Games	7	00
General Knowledge in Sports and Games	1	25
பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள்	6	00
இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள்	4	00
நீங்களும் உடலழகு பெறலாம்	4	00
பெண்களும் பேரழகு பெறலாம்	4	00
உடலழகும் பயிற்சி முறைகள்	3	25
தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள்	2	25
எதற்காக உடற்பயிற்சி செய்கிறோம்	2	00
நல்ல கதைகள் பாகம் I	1	50
நல்ல கதைகள் பாகம் II	1	50
நல்ல கதைகள் பாகம் III	1	50
கடவுள் கைவிடமாட்டார்	2	00
பண்புதரும் அன்புக் கதைகள்	2	00
தெய்வ மலர்	2	00
நல்ல பாடல்கள்	1	75
செங்கரும்பு	2	00
மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள்	3	75
நவனின் நாடகங்கள்	3	50
நல்ல நாடகங்கள்	2	25

நம்பிக்கை

காட்சி 1

இடம் : லதா வீடு

உள்ளே : லதா, அலமேலு, கௌரி

[அலமேலு கோயிலுக்கு செல்லப் புறப்படுகிறாள். லதா ஒரு நாற்காலியில் சோகமாக அமர்ந்திருக்கிறாள்.[

அலமேலு : லதா! வாம்மா கோயிலுக்குப் போய் வரலாம்.

லதா : நீங்க போயிட்டு வாங்கம்மா! எனக்கு மனசு சரியில்லே...

அலமேலு : ஆண்டவன் சன்னதிக்குப் போனா அத்தனை துன்பமும் பறந்து போயிடும். மனசு சரியில்லேங்கிறது அப்படி ஒண்ணும் பெரிய துன்பம் இல்லே...வா! போகலாம்!

லதா : துன்பம் இல்லேண்ணு சொன்னீங்க...அம்மா! என் இன்பம் மட்டுமில்லே! என் வாழ்க்கையே பறந்து போச்சம்மா! நான் தனியா இருந்தா, கொஞ்சமாவது நிம்மதி கிடைக்காதான்னு பார்க்குறேன்...என் பழைய நினைவுகளை தூண்டிவிட்டு, என்னை துடிக்க வைக்க

எம்மா நீங்க முயற்சி பண்றீங்க...நான் வரலே...நீங்க போறதுன்னு போயிட்டு வாங்க.

அலமேலு : நீ இல்லாமே நான் தனியா போறது, எனக்கு நல்லா இல்லேம்மா...

லதா : துணைன்னு நீங்க நம்புற நானும் சீக்கிரமா மாறிப் போயிடுவேன்... என்னைப் போயி நீங்க நம்புறதுதான் எனக்கு ஆச்சரியமா இருக்கு!...

அலமேலு : லதா! பெத்த தாய்க்கு, தன் ஒரே மகளை நம்பாம முடியுமா! உங்கப்பாவை நம்பியிருந்தேன்! நம்ப ரெண்டு பேரையும் தவிக்க விட்டுட்டு போயிட்டாரு, உனக்கு நான்! எனக்கு நீ! நம்பித் தானேம்மா வாழ்க்கைய நடத்த வேண்டியிருக்கு.

லதா : நானும் உங்களை மாதிரிதாம்மா நம்பிகிட்டே வாழ்ந்தேன். கடைசியில என்ன ஆச்சு! தோல்வி! நம்பிக்கையில தோல்வி! என் ஆசையில தோல்வி! என் வாழ்க்கையே அஸ்தமிச்சுப் போச்சு. இப்ப போய் கோயிலே சுத்த கூப்பிடுறீங்களே! குளம் இருந்தா கூப்பிடுங்கம்மா...ஒரே அடியா தலே முழுகிடுறேன்.

அலமேலு : இப்படி எடுத்தெறிஞ்சு பேசறியேம்மா! இது உனக்கே நல்லா இருக்கா?

லதா . நான் இப்படி பேசறது நல்லா இல்லேன்னு சொன்னா, என்னைக் கேட்க கூடாது. போயி உங்க தம்பியை கேளுங்க! ஒரே தம்பின்னு உருகி உருகி வளர்த்தீங்களே! அவனுக்கு அப்பா அம்மா இல்லே! அவன் அநாதை! நான் ஒருத்திதான் ஆதரவுன்னு, பாசத்தைக் கொட்டிக் கொட்டி வளர்த்தீங்களே! அந்தத் தம்பியை போய் கேளுங்க!

அலமேலு : என்ன கேட்கச் சொல்றே?

லதா : "உண்ட வீட்டுக்கே துரோகம் பண்ணிட்டியேடா பாவி! நீ உருப்படுவியா! உன் வாழ்க்கை விளங்குமா? போற வழிக்குப் புண்ணியம் கிடைக்குமா? கொஞ்ச நேரமாச்சும் உன் மனசாட்சி உன்னைக் கொல்லாதா? நீ எப்படி உயிரை வைச்சுகிட்டு உலகத்துல நடமாடுற" இப்படியே போய் கேளும்மா!

அலமேலு : என் தம்பியை நான் எப்படி கேட்பேன்? உனக்கு அவன் மாமன் தானே...நீ போய் கேட்குறது தானே!

லதா : துரோகி முகத்துல என்னை போய் விழிக்க சொல்றியேம்மா!

அலமேலு : அப்ப, அவனை மறந்துடு!

லதா : அதெப்படி மறக்க முடியும்? என் நெஞ்சு ஆறுதும்மா! நான் கொடுத்தா என் சாபம் அப்படியே பலிச்சுடும் ஆமா!

அலமேலு : நல்லா சாபம் கொடு! பலிக்கட்டும்...

லதா : சாபம் கொடுக்கத்தான் போறேன்! நான் வாழ வேண்டிய இடத்துல வாழுறாளே இன்னொருத்தி! பேரைப்பாரு மோகினியாம்...மோகினி! (தணிந்த குரலில்) அம்மா! நீயே சொல்லும்மா! என் மாமன் மேல் நான் எப்படியெல்லாம் உயிரையே வச்சிருந்தேன் தெரியுமா?

அலமேலு : எனக்கு தெரியாதா லதா!

லதா : எனக்கிருந்த சாதத்தைக் கூட மாமாவுக்கு போட்டுட்டு, எத்தனையோ நாள் பட்டினி கிடந்திருக்கேன். அவருக்கு உத்தியோகம் கிடைக்கறதுக்காக, என் நகைகளை கூட அடகு வச்சி, ஏன் வீத்து கூட பணம் வாங்கிக் குடுத்திருக்கேன்.

அலமேலு : உண்மைதான்! அதெல்லாம் இல்லேன்னு எப்படிம்மா சொல்ல முடியும்

லதா : வேலைக்காரி மாதிரி அவர் துணியெல்லாம் துவைச்சு போட்டேன். கண் விழிச்சிருந்து பரீட்சைக்கு பாடம் போட்டு குடுத்தேன். சிரிச்ச முகத்தோடதான் எல்லா உதவியும் செஞ்சேன். கடைசியில, என்னை அழ வச்சிட்டு, பச்சை துரோகம் பண்ணிட்டு போயிட்டாரேம்மா! (அழுகிருள்)

அலமேலு : உன்னை அவன் கல்யாணம் பண்ணிக்கலேன்னு, அதை எப்படி துரோகம்னு சொல்ல முடியும்?

லதா : அது சாதாரண துரோகம் இல்லேம்மா! நம்பிக்கை துரோகம்! நயவஞ்சகத் துரோகம்... சிரிச்சு சிரிச்சு பேசி என்னை கழுத்தறுத்த கொலைகார துரோகம்! என்னை அவர் கொன்னுட்டே போயிருக்கலாம்!

அலமேலு : கல்யாணம் நடந்து போயி ஒரு வாரம் ஆச்சு! கடலுக்குள்ளே கப்பல் இறங்கியாச்சு! இனிமே கப்பல் தரைக்கு வரமுடியாதும்மா! கல்யாண வாழ்க்கையும் அப்படித்தான். நடந்ததை மறந்துட்டு, இனி நடக்க வேண்டியதை கவனிம்மா!

லதா : ஏழு ஜென்மம் ஆனுக் கூட நான் அதை மறக்க மாட்டேம்மா! என்னைவிட அந்த மோகினி படிச்சவளா! பாசம் உள்ளவளா! குணத்துல சிறந்தவளா! மாமாவை புரிஞ்சவளா! சொல்லும்மா!

அலமேலு : லதா! அந்தப் பெண்ணை அவனுக்கு பிடிச்சிருந்தது. ஆசைப்பட்டான். என்கிட்ட சம்மதம் கேட்டான். சரின்னு சொல்லிட்டேன். மங்கள காரியம் மங்களமா முடிஞ்சுட்டது. கல்யாணத்துக்குந் தான் நீ வரலே! டூர் போறேன்னு போயிட்டே! இந்த

வீட்டுல இருக்க அவனுக்குப் பிடிக்கல...வேற வீட்டுக்கு தனிக்குடித்தனம் போயிட்டாங்க...அவ்வளவுதான்.

லதா : நான் ஊருல இல்லாத நேரம் பார்த்து கல்யாணமா அம்மா! இப்ப எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்... அது தெரிஞ்சுட்டா நான் நிம்மதியா இருக்க முயற்சி பண்ணுறேன், இல்லே! அம்மா...அப்புறம் நீங்க இந்த உலகத்துல, அநாதை மாதிரி தனியாதான் வாழணும்.. ஆமா!

அலமேலு : எனக்கு சாபம் தர்றியா மகளே! சரி...உனக்கு என்ன உண்மை வேணும்! கேளு! முடிஞ்சா சொல்றேன்!

லதா : சொன்னு உனக்குப் புரியாதும்மா! கேட்டாலும் உனக்கு பதில் சொல்ல முடியாதும்மா!

அலமேலு : முயற்சி பண்றேன்!...உனக்கு உதவ முடியு மான்னு இத்தனை நாளா முயற்சிக்கறேன்! முடியலே! இப்பவாவது எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை குடும்மா... சந்தர்ப்பத்தைக் குடு.

லதா : ஏம்மா! ஒரே வீட்டுல, இருபது வருஷமா உயிருக்கு உயிரா பழகிட்டு, இப்ப, என்னை விட்டுட்டு, வேறொருத்தியை போயி கல்யாணம் பண்ணிக்கிட்டு இருக்காரே! உங்க தம்பி! ஏன்! ஏன்? எனக்கு என்னம்மா குறைச்சல்? என் உடம்பில குறையா? இல்லே தீராத வியாதியா?

அலமேலு : என்னை மன்னிச்சுடும்மா! என்னால இதுக்கு நிச்சயம் பதில் சொல்ல முடியாது! இந்த கேள்வியை அவனையே போயி கேளு.

லதா : கேட்குறேம்மா கேட்குறேன்! கோயிலுக்குப் போறதை விட, அந்தக் கொடுமைக்காரரையே போயி கேட்டா என் துன்பம் கொஞ்சமாவது குறையும். வாங்க...வாங்க போகலாம்! என்னம்மா தயக்கம்?

இத்தனை நாளும் வீட்டு விலாசம் தெரியாதுன்னு சொல்லிட்டு இப்ப எப்படி அழைச்சிட்டு போறதுன்னு பாக்குறீங்களா பரவாயில்லே! பார்த்த உடனே வந்துடலாம்.

அலமேலு : சரி லதா! புறப்படு...

(அவர்கள் புறப்படும்பொழுது கௌரி உள்ளே வருகிறாள்)

கௌரி: லதா! நான் வீட்டுக்குள்ளே வர்றேன். நீ வெளியில புறப்படுறே...என்ன ஒற்றுமை பார்த்தியா?

லதா : வா கௌரி! அம்மா! இவ என் Friend கௌரி! ஒரு பெரிய நர்சிங் ஹோம்ல நர்சா இருக்கா... கௌரி இவங்க என் அம்மா! எனக்கு இருக்கிற ஒரே துணை.

கௌரி, வணக்கம்மா! நீங்க ஏதோ முக்கியமான காரியத்துக்குப் புறப்படுறீங்க போல இருக்கு! நான் சாவகாசமா அப்புறம் வந்து பாக்குறேன்.

லதா : இருடி! வந்ததும் வராததுமா பறக்குறியே! அம்மா! காபி கலந்துகிட்டு வாங்களேன். முதமுதலா வந்துருக்கா நம்ம வீட்டுக்கு...

அலமேலு : பேசிக்கிட்டு இருங்க. ஒரு நிமிஷத்துல ரெடி பண்ணிடுறேன்.

லதா : கௌரி! உன்னை காலையிலேயே எதிர்பார்த்தேன்... நீ வரவேன்னு சொன்ன உடனே, எனக்கும் என்ன மோன்னு போயிடுச்சு.

கௌரி: லதா! நீ கேட்ட கேள்விக்கெல்லாம் பதில்வேணும். அவ்வளவுதானே! சொல்லட்டுமா!

லதா : சத்தம் போட்டு பேசாதே! நாம பேசறது அம்மா காதிலே விழக்கூடாது. அப்புறம், நாம எதிர்பார்க்குற Tempo இல்லாம போயிடும்.

கௌரி : உண்மைதான் லதா! நீ கேட்ட கேள்விக்கெல்லாம் பதிலா எழுதி, இந்த கவர்ல வைச்சிருக்கேன்.

லதா : Very good கௌரி... Thank you very much......நீ வாசல்ல நின்னு அம்மாவை பார்த்துக்கோ! நான் ஒரே மூச்சுல படிச்சு முடிச்சுடுறேன்.

கௌரி : லதா! நான் என்ன கதையா எழுதியிருக்கேன் நாலே நாலு வரிதான். படி... படி...

(அலமேலு காபியுடன் வந்துகொண்டே)

அலமேலு : என்னம்மா கௌரி... படிபடின்னு சொல்றே! லதா வேற ஏதாவது பரீட்சை எழுதப் போறுளா!

லதா : (தடுமாற்றத்துடன்) ஆமாம்மா! படிச்சாத்தான் மனசுக்கு நிம்மதி வரும்னு... படிக்க முயற்சி பண்ணுனேன். நீங்க வந்துட்டீங்க... அதென்னம்மா அவ்வளவு சீக்கிரம் காபியோட வந்துட்டீங்க...

அலமேலு : இது காபி இல்லேம்மா! லெமன் ஜூஸ் தான்! சாப்பிடும்மா.

கௌரி : ரொம்ப Thanksம்மா......

அலமேலு : சரி. போகலாம் வாங்க...

லதா : கௌரி நாளைக்கு வந்து உன்னை கட்டாயம் பார்க்குறேன்.

கௌரி : லதா! நீ நினைக்குறது நடக்கணும். கடவுளை வேண்டிக்குறேன்.

அலமேலு : நடக்கறதைதான் நினைக்கனும்னு சொல்லு. அதுதான் நமக்கு நல்லது!

லதா : எதிர்பார்த்தாதான் ஏமாற்றம் வரும்னு சொல்வாங்க; இல்லியாம்மா!

கௌரி : ஏமாற்றத்தை போக்கனும்னு, எதிர்பாத்தாதான் முடியும். எப்படியோ, லதா சந்தோஷமா இருக்கனும்... அதுதாம்மா என்னோட ஆசை, பிரார்த்தனை எல்லாம்!

அலமேலு: அதுதான் என் ஆசையும்...போகலாம், வாம்மா!

லதா : See You கௌரி...

கௌரி : Thank You லதா. வர்றேம்மா.

காட்சி முடிவு

காட்சி 2

இடம் : செல்வமணி வீடு.

உள்ளே : செல்வமணி. மோகினி, லதா, அலமேலு,

வீட்டிற்கு வெளிப்புறமாக இருந்தபடி லதாவும், அலமேலுவும் பேசிக் கொண்டிருக்கின்றனர். மெதுவான குரலில்.

அலமேலு : லதா! இதுதாம்மா உன் மாமா செல்வமணி வீடு.

லதா : ரொம்ப சின்ன வீடா இருக்கேம்மா...

அலமேலு : பேருதான் செல்வமணி. பாவம்! செல்வ வசதி தான் இல்லே...! ம்...என்ன பண்றது? பேருக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமே இருக்கறதுல்லே. கூப்பிடும்மா...

லதா : கூப்பிடறது என்ன? கதவை தட்டிஞ ஆளு கதறிகிட்டு வர்ராரு...

அலமேலு : கொஞ்சம் பொறு லதா! உள்ளே ஏதோ சத்தம் கேட்குது...

(உள்ளிருந்து சத்தம் போட்டு பேசும் குரல் கேட்கிறது.)

செல்வமணி : மோகினி! அப்படியே நில்லு. ஓரடி எடுத்து வச்சாலும் அப்படியே அடிச்சு கொன்னுடுவேன்! மரியாதையா பதில் சொல்லு! பெட்டி படுக்கைய எடுத்துக்கிட்டு எங்கே போறே?

மோகினி : ஸ்டேஷனுக்குப் போறேன்...

செல்வமணி : வசதியா வீடு இருக்கும் போது, ஸ்டேஷனுக்குப் போய் குடும்பம் நடத்தப்போறியா? வெட்கமாயில்லே...

மோகினி: இப்ப இருக்குறது வீடா—இல்ல! சுடுகாடு... உங்களுக்கு இது வீடா தெரியலாம்...ஆஞ என்னை பொறுத்த வரையிலும் இது நரகம், இந்த லட்சணத்துலே,குடும்பம் வேற நடத்தனுமாம்!

செல்வமணி : லட்சணமா இருக்குறியே தவிர, லட்சணமா பேசத் தெரியலே— என்னை உயிருக்குயிரா நேசிச்ச என் அக்கா மக லதாவைக் கைவிட்டுட்டு, உன்னை கைப் பிடிச்சேன். கல்யாணம் முடிச்சேன். ஏன்? என்னைப் பார்த்து சொர்க்கம்னு சொன்ன அதே வாய்,

இன்னைக்கு நரகம்னு உளருதே! உனக்கு என்ன ஆச்சு? மூளை கலங்கிப் போச்சா?

மோகினி : உங்களுக்குத்தான் புத்தி பேதலிச்சுப் போச்சு. நான் என் பொறந்த வீட்டுக்குப் போறேன்?

செல்வமணி : ஏன்?

மோகினி : ஒரு பொண்ணு பசி பட்டினியா கிடக்கலாம்! பகட்டான உடை கூட தேவையில்லேன்னு வாழலாம். வீடோ வாசலோ, இல்லாம. வீதியிலக் கூட குடும்பம் நடத்தலாம். எப்போ? ஒரு பொண்ணுக்கு புருஷன் ஒழுங்கா இருக்கறப்பதான். புரியுதா உங்களுக்கு! நீங்க நடந்துக்குற யோக்கிதைக்கு இந்த வீடு நரகம் தான். அதுக்கு மேலே பேச நான் தயாராயில்லே! நான் வர்ரேன்! வழியை விடுங்க!

செல்வமணி : காரணத்தை சொல்லாம கதை அளக்குறியே! உன்னாலே என் உயிருக்குயிரான அக்காளை மறந்தேன், அக்கா மகளை இழந்தேன். பக்கத்து வீட்டுக்காரங்க, துரோகின்னு பேசவும் இடம் கொடுத்தேன். இப்ப சொல்லு. நான் அயோக்கியனா...துரோகியா! என் யோக்கிதையில என்ன குறைஞ்சு போச்சு!

மோகினி : நீங்க உலகத்துக்கே துரோகியா இருந்தாகூட எனக்கு கவலையில்லே! ஆனா... அதை எப்படி சொல்வேன்?

செல்வமணி : சொல்லு! அப்பத்தானே எனக்கும் தெரியும்!

மோகினி : காலையில எழுந்திருக்கும்போதே கையிலே சீட்டு. கண்ணைமூடினா குதிரை ரேஸ் ஞாபகம். சதா பெங்களூர் ஞாபகம். சாயங்காலம் ஆனா சாராயம். இனிமேல என்ன வேணும்? வந்த ஒரு வாரத்துக்குள்ளே, ஊரை சுத்திகடன் வாங்கியாச்சு! வழியை விடுங்க... நான் போகணும்.

செல்வமணி : நாலு சுவத்துக்கு மத்தியிலே பேச வேண்டி யதை, நடு வீதியில நின்னு கத்தப் போறியா? விட மாட்டேன். உன்னை வெளியே போக நான் அனுமதிக் கவே மாட்டேன்.

மோகினி : இப்ப நான் நடுத்தெருவுக்குப் போகல! உங்க லதா கிட்டதான் போறேன். உங்க லட்சணத்தைப் பத்தி சொல்லிட்டு, நான் போறேன். அந்த பொண் ணோடவே பேஷா குடும்பம் நடத்திக்கங்க.

செல்வமணி : என்னை விட்டுட்டு போறேன்னு சொல்லு. எனக்கு ஆட்சேபணையே இல்லே. எனக்கு இஷ்டம் இல்லாத பெண்ணோட வாழ சொல்றதுக்கு உனக்கு என்ன உரிமை இருக்கு. போ! இப்ப போ! வெளியே! Nonsense!

மோகினி : நான் போறதுக்கு முன்னே ஒரு வார்த்தை! நான்ஒழுங்கா குடும்பம் நடத்துறேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க...சத்தியம் பண்ணிக் கொடுங்க... சமா தானமா வாழலாம்னு தைரியம் கொடுங்க.

செல்வமணி: உத்தரவாதம் வேணுமா! என்னாலேமுடியாது! நேத்து வந்தவ நீ! எனக்கா நீ ஆர்டர் போடறே!

மோகினி : அதையே நான் திருப்பி சொன்னா, அது நல்லா இருக்காது. இது பெண்கள் வருஷம். எங்களுக்கும் உரிமை உண்டு! பெருமை உண்டு! மரியாதை உண்டு. சும்மா தாலியை கட்டுனதுனால தாண்டிக் குதிச்சா உங்க கால் மட்டும் முறியாதுங்க! நம்ம கல்யாணமே முறிஞ்சு போயிடும்.

செல்வமணி : இப்படி பேசி பயமுறுத்தினா, நான் பணிஞ்சு போயிடுவேன்னு கனவு காணுறியா! என்கிட்ட அது நடக்காது. சீட்டாடுறது என் பொழுது போக்கு. குதிரை ரேஸ்ல பணம் கட்டுறது என் அறிவுக்கு சவால்,

குடிக்கறது எனக்கு அமைதி. கடன் வாங்கி செலவு பண்றது எனக்கு ஒரு Fashion... இதுக்கு ஈடு கொடுத்து வாழ விரும்பினு நீ இரு... இல்லே...ஒடு.

இங்கே பாரு...உனக்காக இந்த வாசற் கதவும் என் இதயக் கதவும் திறந்தே இருக்கும்... நான் டயலாக் பேசுவேன்னு மட்டும் நினைக்காதே! போ! புறப்படு! திரும்பிப் பார்க்காம ஓடு!

மோகினி : வர்றேன் Mr. செல்வமணி

செல்வமணி : என்ன தைரியம்ண்டி? புருஷன் பேரை சொல்றே. உன்னை அப்படியே அடிச்சு (கத்துகிருன்)

லதா : அடிக்காதீங்க மாமா. அடிக்காதீங்க... (கதவு திறக்கும் சத்தம் கேட்கிறது)

செல்வமணி : யாரது?

லதா : நான்தான் மாமா லதா! அம்மா கூட வந்திருக்காங்க. மோகினியை அடிக்காதீங்க பாவம்! Good Evening மாமா.

செல்வமணி : (அதிர்ச்சியுடன்) வா லதா! வாங்க அக்கா! நீங்க எப்ப வந்தீங்க!

லதா : நீ அப்படியே நில்லு. அடிச்சு கொன்னுடுவேன்னு நீங்க சொன்னப்பதான் வந்தோம்! மாமா! சுமார் ஒரு அஞ்சு நிமிஷம்தான் வெளியில நின்னுருப்போம்,

செல்வமணி : உடனே கதவை தட்டிக் கூப்பிடக் கூடாதா?

லதா : தொந்தரவு தர வேண்டாம்னு பார்த்தோம்,

அலமேலு : கோவிலுக்குப் புறப்பட்டோம் தம்பி...

லதா : அந்த கோவிலுக்கு வேண்டாம்னு சொல்லிட்டு, நான்தான் இந்தக் கோயிலுக்கு அழைச்சிட்டு வந்தேன்,

மோகினி : கோயிலா இது...குட்டிச் சுவர்...நான் வர்றேன்.

லதா : கொஞ்சம் இருங்க மோகினி...என் பேர் லதா... இவங்க என் அம்மா, உங்க இவரோட அக்கா...

மோகினி : அது சரி... என் பேரு உங்களுக்கு எப்படி தெரியும்?

லதா : பேரு தெரியும். நேரிலதான் பார்த்தது இல்ல! உங்களைப் பத்தி எனக்கு தெரியாம வேற யாருக்குத் தெரியணும்...

மோகினி : நான் போறேன். இந்த வீடு காலியாதான் இருக்கு!

லதா : வீடுதானே காலியா இருக்கு...மனசு!

மோகினி : எனக்கு எப்பவும் ஒரே மனசு தான் உங்களை சந்திச்சதுல ரொம்ப மகிழ்ச்சி. எனக்கு இப்படி ஒரு சோதனை வரும்னு நான் நினைச்சுகூட பார்க்கல...ம்... தலையெழுத்தை யாரால மாத்த முடியும். நான் வர்றேங்க.

லதா : மாமா! அவங்க போறேன்னு புறப்பட்டுட்டாங்க. போகாதேன்னு சொல்லுங்க மாமா!

செல்வமணி : இது என் தனிப்பட்ட குடும்ப விஷயம். இதுல யாராவது குறுக்கிட்டா, நான் பொல்லாதவனா மாறிடுவேன்.

லதா : இல்லாததுக்கு எல்லாம் பொல்லாதவரா மாறிட்டா, அப்புறம் நல்லதே நடக்காம போயிடுமே! மாமா! மோகினியை மன்னிச்சுட்டு உங்க மனைவியா மறுபடியும் ஏத்துக்குங்க! வாங்க! மோகினி அக்கா.

மோகினி : நான் மாட்டேன், என்னாலே ஒரு நிமிஷம்கூட இந்த வீட்டுலே வாழ முடியாது.

லதா : இதுதான் உங்க முடிவா?

மோகினி : ஆமாம்! இந்த மாதிரி இவரோட, இப்படி தினந் தினம் குடும்ப நாடகம் நடத்த முடியாது.

லதா : கரெக்ட் மோகினி! உங்களாலே தினம் இப்படி நாடகம் நடிக்கவே முடியாது தான். Miss மோகினி. இதுவரை நீங்க நடிச்ச நாடகத்துக்கு கூலி வேண்டாமா? இந்தாங்க 50 ரூபாய்.

மோகினி : (கோபமாக) லதா! என்ன விளையாடுறீங்களா?

லதா : நீங்க மட்டும் என் மாமா கூட சேர்ந்துகிட்டு நடிக்கற மாதிரி விளையாடலாம். ஆனா, நான் மட்டும் உங்கக் கூட விளையாடக் கூடாதா? மோகினி...நீங்க பேசினது 50 ரூபா தான். ஆனா எங்க மாமாவுக்கு மனைவி மாதிரி நடிச்சதுக்கு, 1000 ரூபாகூட தரலாம் என் கிட்ட பணமில்லே, 100 ரூபாதான் இருக்கு. இந்தாங்க.

மோகினி : லதா! என்ன இது!

லதா : மாமா மோகினியை வாங்கிக்க சொல்லுங்க! அம்மா நீங்களாவது சொல்லுங்கம்மா.

அலமேலு : செல்வம், லதா என்னடா சொல்றா...

செல்வமணி : லதா! உனக்கென்ன பைத்தியம் புடிச் சிருச்சா...இதோபாரு! இது என் வீடு. இவ என் மனைவி மோகினி...கல்யாணம் ஆகி ஒரு வாரம் ஆகுது.

லதா : மாமா! எனக்கு நிச்சயம் பைத்தியம் இல்லே மாமா! நீங்க போட்ட சண்டை, பேசின பேச்சு, ஒருநாள் நடத்திய நாடகம் எல்லாம் ரொம்ப சாதாரணம். இதுக்கெல்லாம் பைத்தியம் பிடிச்சா, அப்புறம் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்!

மோகினி : ஏதோ தப்பா நினைச்சுகிட்டு இப்படி பேசுறீங்களா...

செல்வமணி : மோகினி! போய் சாப்பிட ஏதாவது தயார் பண்ணு. அக்கா வாங்க... உட்காருங்க...உள்ளே போ மோகினி.

லதா: மோகினி அக்கா! ஏன் இப்படி தயங்கித் தயங்கி நிக்குறீங்க. ஒரு வாரமா குடும்பம் நடத்துறீங்க! வீடு அப்படியே அழகா இருக்குது. அதுசரி...'இது குடும்பம் நடத்துன வீடுமாதிரியே தெரியலியே. கேவலம், ஒரு கிரசின் அடுப்புகூட இல்லே!

மோகினி: ஓட்டல்ல சாப்புடுறோம். தேவையில்லாம ஏன் அடுப்பு? சமையல்!

லதா: உங்களுக்கு நடிக்கத்தான் தெரியும். சமைக்க தெரியாதுன்னு எனக்கு எல்லாம் தெரியும்...

மோகினி: லதா... (ஆச்சரியத்துடன்)

லதா: ஆமா மோகினி!நீங்க ஒரு அருமையான, திறமையான நடிகை. எப்பவோ ஒரு நாள் நாடகமூலமா பழக்கம் ஆன என் மாமாவின் வேண்டுகோளுக்காக, இப்படி ஒரு சின்ன டிராமா நடிச்சீங்க... நானும் வெளியிலே நின்னு கேட்டுட்டு, வந்த வழியே போயிடுவேன்னு நினைச்சீங்க! இப்ப நானே வீட்டுக்குள்ளேயே வந்துட்டேன். அதனால உங்களுக்கும் ஒண்ணும் புரியலே! அப்படித்தானே!

மோகினி: என்னைப்போல ஆயிரம் பேரு இருப்பாங்க! நீங்க ஆளை தவறு நினைச்சிகிட்டு பேசுறீங்க.

லதா: பேரு ஆயிரம் இருக்கலாம். ஒன்னுகவே இருக்கலாம். ஆனு ஆள் எப்படி இருக்கமுடியும்? நீங்க பேசறது, நடக்குறது நாடக மேடையில செய்யற மாதிரியே தான் இருக்கு.

செல்வமணி: லதா! இப்பவும் நான் சொல்றேன். மோகினி என் மனைவி! என் மனைவி!

லதா: வேண்டாம், திருப்பி திருப்பி, அந்த வார்த்தையையே சொல்ல வேண்டாம்.

செல்வமணி: உண்மைதான்!

லதா: மாமா! உங்களுக்கு டி.பி.ஆரம்பம்னு நர்ஸிங் ஹோம்ல சொன்னாங்க. அதுக்காக என்னை கல்யாணம் செய்துக்க கூடாதுன்னு நீங்க நினைச்சீங்க. நான் இல்லாத நேரத்துல கல்யாணம் நடந்து போச்சுன்னு அக்காளும் தம்பியுமா Act பண்ணினீங்க, நான் வந்த பிறகு, குடும்பம் நடத்தர மாதிரி Act பண்ணினீங்க... ஆனா, நீங்க எதிர்பார்த்த பலன் கிடைச்சு போச்சின்னு நம்புறீங்களா...

செல்வமணி: நான் நம்புறேனோ, இல்லையோ, எனக்கு டி.பி. ஆரம்பம்னு நீ நம்பித்தான் ஆகணும். எனக்கு கல்யாணம் உன்னோட நடந்து, உன் வாழ்க்கையை வீணாக்க விரும்பல. புரியுதா?

லதா: அதனாலேதான் மோகினியோட குடும்ப நாடகம் நடிச்சீங்களா...இல்லே உண்மைன்னு நீங்க சொன்ன மாதிரி...மனைவியா...

மோகினி: லதா....அப்படி இல்லேம்மா! அவர் எழுதிக் கொடுத்தவசனத்தைதான் திரும்பசொன்னேன். என் மனசுல எந்தவித களங்கமும் இல்லேம்மா!

உன்னோட வாழ்க்கை நல்லா அமையனும்னு Mr. செல்வமணி ரொம்ப ஆசைப்பட்டாரு.என்னை பலமுறை கெஞ்சி கேட்டுக்கிட்ட பிறகுதான் நான் சரின்னேன். ஆனா...நடந்ததோ வேற மாதிரி ஆயிடுச்சு. என்னை மன்னிச்சுடு லதா...

லதா: மாமா நீங்க பயப்படுறஅளவுக்கு ஒண்ணும் பயங்கரம் இல்லே, என் Friend, கௌரி எல்லாம் சொன்னு. கொஞ்சம் பத்தியம்...கொஞ்சம் பத்திரமா இருந்தா. அது பறந்தே போயிடும்னு சொன்னு...

செல்வமணி: லதா! (ஆச்சரியத்துடன்)

லதா: உங்களை நான் கோவிச்சுக்க மாட்டேன்மாமா!என் மேலே உங்களுக்கு இவ்வளவு அன்பான்னு பிரமிச்சு போய் நிற்குறேன். அம்மா! அவரை வீட்டுக்கு வரச் சொல்லுங்க.

அலமேலு: நீயே கூப்பிடும்மா!

லதா: ஏம்மா! அக்காளுக்கும் தம்பிக்கும் திட்டம் போடத் தான் தெரியுமா? அவர் வீட்டைவிட்டுப்போக, நீங்க தானே சொன்னீங்க...இப்ப, இப்படி ஒரு நாடகத்தை ஏற்பாடு பண்ணிட்டு, என்னை நைசா அழைச்சிகிட்டும் வந்திங்க! இல்லேம்மா...உங்களை Follow பண்ணி, எல்லாத்தையும் புரிஞ்சுகிட்டேன். பார்த்தீங்களா!

அலமேலு: லதா! நீ இவ்வளவு புத்திசாலியா இருப்பேன்னு...

செல்வமணி: நானும் நினைக்கலேக்கா...

மோகினி: நான் நினைச்சேன்... வெடுக் வெடுக்குன்னு பேசறப்பவே எனக்கு எல்லாம் புரிஞ்சு போச்சு அப்ப நான் வர்ரேங்க...

லதா: இருங்க மோகினி அக்கா! எங்க வீட்டு வரைக்கும் வந்துட்டு போங்களேன்! நீங்க போட்ட சண்டையை எனக்கு இன்னொரு தரம் கேட்கணும் போல இருக்கு.

மோகினி : குறும்புக்காரியா இருக்கியேம்மா!

லதா : எல்லாம் என் மாமா கத்து கொடுத்ததுதான்.

மோகினி : அவர் சரியான ஆள்தான்...

லதா : இல்லேன்னு, உங்களை சம்மதிக்க வச்சிருப்பாரா! அம்மா! இப்ப, கோயிலுக்குப் போவோம். நம்பிக்கை இருந்துட்டா, எதையும் எப்பவும் சாதிக்கலாம். இல்லையா மாமா!

செல்வமணி : ஆமா! ஆமா!

மோகினி : இப்பவே ஆமா ஆமான்னு சொல்றீங்க! கல்யாணம் ஆயிட்டா, ஆமாம் சாமி ஆயிடுவீங்க போல இருக்கே—

செல்வமணி : ஆமா! ஆமா! ஆமா! (சிரிக்கிறார்கள்.)

(திரை)

கீதோபதேசம்

கதை மாந்தர்கள்

லட்சுமி	—	ராகவனின் மகள்
	—	20 வயது
சித்ரா	—	லட்சுமியின் தோழி
	—	20 வயது
ராகவன்	—	லட்சுமியின் தந்தை
		58 வயது
குமார்	—	லட்சுமியின் காதலின்
	—	வயது 25

இரண்டு முரடர்கள்

கீதோபதேசம்

காட்சி 1

இடம் : லட்சுமி வீடு

உள்ளே : லட்சுமி, ராகவன், குமார், கீதா, இரண்டு முரடர்கள்.

லட்சுமி : அப்பா! இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்க! எப்ப பார்த்தாலும் போதும் போதும்னு என்ன அர்த்தம்!

ராகவன் : அடேயப்பா ! நிறைய சாப்பிட்டுட்டேம்மா! போதும்! இதுக்கு மேலே போடாதே! வாய்க்கு ருசியா இருந்தாலும், வயிற்றுக்கு அளவுன்னு ஒன்னு இருக்கு துல்லியா! இன்னைக்கி லட்சுமி, சமைச்ச சாப்பாடு ரொம்ப பிரமாதம்!

லட்சுமி : ஏம்பா பொய் சொல்றீங்க! தினந்தினம் இதையே தான் சொல்றீங்க. இன்னைக்கு என்ன ஸ்பெஷல் செய் திருக்கேன்! ஒன்னுமில்லியே!

ராகவன் : எனக்கு ஸ்பெஷல்னு சொன்னு, அந்த ஒரு சாப்பாடு தாம்மா!

லட்சுமி : மூடு மந்திரம் போட்டு பேசுனது போதும். முதல்ல கைய அலம்புங்கப்பா' இந்தப்பா துண்டு... கைய துடைச்சுக்கங்க. (ராகவன் ஏப்பம் விடுகிறார்)

ராகவன் : இந்த மாதிரி உபசாரமெல்லாம் எத்தனை நாளைக்கும்மா! லட்சுமி! நான் ஸ்பெஷல் சாப்பாடு எப்ப சாப்புடுறது' அதை சொன்னாதானே எனக்கு நிம்மதியா இருக்கும்!

லட்சுமி : கொஞ்சம் விளங்குற மாதிரி தான் சொல்லுங்கப்பா!

ராகவன் : புரியாதது மாதிரி நடிக்குறியேம்மா! நானே வெளிப்படையா சொல்லிடுறேன். இந்த வீட்டுல மங்கல காரியம் நடக்கனும்! நான் மாமனார் ஆகனும்!

லட்சுமி : எனக்கு அதுல விருப்பம் இல்லேப்பா! அது நடக்கவும் நான் இஷ்டப்படலே!

ராகவன் : (பதட்டத்துடன்) ஏம்மா!

லட்சுமி : காரணம்... நீங்க தான்!

ராகவன் : நானா! என்னம்மா புதிர் போடுற! நான் தானேம்மா ஆசைப்படுறவன்...

லட்சுமி : இருக்கலாம். நீங்க ஆசைப்படுறது நடந்துட்டா, அப்புறம் நான் ஆசைப்படுறது நடக்காம போயிடுமேப்பா! நீங்க தினம் இதே கேள்விய கேட்டுகிட்டே இருக்குறீங்க! நான் இன்னைக்கு தீர்மானமா சொல்லிடுறேன். நான் கல்யாணம் செய்துக்காம இருக்கனும்னு தான் விரும்புறேன். அது தான் என் இஷ்டம்.

ராகவன் : படிச்ச பொண்ணு பிடிவாதம் பிடிக்குறது, எதிர்வாதம் பண்றதுன்னு ஆரம்பிச்சுட்டா, நான் என்னம்மா எதுத்து பேச முடியும்.

லட்சுமி : அப்பா! இப்ப பேசுங்க... நான் ஆறு மாசக் குழந்தையா இருக்கும் போதே: என் அம்மா இறந்து போயிட்டாங்க... இல்லியாப்பா...

ராகவன் : (குழப்பத்துடன்) ஆமாம்மா! உன் அம்மா மகா லட்சுமி மாதிரி இருப்பா! ஒரே ஒரு நாள் வந்த விஷக் காய்ச்சல்ல, உன்னையும் என்னையும் விட்டுட்டு, தவிக்க விட்டுட்டு, திடீர்னு போய்ட்டாம்மா ம்... (பெரு மூச்சு விடுகிருர்)

லட்சுமி : அப்பா! அதுக்குப் பிறகு, நீங்க என்னை வளர்க்க எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிங்க...

ராகவன் : ஆமாம்மா! இராப்பகலா தூங்காம உன்னைய வளர்த்தேம்மா! வேலைக்குப் போனாலும் உன் ஞாபகம் தான். என் உயிரை விட மேலா நினைச்சி உன்னை வளர்த்தேம்மா! உனக்கு அம்மா இல்லேங்குற குறையே யில்லாம தானேம்மா நான் வளர்த்தேன்.

லட்சுமி : அங்க தாப்பா நீங்க தப்பு பண்ணிட்டீங்க!

ராகவன் : நானு! என்னம்மா தப்பு பண்ணுனேன்! நீ கண் கலங்காம, மாற்றுந்தாய் தொந்தரவு இல்லாமலே வாழ வச்சிக் காப்பாத்துனேன். உன் மனங் கோணாம, நீ கேட்டதும் எல்லாம் வாங்கித் தந்தேன். என் வாழ்க்கை யையே உனக்காக அர்ப்பணிச்சேனே. அதைத் தான் நீ! இப்ப தப்புன்னு சொல்றியாம்மா!

லட்சுமி : அது மாபெருந் தப்பில்லியாப்பா!

ராகவன் : நீ நினைக்குற மாதிரி அது தப்பு இல்லேம்மா! என் கடமை! என்னோட உரிமை. அது தாம்மா ஒரு தகப்பனுக்குப் பெருமை. புரியுதாம்மா?

லட்சுமி : ஏம்பா! அப்பாவுக்கு மட்டும் கடமை இருக்கலாம். உரிமை இருக்கலாம். அதையே பெருமையா நினைக்கலாம். அதையே உங்க மக செய்ய ஆசைப்பட்டா, படிச்சவ, பிடிவாதம் பிடிக்குறு. எதிர்வாதம் பண்ருன்னு ஏம்பா பேசுறீங்க... உங்க மனசை என்னல் புரிஞ்சுக்கவே முடியலேப்பா!

ராகவன் : நீ பேசுறதையே என்னால் புரிஞ்சுக்க முடியலியேம்மா!

லட்சுமி : சொல்றேன்பா! என்னை கண்கலங்காம காப்பாத்தி படிக்க வச்சிங்க. வேலை வாங்கித் தந்தீங்க... இப்ப நீங்க, வேலையை விட்டு ரிட்டயர்டு ஆகப் போறீங்க... உங்களைத் தனியே தவிக்க விட்டுட்டு, நான் திருமணம் செய்துகிட்டு புருஷன் வீட்டுக்குப் போய்ட்டா, அங்கே போய் என்னால எப்படிப்பா நிம்மதியா வாழ முடியும்!

உங்களை கண் போல காத்துக்கிட்டு, கடைசி வரையிலும் உங்க கூடவே வாழனுங்குறது தாம்பா என்னோட ஆசை!

ராகவன் : உன்னோட ஆசை தவறும்மா! திருமணத்துல தொடங்கி, குடும்பத்திலே கலந்து சங்கமமாகிறது தாம்மா வாழ்க்கை. ஒரு கன்னிப்பெண் தனியா வாழறது நல்லதுல்லேம்மா. உன்னோட கொள்கை சரி. இல்லேம்மா. உலகமும் ஒத்துக்காது.

லட்சுமி : யாரைப் பத்தியும் எனக்குப் கவலையில்லேப்பா... ஆயிரம் பேர் ஆயிரம் பேசட்டும். ஏசட்டும், எனக்கு அக்கறையில்லே! நீங்க தான் எனக்கு தெய்வம். ஆண் துணையே இல்லாம, என்னால தனியா வாழ முடியும். இதைப்பத்தி திருப்பித் திருப்பி நீங்க பேச வேண்டாம்!

ராகவன் : இது தான் உன் முடிவுன்னு சொன்ன பிறகு, நான் பேசி என்ன பண்றது? மனஸ்தாபம் தான் அதிகமாகும். ஆனா, ஒன்னு மட்டும் சொல்றேன்—

ஒரு பெண் தனியா வாழ்ந்துடுவேன்னு சவால் விடுறதுக்கு, அதுக்கு தகப்பனே துணையாயிருந்தானிங்குற பழியை, என் மேல் சுமத்துறே! OK... லட்சுமி... நான் டாக்டர் வீட்டுக்குப் போய்ட்டு வந்துடுறேன். பத்திரமா இரும்மா!

லட்சுமி : சரிப்பா! (லட்சுமி கதவை தாழ்ப்பாள் போடும் சத்தம் கேட்கிறது)

(தனியே பேசிக் கொள்கிருள்)

ஒரு பெண் தனியே வாழ்ந்திட முடியாதோ? வாழ்ந்தே காட்டுறேன். பெரிய திருமணம். —குடும்பம்... சமூகம் (மெதுவாக) அலட்சியமாக (சிரிக்கிருள்) கதவு தட்டப்படும் ஓசை யாரது?

கீதா : கீதா வந்துருக்கேன் லட்சுமி... கதவை திற...

லட்சுமி : கீதாவா வா வா! (கதவு திறக்கும் சத்தம்) என்னடி இந்த நேரத்துல வந்துருக்கே!

கீதா : பாதி ராத்திரின்னு நினைச்சியா... பட்டப்பகல்ல, பனிரெண்டு மணிக்குத்தான் வந்துருக்கேன்...

லட்சுமி . அதுக்கில்லே! வேகாத வெயில்ல வந்துருக்கியே! அதைச் சொன்னேன்.

கீதா : வேற ஒன்னுமில்லே! ரேஷன் கடைக்கு வந்தேன்! பாதி க்யூ தான் நகர்ந்துருக்கு. சாப்பாட்டு நேரம்னு கடையை மூடியாச்சு. தண்ணீர் தாகம் வேறே! தெரியாத வீட்டுல போய் கேட்டா கொடுப் பாங்களோன்னு சந்தேகப்பட்டுகிட்டுதான், உன் வீட்டைத் தேடி வந்தேன்.

லட்சுமி : தண்ணி என்னடி! சாப்பாடே போடுறேன்! வா!!

கீதா : கல்யாண சாப்பாடு போடு. நான் குடும்பத்தோட வந்து சாப்புடுறேன்.

லட்சுமி : வேற பேச்சே உங்களுக்கு கிடையாதா? எப்பப் பாரு! கல்யாணம்! கல்யாணம்!! கல்யாணம்!!! கல்யாணம் பண்ணிக்காம ஒரு பெண் வாழவே முடியாதா?

கீதா : சமூகத்துல ஒரு பெண்ணுக்கு அந்தஸ்து, கல்யாணத்துக்கு அப்புறந்தான் வருது லட்சுமி.

கல்யாணத்துக்கு முன்னே அம்மா அப்பா துணை. கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் புருஷனோட துணை. அப்புறம் தன்னோட குழந்தைங்களோட துணை.

இப்ப உனக்கு புருஷனோட துணைதான் தேவை!

லட்சுமி : துணை வேணும்னு, அது புருஷன் துணையாதான் இருக்கணுமா? யார் சொன்னது! சுத்த ஒன்னும் நம்பர் பைத்தியக்காரத்தனம்.

கீதா : உலகம் புரியாத பொண்ணு இருக்குறியேடி. உனக்கு உறவுகள் எத்தனை தான் இருந்தாலும் கணவன்ங்கற உறவுலதான் அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும்.

லட்சுமி : இல்லேண்ணு...

கீதா : இல்லேண்ணு... சந்தர்ப்ப சூழ்நிலையெல்லாம் உனக்கு எதிராவே அமையும். நீ எத்தனைதான் மனசாட்சிக்கு விரோதமா போகாம, உண்மையா நடந்தாலும், அந்த உண்மையே, உனக்கு உண்மையில உதவி செய்யாது! தெரியுமா?

லட்சுமி : எனக்குதான் என் அப்பா இருக்காரே! என்னோட அப்பாவின் துணையும் நம்பிக்கையும் இருந்தா, எனக்கு அதுவே போதும்.

கீதா : உச்சி வெயில்ல, பனை மரத்து நிழலு எப்படிடி உதவ முடியும்? ஆலமரம் போல நிழல் வேணும்னு, அது கல்யாணத்தின் மூலமாதான் கிடைக்கும். நான் வாழ்க்கையில் பட்ட அனுபவத்தைச் சொல்றேன். வர்ரேன் லட்சுமி. தாகத்துக்கு தண்ணீர் கொடுத்தே... தீர்க்க சுமங்கலியா நீடூழி வாழனும், வர்ரேன்.

லட்சுமி : (தனியே) கதவை திறந்து தண்ணீர் கொடுத்ததுக்கு, கல்யாண உபதேசம் பண்ணிட்டு போறா! பெண்களுக்கு நல்லா புடிச்சிருக்கு புருஷன் பைத்தியம். சே! (கதவை சத்தத்துடன் மூடுகிறாள்).

(கதவு மீண்டும் தட்டப்படுகிறது. படபட வென்ற ஓசை) (கோபமாக) என்னடி கீதா... (குழப்பத்துடன்) யார் நீங்க?

(குமார் ஓடிவந்து தடுமாறி நிற்கிறுன்)

குமார் : (தடுமாற்றம்) எல்லாம் அப்புறம் சொல்றேங்க... என்னை விரட்டிகிட்டு, ரெண்டு முரடனுங்க ஓடி வர்ரானுங்க... அவனுங்க கண்ணுல பட்டுட்டேன்ஞ. கொலையே நடந்துடுங்க. Please! Please!!

சங்கரி : (பதட்டத்துடன்) கொலையா?

குமார் : பயப்படாதீங்க! என்னை பார்த்தாதான் கொலே. இல்லேண்ணு எதுவும் நடக்காது. கொஞ்ச நேரம் உங்க வீட்டுக்குள்ளே ஒளிஞ்சுக்குறேன். Please.

சங்கரி : நீங்க ஏதாவது தப்பு பண்ணிட்டு...

குமார் : Please... எல்லாம் விவரமா... அப்புறம் சொல்றேன்.

சங்கரி : அதோ! அந்த ரூம்குள்ளே போய் ஒளிஞ்சுக்கங்க. நான் இங்கேயே நின்னு சமாளிச்சுக்குறேன்...

(இருவர் வெளியே ஓடி வரும் காலடி ஓசை கேட்கிறது)

ஒரு குரல் : டேய் ராமா! அவன் எங்கேடா போயிருப்பான்? இப்படித் தானே வந்தான், ஒரு வேளை அந்த வீட்டுல நுழைஞ்சிருப்பானு!

இரண்டாம் குரல் : சேசே! அந்தப் பொண்ணுதான் வாசல்லே நிற்குறுளே! அதுக்குள்ளே அவனை மீறி எப்படிடா ஓட முடியும்!

ஒரு குரல் : வாடா! போய் அந்தப் பொண்ணேயே கேட்போம்!

இரண்டாம் குரல் : போடா மடையா! நாம செய்யப் போறதுக்கு சாட்சி வேற இருக்கணுமாடா! டேய்! அங்கே நாய் குலேக்குற சத்தம் கேட்குது.

ஒரு குரல் : ஆமா ஆமா! போய் பார்ப்போம் வா! எதுக்கும் நாம கொஞ்சம் ஜாக்ரதையாவேதான் இருக்கனும். அவசரம் வேணும் வா வா.

(போகும் காலடி ஓசை)

லட்சுமி : (தனியே, மெதுவாக) அடப்பாவிப் பசங்களா! பட்டப் பகல்லயே இவ்வளவு தைரியமா! சட்டம் போலீஸ் எல்லாம் இருந்து என்ன பண்றது? ம்... போய் அந்த ஆளே என்னன்னு கேட்போம்... ஹலோ!

குமார் : (உள்ளிருந்து குரல்) என் பேர் குமாருங்க **Miss.**

லட்சுமி : எங்கே இருந்து பேசுறீங்க... குரல் மட்டுந்தான் கேட்குது. ஆளேயே காணுமே!

குமார் : இதோ இந்த பெட்ல படுத்து, போர்வையால மூடிக்கிட்டு படுத்திருக்கேன்.

லட்சுமி : (கோபமாக) வேற இடமே கிடைக்கலியா உங்களுக்கு? என் பெட் ரூம். அதுவும் என் படுக்கை! என் போர்வைதான் உங்களுக்கு கிடைச்சதா?

குமார் : மன்னிக்கனும் மேடம்! தெரியாம நடந்துடுச்சு...

லட்சுமி : என்ன காரியம் பண்ணிட்டீங்க (குழப்பம்) ஆள் இல்லாத வீட்டில, கன்னிப் பெண்ணோட படுக்கையில...

குமார் : ஆபத்துக்கு பாபமில்லிங்க...

லட்சுமி : உங்களுக்கு ஆபத்துன்னு, அதுக்கு நான் ஏன் பாபத்தை சுமக்கனும்?

குமார் : நானும் ஒரு ஆபத்துக்கு உதவி செய்யப் போயி தான், இப்படி ஆயிட்டேன்.

லட்சுமி : (கோபமாக) என்ன! கதை விடுறீங்களா?...

குமார் : உண்மைதாங்க! ஒரு வாரத்துக்கு முன்னாலெ, சாயங்காலம் 6 மணி இருக்கும். சாலே ஓரமா ஒரு பெரியவர் வந்துகிட்டு இருந்தார். அவர் கையில் ஒரு பை இருந்தது. அதுலெ 5000 ரூபாய் இருந்ததுன்னு அப்புறந்தான் தெரியும். ரெண்டு ரௌடிப் பசங்க அவரை மடக்கி, அந்தப் பைய பிடுங்கப் பார்த்தாங்க... நான் ஓடிப் போயி தடுத்தேன். அதுக்குள்ளே, அந்தப் பெரியவர் ஓடிட்டாரு. நாங்க மூணுபேரும் சண்டை போட்டுகிட்டு இருந்தோம்!

லட்சுமி : அப்புறம் என்ன ஆச்சு?

குமார் : அந்தப் பக்கம் போனவங்க பத்து பேர் ஓடி வந்தாங்க! ரௌடிப் பசங்க ஓடிப் போயிட்டானுங்க. அந்தக் கோபத்துலெதான், என்னை இன்னைக்கு வழி மறிச்சானுங்க...கத்தியை காட்டி கோபமா பேசினானுங்க...நான் பேசுறதுக்குள்ளே கையை ஓங்கிட்டான் ஒருத்தன். நான் தப்பி ஓடிவந்துட்டேன் ஆபத்துல என்னை காப்பாத்துனதுக்கு ரொம்ப தேங்க்ஸ், நான் வர்றேங்க!

லட்சுமி : கொஞ்சம் நில்லுங்க! யாரோ பாவம்னு நீங்க அன்னைக்கி காப்பாத்துனீங்களே! அவர் வேற யாருமில்லே! என் அப்பாதான். அன்னைக்கே என்கிட்ட சொன்னாரு. உங்களை ரொம்ப புகழ்ந்தாரு. யாருன்னு கேட்காமலே ஓடி வந்துட்டேனேன்னு ரொம்பவும் வருத்தப்பட்டாரு!

குமார் : பிரதிபலனைப் எதிர் பார்க்காம செய்யுறதுக்கு பேருதாங்க உபகாரம். நான் உங்ககிட்டேயே வந்து உதவி கேட்டுட்டேன். தப்புங்க. நான் வர்றேங்க.

லட்சுமி : இருங்க அப்பா இப்ப வந்துருவாரு! உங்களைப் பார்த்தா அவர் ரொம்ப சந்தோஷப் படுவாரு!

பக்கத்து வீட்டுல திருடன் புகுந்துட்டா கூட, பார்த்து கிட்டு பேசாம இருக்குற இந்த காலத்துல, உங்களை போல யாருங்க, உயிரை திரணமா மதிச்சு உதவி பண்ணு வாங்க!

குமார் : ஐயையோ!

லட்சுமி : என்னங்க!

குமார் : உங்க படுக்கையில உட்கார்ந்து கிட்டே இவ்வளவு நேரம் என்னை மறந்து பேசிகிட்டு இருக்குறேன்.

லட்சுமி : ஆபத்துக்கு பாபமில்லிங்க...

குமார் ; ஆமாங்க... ஆபத்துக்கு பாபமில்லிங்க...பாபம் எப்படி நமக்கு உதவுது பார்த்தீங்களா! இவ்வளவு நீங்க அன்பா இருப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லிங்க?

லட்சுமி : எதிர்பார்க்காதது தானே எப்பவும் நடக்குது! நீங்க பயந்து கிட்டே ஓடி வந்ததை நினைச்சா, எனக்கு ஒரே சிரிப்பா இருக்குது (சிரிக்கிறுள்)

குமார் : எனக்கும் வெட்கமா இருக்குதுங்க (இருவரும் சிரிக்கின்றனர்) ஒரு பெண்ணோட படுக்கை அறையில, அதுவும் படுக்கையில படுத்திருந்தது எவ்வளவு தப்பு தெரியுங்களா?

ராகவன் : (உள்ளே வந்தபடி) ரொம்ப தப்பு தாப்பா! லட்சுமி! என்ன இதெல்லாம் (கோபமா) நான் இல்லாத நேரத்துல...உன்னோட படுக்கை அறையில...

லட்சுமி : அப்பா...

ராகவன் : பேசாதே! நெருப்பை மடியில கட்டுகிட்டு எத்தனை நாளைக்கு மறைச்சு வைக்க முடியும்? ஒரு நாளைக்கு புகைஞ்சு தானேம்மா ஆகனும்!

குமார் : சார்!

ராகவன் : நீ பேசாதே! உன்னை பார்க்கவே எனக்கு எரிச்சலா இருக்கு! என்ன தைரியம் உனக்கு இருந்தா, பட்டப்பகல்ல இந்த வீட்டுக்கு வந்து, என் மகளோட படுக்கையில உட்கார்ந்து பேசிக்கிட்டு இருப்பே!

லட்சுமி : கொஞ்சம் நிதானமா கேளுங்கப்பா!

ராகவன் : இதுக்கு சமாதானம் செல்லப் போறே! நானும் 'சரிம்மா'ன்னு தலையாட்டனும்...ஏம்மா! இப்படி இரட்டை வாழ்க்கை வாழனும்! இந்தப் பையனைதான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா, நானே நாலுபேர் அறிய ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணி வச்சிருப்பேனே! இப்படி ஏன் என்னையும் உன்னையும் ஏமாத்தி வாழனும்!

லட்சுமி : அப்பா! பேசி முடிச்சாச்சா! இங்கே நிற்குறவர் எனக்கு காதலர் இல்லே! போனவாரம் உங்களை ஆபத்துலயிருந்து காப்பாத்துனவர்...பேரு மிஸ்டர் குமார்.

குமார் : சார்...நான் தான் அன்னைக்கி சாயங்காலம்... ரௌடி...

ராகவன் : ஓகோ! என்னை காப்பாத்துற மாதிரி நடிச்சு, என் பெண்ணோட உறவாட வந்துட்டியா?

லட்சுமி : அப்பா! இது என்ன பேச்சு! அந்த ரௌடிங்க இவரை கொல்ல வந்தப்ப, எதிர்பாராத விதமா இங்கே ஓடி வந்து அபயம் கேட்டாரு! பக்கத்து ரூமை காட்டிப் போகச் சொன்னேன்! பயத்துல, என் ரூமுக்குள்ளே

ஓடி பதுங்கிகிட்டாரு! நடந்தது இதுதான்! நீங்க நினைக்கிற மாதிரி தப்பு எதுவும் நடக்கலேப்பா!

ராகவன் : நான் பார்த்த இதே காட்சியை வேற யாரும் பார்த்திருந்தா...

லட்சுமி : இவ்வளவு ஆத்திரப்பட்டு பேசியிருக்க மாட்டாங்க...நீங்க ரொம்ப தான் வார்த்தையை கொட்டிட்டிங்க!

குமார் : சார்! உங்களை காப்பாத்த வந்தேன்! உங்க உயிரைக் காப்பாத்திட்டேன்! இப்ப, உங்க மக மேலே சந்தேகப்பட்டுட்டிங்க! என்னால, உங்க மானத்தைக் காப்பாத்த முடியலே!

என் உயிரை கொடுத்தா, உங்க மகளோட மானத்தைக் காப்பாத்த முடியும்னு ஒரு நிலைமை வந்தா, நிச்சயம் அதைச் செய்ய தயாராயிருக்கேன். Miss லட்சுமி! என்னை மன்னிச்சுடுங்க! சார். நான் வர்ரேன் சார்...

ராகவன் : Mr. குமார்...நான் ரொம்ப அவசரப்பட்டுட்டேன்.

லட்சுமி : அப்பா! ஆயிரம் பேர் ஆயிரம் என்னைப்பத்திப் பேசலாம்! ஆனா, உயிருக்கு உயிரா வளர்த்த நீங்களே என்மேல சந்தேகப்பட்டுட்ட பிறகு, நான் எப்படிப்பா நிம்மதியா இருக்கமுடியும்! இன்னைக்கி கீதா சொன்னது உண்மை தாம்பா!

ராகவன் : என்னம்மா சொன்ன!

லட்சுமி . நீ எத்தனை தான் மனசாட்சிக்கு விரோத மில்லாம உண்மையா நடந்து கிட்டாலும், அந்த உண்மையே உனக்கு உதவி செய்யாதுன்னு சொன்னு!

ராகவன் : உண்மைதாம்மா! Mr. குமார்! என்னை மன்னிச் சுடுப்பா! உதவி செய்ததுக்கு நன்றி சொல்லாம ஏதேதோ பேசிட்டேன்! என் மகமேலேய அபாண்டமா பழி சுமத்திட்டேன்.

லட்சுமி : அப்பா! இதுவரையிலும் நான் கல்யாணத்தைப் பத்தி உங்கக்கிட்ட பேசலே! இப்ப, நான் கல்யாணம் செய்துகிட்டு தாம்பா ஆகணும்!

ராகவன் : நீ என்னம்மா சொல்றே!

லட்சுமி : நான் இவரையே கல்யாணம் செய்துக்குறதா முடிவு பண்ணிட்டேப்பா! (தாழ்ந்த குரலில்)

குமார் : லட்சுமி! அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வர வேண்டாம்! என்னை யாருன்னு தெரியாமலே இந்த ஒரு முடிவுக்கு வர்ரது நல்லதுல்லே?

லட்சுமி : எப்ப எங்க அப்பா உங்களோட என்னை இணைச்சி பேசிட்டாரோ, அப்பவே என் மானம் போயிடுச்சு! என் மானத்தைக் காப்பாத்த உயிரையே தருவேன்னு இப்பதானே சொன்னிங்க!

குமார் : நிச்சயமா லட்சுமி! நாளைக்கே எங்க அப்பா அம்மாவை அனுப்பி, முறையா பெண் கேட்க வரச் சொல்றேன்! வர்ரேன் லட்சுமி! வர்ரேன் சார்...

லட்சுமி : சாரா...

குமார் : சாரி! மாமா! வர்ரேன் மாமா!

ராகவன் : ஆமா ஆமா! மாமா தான்...

(மூவரும் சிரிக்கின்றனர்)

திரை

சந்தர்ப்பம்

கதை மாந்தர்கள் :

ரவி	—	ஓவியன்
நாராயணன்	—	ரவியின் நண்பன்
சாந்தகுமார்	—	செல்வந்தர்
கலா	—	சாந்த குமாரின் மகள்

சந்தர்ப்பம்

காட்சி 1

ரவிகுமார் வீடு — (டெலிபோன் மணி அடிக்கிறது. ரவிகுமார் பேசுகிருன்.)

ரவி : ஹலோ! ரவிகுமார் பேசுறேன்......

கலா : (போனில் மறுபுறம்) கலா பேசுறேன்......

ரவி : ஹாய்... கலா......சௌக்கியமா?

கலா : ஒகே...உங்களைப் பார்க்கணும் போல இருந்தது. அதனுல தான் போன் பண்ணினேன்...

ரவி : போன்ல பார்க்க முடியாதே கலா...நேரா வந்தா நிச்சயமா பாக்கலாம்......(சிரிக்கிருன்)

கலா : சிரிங்க...சிரிங்க...நல்லா சிரிங்க...இப்படி சிரிச்சு சிரிச்சு தான் என்னை நீங்க ஏமாத்திட்டீங்க...நானும் ஏமாந்து போயிட்டேன்.

ரவி : (பதட்டத்துடன்) ஏமாத்திட்டேனு? கலா! என்ன சொல்றே நீ?

கலா : உங்க ஓவியங்களையெல்லாம் கண்காட்சியில பார்த்துட்டு, உங்களை நேரில் பார்க்க வந்தப்போ... உங்க சிரிப்பையும் பேச்சையும் கேட்டுட்டுத்தான்...

ரவி : போதும்...போதும்...மீதி எனக்குப் புரிஞ்சுப் போச்சு! நானும் பயந்தே போயிட்டேன். கலா...உடனே புறப்பட்டு வாயேன்......உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்?

கலா : அப்படியா? இதோ புறப்பட்டுட்டேன். எங்கேயும் போயிடாதீங்க! நீங்க பெரிய ஆர்டிஸ்ட்......யாராவது வந்து உங்களை அழைச்சுகிட்டு போயிடுவாங்க... போயிட்டா...என்னுல அதை தாங்கிக்க முடியாது.

ரவி : கவலைப்படாம வா கலா...நீ கோடு கிழிச்சா, நான் அதை தாண்டவே மாட்டேன். (சிரித்தபடி ரிசீவரை வைத்துக்கொண்டிருக்கும்போது)

(ரவியின் நண்பன் நாராயணன் உள்ளே வருகிருன்)

நாரா : என்ன ரவி...சிரிச்சுகிட்டே இருக்குறே? தனியா சிரிக்குறது தப்பில்லையா?

ரவி : தனியா ஒருத்தன் பாடலாம்...சிரிக்கக்கூடாதா?

நாரா : எதுக்கும் ஒரு எல்லை உண்டு......சேதியை சொன்னு ...சேர்ந்து சிரிக்க......நான் இருக்கேன்...சொல்லப்பா!

ரவி : அது ஒரு குட் நியூஸ்...அதை முதல்ல என் கலா கிட்டதான் சொல்லணும், அதுக்குப் பிறகுதான் உனக்கு......

நாரா : கலாவுக்கு முன்னேயிருந்து நான் உனக்கு பிரெண்ட்ப்பா...ஞாபகம் இருக்கா?

ரவி : இருக்கலாம்......பூவுக்கு முன்னே இலை இருந்ததுங்க றதுனுலே, இலையை பறிச்சு யாரும் தலையில வச்சிக்கிறது இல்லேப்பா...

நாரா : நான் இலையா இருக்கலாம். ஆனு, உன் நிழலா இருக்குறேன். அதை மறந்திடாதே ரவி......

ரவி : மறக்க மாட்டேன் நாராயணு......நான் பசியும் பட்டினியுமா பரிதவிச்சப்போ......ஒரு சிங்கிள் டீ வாங்கி, நாம இரண்டு பேரும் பகிர்ந்து குடிச்சதை என்னுல மறக்க முடியுமா! ஆனு, கலா கிட்டே...முதல்ல சொல்லணும்னு என் மனசுல பட்டது. அதனுலேதான் அப்படி சொன்னேன். நீ கோவிச்சுக்காதே!

நாரா : ரவி...ரவிகுமார்னு சொன்னு போதும்...பத்திரிகை நிருபர் எல்லாம் பறந்து ஓடிவர்ராங்க. பத்திரிகையில படம் போட்டு பத்தி பத்தியா பாராட்டி எழுதுருங்க. கல்லூரி மாணவர்களுக்கெல்லாம் உன் ஓவியம்னு ஒரே பைத்தியம்! அந்த அளவுக்கு நீ உயர்ந்துட்டே! நான்னு...அதே நிலைமையில அப்படியேதான் இருக்குறேன்! நான் மீறிப் பேச முடியுமா?

ரவி : அப்படி இல்லே...என்னைப் பாரு...எனக்கே ஆச்சரியமா இருக்கு! இந்த அஞ்சு வருஷத்துக்குள்ளே... நான் இந்த அளவுக்கு உயர்ந்து முன்னேறி வருவேன்னு நான் கனவு கூட காணலேப்பா......

நாரா : நான் கனவு கண்டேன்...பலிச்சுட்டது. இந்த புத்தம் புதிய பெரிய பங்களாவிலே நீ குடியிருக்கும் போது, எனக்கு பார்க்க எவ்வளவு பூரிப்பா இருக்கு தெரியுமா! அப்பப்ப வந்து, நான் உன்னைப் பார்த்துட்டு போறதே எனக்கு பெருமையா இருக்கு.

ரவி : தேங்க்யூ...எல்லாம் ஆண்டவனுடை ஆசிர்வாதம்... நாளைக்கு சரியா 4 மணிக்கு வந்துடு. நாம பிறகு பார்க்கலாம். ஓகே...

நாரா : வர்றேன் ரவி...நிச்சயம் வந்துடுறேன். ரவி... ஒண்ணு சொல்றேன் மறந்துடாதே...கலா கிட்டே எண்சாண் மனுஷன் மாதிரியே நிமிர்ந்து நில்லு......ஒரு சாணு குறுகிடாதே......

(சிரிக்கிருன்... ஒலி... குறைகிறது... அவன் போகிருன்)

ரவி : போடா......பைத்தியம்......காதல்ஞ அனுபவிக்கும் போதுதாண்டா அதன் அருமை தெரியும்...கலா...கலா (பெருமூச்சு விடுகிருன்)

(கலா உள்ளே வருகிருள் மூச்சிறைக்க)

கலா : கலா வந்துட்டேன், கவலையோட விடுற பெரு மூச்சை, இனிமே நீங்க கைவிட்டுடலாம் (கேலியாக)

ரவி : ஓடி வந்து நீ விடுற மூச்சு புயலா அடிக்குதே...... கலா... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்க.

கலா : முக்கியமான மனுஷர் கிட்டே, முக்கியமான சேதி கேட்கனுமே......அதுக்குத்தான், இப்படி மூச்சை புடிச்சுக்கிட்டு ஓடி வந்தேன்...

ரவி : ஓடி வந்தியா......தேடி வந்தியா?

(கேலியாக சிரிக்கிருன்)

ஓகே... கலா... நான் சிரிக்கல்லே...நான் முக்கியமான சேதியை சொல்றேன்......

கலா : சஸ்பென்ஸ் போதுங்க... சீக்கிரம் சமாசாரத்தை சொல்லுங்க...

ரவி : நாம ரெண்டு பேரும் அறிமுகமாகி அஞ்சு வாரம் கூட ஆகல்லே...ஆஞ இந்த உலகத்துல நான் அதிகமா விரும்புறது—உன்னைத்தான்......

கலா : இதைத்தான் ரொம்ப முக்கியமான சேதின்னு சொல்ல, கூப்பிட்டீங்களா—ம்ஹூம்......

ரவி : இந்த அஞ்சு வாரமும் எனக்கு அஞ்சு பிறவி மாதிரி தோணுது. நான் என்னையே மறந்திட்டு வாழறேன்...

(சிரிக்கிருன்... ஒலி... குறைகிறது... அவன் போகிருன்)

ரவி : போடா......பைத்தியம்......காதல்ஞ அனுபவிக்கும் போதுதாண்டா அதன் அருமை தெரியும்...கலா...கலா (பெருமூச்சு விடுகிருன்)

(கலா உள்ளே வருகிருள் மூச்சிறைக்க)

கலா : கலா வந்துட்டேன், கவலேயோட விடுற பெரு மூச்சை, இனிமே நீங்க கைவிட்டுடலாம் (கேலியாக)

ரவி : ஓடி வந்து நீ விடுற மூச்சு புயலா அடிக்குதே...... கலா... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்க.

கலா : முக்கியமான மனுஷர் கிட்டே, முக்கியமான சேதி கேட்கனுமே......அதுக்குத்தான், இப்படி மூச்சை புடிச்சுக்கிட்டு ஓடி வந்தேன்...

ரவி : ஓடி வந்தியா......தேடி வந்தியா?

(கேலியாக சிரிக்கிருன்)

ஓகே... கலா... நான் சிரிக்கல்லே...நான் முக்கியமான சேதியை சொல்றேன்......

கலா : சஸ்பென்ஸ் போதுங்க... சீக்கிரம் சமாசாரத்தை சொல்லுங்க...

ரவி : நாம ரெண்டு பேரும் அறிமுகமாகி அஞ்சு வாரம் கூட ஆகல்லே...ஆஞ இந்த உலகத்துல நான் அதிகமா விரும்புறது—உன்னேத்தான்......

கலா : இதைத்தான் ரொம்ப முக்கியமான சேதின்னு சொல்ல, கூப்பிட்டிங்களா—ம்ஹூம்......

ரவி : இந்த அஞ்சு வாரமும் எனக்கு அஞ்சு பிறவி மாதிரி தோணுது. நான் என்னேயே மறந்திட்டு வாழறேன்...

கலா : சொல்ல வந்ததை மறந்துட்டு, ஏதேதோ சொல்றீங்களே......

ரவி : உலகம் முழுவதும் காற்று நிறைஞ்சிருக்குற மாதிரி, என் மனசு பூராவும் நீ நிறைஞ்சிருக்கே...கலா...அதை எப்படி விளக்கமா சொல்றதுன்னே எனக்குப் புரியல்லே...

கலா : என்னே பாக்க வேண்டியது...பார்த்த உடனே சிரிக்க வேண்டியது. போதும்ன்னு சொன்ன, வர்ணிக்க வேண்டியது. வேற வேலேயே இல்லே!...

(சலிப்புடன்)

ரவி : அப்படி இல்லே கலா......இங்கே பாரு...என் மனசுல உள்ளதை எழுதிக் காட்டின அது ஓவியம். அதையே வார்த்தையிலே சொல்லிக் காட்டின அது காவியம்...... புரியுதா?

கலா : அடடே...என்னுடை படத்தை இவ்வளவு அழகா எழுதி இருக்கீங்களே! எப்படி வரைஞ்சிங்க...

ரவி : என் மனசுல உள்ள ஒன் முகம், அப்படியே படத்துல இருக்குது. அவ்வளவுதான்! கலா...அந்த முக்கியமான சேதியை மந்துட்டோமே.!

கலா : சொல்லுங்க...சீக்கிரம்?

ரவி : என்னுடை ஓவியங்களே எல்லாம் எக்ஷிபிஷன்லே பார்த்த ஒரு வெளிநாட்டுக்காரர், என்னே அவர் நாட்டுக்கு இன்வைட் பண்ணியிருக்காரு. நானும் அடுத்த மாதமே வர்றேன்னு வாக்கு கொடுத்துட்டேன்.

கலா : நீங்க மட்டுமா போகப் போறீங்க?

ரவி : கண் இல்லாம முகமா? கலா இல்லாம ரவியா... (சிரிக்கிறன்)

கலா : ரவி...என் மேல நீங்க இவ்வளவு அன்பு செலுத்து நீங்களே...இதுக்கு நான் என்ன கைமாறு செய்யப் போறேன்...?

ரவி : அதுவா? நீ எப்பொழுதும் என் கூடவே இருக்கணும்! வாழ்க்கை பூரா வாழனும், அது போதும்,

கலா ; ஆசையைப் பாருங்க...

ரவி : கலா...சகாரப் பாலைவனமா இருந்தாலும், சமுத்தி ரத்து மத்தியில் ஒரு சிறு படகுல இருந்தாலும், நீ என் கூட இருந்தா—அந்த இடம் தான் எனக்கு சொர்க்கம். வேறு எதையுமே நான் விரும்ப மாட்டேன். ஆமா!

கலா : நாம நினைக்கிறோம்...கடவுள் என்ன நினைக் கிறாரோ...

ரவி : கலா...இவ்வளவு நாள் பழகினேன்...நீ யாரு? உனக்கு உறவு யாரு? அப்பா அம்மா உண்டா? வசதியான குடும்பமா? நீ என்ன படிச்சிருக்கே? இதையெல்லாம் நான் தெரிஞ்சுக்க ஆசைப்படலே...ஏன் தெரியுமா? சின்ன குழந்தை பிரியப்படுற பொம்மை மேல அதுக்கு ஆசை இருக்குமே தவிர, அதோட வரலாற்றை தெரிஞ்சுக்க அது விரும்பறது இல்லே...

கலா : நான் இப்பவே என்னைப் பற்றி எல்லா விபரத்தையும் சொல்லி விடுறேனே! எனக்கும் சொன்ன மாதிரி இருக்கும். உங்களுக்கும் தெரிஞ்ச மாதிரி...சொல் லட்டுமா?

(டெலிபோன் மணி அடிக்கிறது...ரவி பேசுகிறான்)

ரவி : ஹலோ...ரவிகுமார் பேசுறேன். யார் பேசுறது?

சாந்த : நான்...சாந்தமூர்த்தி பேசுறேன்.

ரவி : மன்னிக்கனும்...எந்த சாந்தமூர்த்தின்னு தெரி யல்லே...தயவு பண்ணி கொஞ்சம் விபரமா சொன்னா...

சாந்த : அஞ்சு வருஷத்துக்கு முன்னே, மெரினு பீச்சிலே பார்த்து பேசினேம்...அந்த சாந்தமூர்த்திதான்.

ரவி : ஐயா...நீங்களா? சௌக்கியமா இருக்கீங்களா? இப்ப நீங்க எங்கேயிருந்து பேசுறீங்க...இவ்வளவு நாள் எங்கே இருந்தீங்க...

சாந்த : எல்லாத்தையும் நேரிலே பேசிக்கலாம்; உடனே உங்களைப் பார்க்கணும். வீட்டுக்கு வந்தா பார்க்க முடியுமா?

ரவி : உங்களுக்காக எப்பவும் காத்துக்கிட்டிருக்கேன். நீங்க எப்பவும் வரலாம்.

சாந்த : இப்பவே வர்றேனே—வரட்டுமா?

ரவி : ஓ...தாராளமா! இந்த வீட்டுக் கதவு உங்களுக்காக எப்பவும் திறந்தே இருக்கும்!

சாந்த : தேங்க்யூ......

ரவி : தேங்க்யூ சார்...(டெலிபோனை வைக்கிறன்)

கலா : யார் ரவி போன் பண்ணினு?

ரவி : அவரா...எனக்கு என் வாழ்க்கையிலே ஒரே முறை தான் அறிமுகம் ஆனரு...அந்த அறிமுகத்தினுலே தான் நான் இந்த உலகத்துக்கே அறிமுகம் ஆகியிருக்கேன்!

கலா : கொஞ்சம் புரியும்படியாத்தான் சொல்லுங்களேன்...

ரவி : சொல்றேன் கலா...சொன்னுத்தான் உனக்குப் புரியும்...எனக்கும் கொஞ்சம் ஆறுதலாகவும் இருக்கும், அஞ்சு வருஷத்துக்கு முன்னே நான் பரம ஏழை... அன்றுடம் பசியும் பட்டினியோடு ஒரு குடிசையிலே ஒரு நண்பரோடு ஒண்டுக் குடித்தனம்...ஆனு எனக்கு இருந்த ஓவியத் திறமை...அதை யாரும் பயன்படுத்

தல்லே...என்னுலேயும் பயன் தரும்படியா வெளிப் படுத்த முடியல்லே...

நானும் என் நண்பர் நாராயணனும் தினம் இதைப் பத்தியே பீச்சுக்குப் போய் உக்கார்ந்து, மணிக்கணக்கா பேசுவோம்.

ஒருநாள்...அஞ்சு வருஷத்துக்கு முன்னே...இதே தேதி...இதே நேரம்...நாராயணனும். நானும் பீச்சில உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தோம்.

(திருப்புக் காட்சி)

நாரா : டேய்...ரவி...இந்தாடா வேர்க்கடலே...கடலேயே பார்த்துக் கிட்டே இருந்தா போதுமா...நடக்கவேண்டி யதை யோசிப்போம். என்னேப் பாருப்பா!

ரவி : நாராயணு! ஒரு சந்தர்ப்பம் கிடைச்சா போதும்... இந்த உலகத்துக்கு நான் யார்னு காட்டிடுவேன்.

நாரா : எப்படி? எந்த மாதிரி சந்தர்ப்பம் உனக்கு வேணும்?

ரவி : நான் ஏழையா இருக்கறதுனுலே, என்னுடை ஒவியத் திறமை எடுபடலே. இல்லானே இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்தத் தாய் வேண்டாள்னு பாட்டு உண்டு. அன்னேயே விரும்பலேன்னு அன்னியர்கள் எப்படி விரும்புவாங்க?

நாரா : தெரிஞ்ச கதையை ஏம்பா பேசுறே? அரைச்ச மாவையே அறைக்கிற மாதிரிதான்.

ரவி : ஆமா...என் கையில மட்டும் கொஞ்சம் பணம் இருந் தால் போதும்,

நாரா : ம்...பணம் வந்ததும், பஞ்சு மெத்தை வாங்கி. வயிறு முட்ட சாப்பிட்டுட்டு, காலே நீட்டி படுத்து எட்டுத் தெருவுக்கு கேட்குற மாதிரி குறட்டை விடுவே!

ரவி : டேய்...நான் லட்சியவாதிடா...எனக்கு உழைப்பு தான் மூலதனம்! கிடைக்குற பணம் எனக்கு வழிகாட்டி யாக இருக்குமே தவிர, வாழாவெட்டி ஆக்காது, அவ்வளவுதான்...ம்...இப்ப பசிக்குது. அதுக்கே வழி யில்லே...எட்டாத பணத்துக்குக் கொட்டாவி விட்டா என்ன பண்றது?

நாரா : ரவி... ஒரு பிரெண்டு வர்ரான்... கடன் கேட்டுட்டு வர்ரேன்... நான் வர்ர வரைக்கும் எங்கேயும் போயிட் டாதே... (போகிருன்)

ரவி : போய்ட்டு வா... கடவுளே... என்னுேட திறமையை இந்த உலகத்துக்குக் காட்ட, ஒரு சந்தர்ப்பம் கொடு... நினேச்சபடி வரையக்கூடிய திறமையை நிறைய கொடுத் துட்டு, இப்படி கைகளேக் கட்டிப் போட்டிருக்கியே... நீ செய்யறது நியாயந்தாஞ?

சாந்த : தம்பி ... ரவி ...

ரவி : ரவியா... சார்! யார் நீங்க? என் பேரு உங்களுக்கு எப்படித் தெரியும்?

சாந்த : தெரியும் தம்பி... தினந்தினம் நான் இந்த பீச்சுக்கு வருவேன். உங்க ரெண்டு பேரையும் பார்ப்பேன்!

ரவி : நாங்க பேசறதை எல்லாம் கேட்பீங்களா?

சாந்த : அப்படி இல்லே... ஒரு சந்தர்ப்பம் கொடுன்னு கடவுளே உருகிக் கேட்டே பாரு... அது மட்டும்தான் என் காதிலே பலமாவிழும்! தம்பி, அந்த சந்தர்ப்பத்தை நான் உனக்கு கொடுத்தா நீ ஏத்துக்குவியா?

ரவி : சார்... நீங்க என்ன சொல்றீங்க...

சாந்த : நான் ஒரு பணக்காரன்... எனக்குள்ள பணத்தை எப்படி செலவு பன்றதுன்னு தெரியாம திண்டாடுறவன்! உனக்கோ பணம் வேனும்...

ரவி : அதை தர்ரதுக்கு நல்ல மனசு வேணுமே சார்...

சாந்த : எனக்கு இருக்கு... உன்னோட குறையை நான் நிவர்த்தி பன்றேன், போதுமா?

ரவி : ஐயா... நீங்க என்ன சொல்றீங்க? ஒன்னும் புரியலியே!

சாந்த : பதட்டப்படாதேப்பா... உனக்குத் தேவை பத்தாயிரம் ரூபாய். அதை நான் நாளைக்கே தர்ரேன்...

ரவி : எனக்கு ஜாமீன்தர யாருமே இல்லிங்களே!... என் நண்பன்கூட, கேட்டா, சாட்சி கையெழுத்துப் போடுவான். ஆனு அவன் கிட்ட சல்லிக்காக கூட கிடையாதுங்க!

சாந்த : ஜாமீன் வேண்டாம்... பாண்டு பத்திரம் எதுவும் வேண்டாம்.

ரவி : நான் யோக்கியனு அயோக்கியனுன்னு தெரியாம, என் கிட்ட பணம் தர்ரிங்களே...அது உங்களுக்கு நல்ல தில்லையே!

சாந்தி : உன் மேல முழு நம்பிக்கை எனக்கு உண்டு... நீ முன்னுக்கு வருவேன்னு பரிபூர்ண நம்பிக்கை உண்டு. நீ பெரிய ஓவியரா வரணும். அதுபோதும் தம்பி!

ரவி : ஐயா! நிச்சயமா, நாணயமா, இந்த பணத்தை திருப்பிக் கொடுத்துடுவேன்!

சாந்த : நாளைக்கு நான் இங்கே கொண்டு வந்து தர்ரேன். இதேநேரம், நம்பிக்கையோடு வா! நான் வர்ரேன்.

ரவி : ஐயா! தெய்வமே எனக்கு நேரில் வந்தது மாதிரி இருக்கு...

சாந்த : ரவி. நாளைக்கு உனக்குப் பணம் கொடுத்த பிறகு, அஞ்சி வருஷத்துக்குப் பிறகுதான் வந்து உன்னே பார்ப்பேன்.

ரவி : அதுக்கிடையிலே உங்களை பார்க்க முடியாதுங்களா!

சாந்த : பார்க்கவே முடியாது. நான் உலக சுற்றுப் பயணம் போறேன். ஆனா, இதே தேதி, இதே நேரம், நீ எங்கிருந்தாலும், நானே வந்து உன்னை சந்திப்பேன்.

ரவி : நீங்க எப்ப வந்தாலும், நீங்க கேட்ட உடனே, உங்க பணத்தைத் திருப்பித் தந்துடுவேன்.

சாந்த : கேட்ட உடனே இல்லே... நான் கேட்குறதை மட்டும் நீ தரனும்...

ரவி : என்ன கேட்பீங்க...

சாந்த : உன் சொத்து பூராவையும் கேட்பேன்... இல்லே... ஒரு கப் காபி வேணும்னு கேட்டு சாப்பிட்டுப் போயிடுவேன்:

ரவி : நீங்க எதைக் கேட்டாலும் நிச்சயம் தர்ரேன். இது என்னோட ஓவியத் திறமை மேல சத்தியம் செய்து சொல்றேன்!

சாந்த : இது போதும் தம்பி. (சிரித்தபடி செல்கிறார்).

காட்சி 2

இடம் : ரவிகுமார் வீடு
உள்ளே : கலா, ரவி, சாந்தகுமார்

ரவி : கலா! அன்னக்கி இருந்த ஆர்வத்துல, ஆவேசத்துல நான் வாக்குக் கொடுத்துட்டேன்... மறு நாளே அவர் கொடுத்த பணத்தை மூலதனமா வச்சிதான், நான் இந்த அளவுக்கு முன்னுக்கு வந்திருக்கேன்.

கலா : அவருக்கு ரொம்ப நல்ல மனசுங்க... இப்ப வந்தா, அவர் என்ன கேட்பாரு?

ரவி : என் சொத்து பூரா கேட்பாரு... அதுக்காகத்தான், அவர் பேருக்கே என் சொத்து பூராவையும் ஒரு பத்திரமா எழுதி, பத்திரமா வச்சிருக்கேன். இதோ பார்!

கலா : பணம் போச்சுன்னு என்ன பண்றது?

ரவி : பணம் தானே போகும்? என் புகழும் திறமையும் போகாதே! அவர் எதைக் கேட்டாலும், தர்ரதாக நான் வாக்குத் தந்திருக்கேனே.

(கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது)

சாந்த : சார், ரவி சார்! நான் உள்ளே வரலாமா?

ரவி : கலா! பிளாஸ்குல காபி இருக்கு. நீ போய் இரண்டு கப்புல ஊத்திக் கொண்டு வா. (கதவு பக்கம் திரும்பி) ஐயா. வாங்க! உள்ளே வாங்க! உங்களுக்காகத் தான் காத்துக்கிட்டிருக்கேன்.

சாந்த : சௌக்யமா இருக்கியாப்பா... அஞ்சு வருஷத்துக்குப் பிறகு இப்ப தான் பார்க்குறேன். பணத்திலும், புகழிலும், உடம்பிலும் எல்லாத்திலும் எவ்வளவோ மாற்றம்... நல்லா இருக்கிறியா தம்பி?

ரவி : ஆமாங்க! எல்லாம் உங்க ஆசீர்வாதம் தான். கலா... காபி கொண்டு வாயேன் (கூப்பிடுகிறான்)

சாந்த : யாருப்பா அது? உன்னோட மனைவியா?

ரவி : இல்லீங்க... எங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலே! ... என்னோட வருங்கால மனைவி... கலான்னு பேரு...

கலா! நான் சொல்லலே... என் வாழ்க்கையில வழி காட்டி. ஸ்ரீ சாந்தகுமார்.

சாந்தா : வணக்கம்.

கலா : வணக்கங்க... இந்தாங்க காபி...

சாந்த : காபி வேண்டாம்மா... நான் சாப்பிடுறதுல்லே... இப்ப... இங்கே நான் வந்தது?...

ரவி : நீங்க சொன்ன மாதிரியே, சொன்ன நேரத்துல, சரியா வந்திருக்குறீங்க...

சாந்த : ரவி... நீ சொன்னது போலவே, தந்திடுவேங்கற நம்பிக்கையில தான் நானும் வந்திருக்கிறேன்.

ரவி : அந்த சந்தர்ப்பம் வந்தாச்சுங்களே... இதோ நீங்க தந்த பணம். அதற்குரிய வட்டி...

சாந்த : எனக்கு பணம் வேணும்னு யார் சொன்னது? நான் விரும்பியதைக் கேட்பேன். அதைக் கேட்கத்தான் நான் இப்போ வந்திருக்கேன்.

ரவி : நீங்க எதைக் கேட்டாலும் தர்றதாக அன்னைக்கே சொன்னேன். அதை இப்பவும் மறுக்கலே...எப்பவும் மறுக்க மாட்டேன்...

சாந்த : நான் கேட்ட பிறகு, நீ இல்லேன்னு மறுத்துடக் கூடாது! உன்னுடைய மனசாட்சிக்கு விரோதமா, பொய் சொல்லாம உண்மைய சொல்லணும் ரவி... சொல்வியா?

ரவி : நிச்சயம் சொல்றேன் சார்...சந்தேகமே வேணாம்...

சாந்த : இந்த உலகத்திலே நீ உயிருக்குயிரா விரும்புறது...

ரவி : (தயக்கத்துடன்) நான் உயிருக்குயிரா விரும்புறது...

சாந்த : கலா நீயே சாட்சி...ரவி...தைரியமா சொல்லணும். பணம் தானே நீ விரும்புறது...

ரவி : இல்லீங்க...நான் கலாவைத்தான் உயிருக்குயிரா விரும்புறேன்...

சாந்த : ரவி! என்னப்பா, என்னே இக்கட்டான சூழ்நிலேயில சிக்க வச்சுட்டியே! நீ உயிருக்குயிரா விரும்புறதைத் தானே நான் கேட்கணும்னு வந்தேன்...நீயோ பொண்ணுன்னு சொல்றே! இப்ப நான் இதை எதிர்பார்க்கவே இல்லியே! நான்...என்ன பண்றது? நானும் அதையே தான் கேட்கவேண்டியிருக்குது...

ரவி : சார். நீங்க என்ன சொல்றீங்க?...(பதட்டத்துடன்)

கலா : ஐயா...என்னங்க இது...என்னேயா நீங்க கேட்குறீங்க...?

சாந்த : வேற வழியேயில்லே...இது எனக்கும் ரவிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம்...எனக்கு ஒன்னு வேணும்ஞ, ரவி அதைக் கொடுத்துத்தான் ஆகணும்...

கலா : இதுல நானும் சம்பந்தப்பட்டிருக்கேன்...நான்... நான் முடியாதுன்னு மறுத்தா, உங்களாலே ஒண்ணும் வற்புறுத்த முடியாது! நான் ஒரு சுதந்திரப் பறவை... எனக்கும், அவருக்கும் அன்பைத் தவிர வேறு சொந்தமும் இல்லே, பந்தமும் இல்லே.

ரவி : கலா. கொஞ்சம் பொறுமையா இரு... சார். நான் உயிருக்குயிரா விரும்பற என் கலாவை நீங்க கேட்குறது அவ்வளவு நல்லா இல்லீங்களே!

சாந்த: நல்லா இருக்குது, நல்லா இல்லேங்கறது என்னைப் பொறுத்த விஷயம். உன்னுல நான் கேட்குறதை தர முடியுமா? முடியாதா?...அதை மட்டும் சொல்லு...

ரவி: இதோ பாருங்க... என் சொத்து பூராவையும் உங்க பேருக்கு எழுதி வச்ச பத்திரம்...இதை எடுத்துக்கங்க... என்னை நீங்க முதல்ல பார்த்த மாதிரி... பரம ஏழையாவே போயிடுறேன்...ஆனு, என்னை கலாவோட வாழ அனுமதீங்க...அது போதும்...

சாந்த: நான் இப்போ விரும்புறது உன் பணத்தை இல்லே! இந்தப் பொண்ணைத்தான். முடியாதுன்னு சொல்லிடு, நான் போயிடுறேன்...

ரவி: என்னை தர்ம சங்கடத்துல கொண்டு வந்து நிறுத்திட்டீங்களே...நான் கல்யாணம் செய்துக்கிறதா சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன். அதை எப்படீங்க மீறுவேன்.

சாந்த: அது எனக்கு எப்படி தெரியும்?

ரவி: இதோ...ஓவியம் வரைஞ்சு வரைஞ்சு உயர்ந்த புகழை கொடுத்த இந்த வலது கையை வெட்டி எடுத்துக்குங்க, என் கலாவை மட்டும் கேட்காதீங்க...

சாந்த: கொஞ்சம் பொறு ரவி...கலா...நீயே சொல்லம்மா! நான் வயசானவனு இருக்கலாம். வெறுப்பில்லாம ஒரு முடிவை நீதான் சொல்லணும்...பணம் இல்லேன்னு, இந்த உலகத்துல ஒண்ணுமே இல்லை...பணம் இல்லாதவன் பிணம். தெரியுமா?

கலா: அன்பு இல்லாத யாருமே பிணத்துக்கு சமம். அதுவும் எனக்குத் தெரியும்.

சாந்த : கண்ணுக்கு அழகான கணவன், காசில்லாம இருந்தா, என்ன நடக்கும்? வெறும் அழகு வயிற்றுக்கு சோறு போடாதும்மா. பேசாமே என் கூட வந்துடு!

கலா : இணை பிரியாமே இருக்குற எங்க வாழ்க்கையில குறுக்கிட்டு, இப்படி சோதனை பன்றீங்களே...என்னால ரவியை பிரிஞ்சு வாழ முடியாது.

சாந்த : நீ பிரிய முடியாதுன்னு போதுமா? நீதான் எனக்கு வேணும். ரவி...கலாவை என்கூட அனுப்பு! நேரமாகுது! வாம்மா போகலாம்...

ரவி : சார், ஏன் இப்படி என்னை கொல்றீங்க...என்னை கொன்னுட்டு, என் பிணத்து மேலே, என் கலாவை நடத்தி கூட்டிக்கிட்டு போங்க சார்!

சாந்த : இதென்னப்பா கலா மேல இவ்வளவு பாசம்... இந்தப் பொண்ணு இல்லேன்னு...உலகத்துல வேற பொண்ணே இல்லாமலா போகும்?

ரவி : சார்! ஒரே ஒரு வார்த்தை. தயவு செய்து கேளுங்க. என் வாழ்நாள்ல, ஒரே ஒரு பெண்ணைத்தான் மனைவியா பார்த்தேன். மற்ற பெண்களை எல்லாம் சகோதரிகளாகத் தான் நினைச்சேனே தவிர, வேறு எந்தவிதமாகவும் தப்பாகூட நினைச்சுது இல்லீங்க. மனம் விட்டுப் பழகியது, மனசார நேசிச்சது, மனம் போல வாழலாம்னு கனவு கண்டது எல்லாமே கலாவோடத் தான். கலா இல்லேன்னு...எனக்கு குடும்ப வாழ்க்கை இல்லே...பரதேசி வாழ்க்கை தாங்க, இப்ப சொல்லுங்க! கலாவை நீங்க வேணும்னு கேட்குறீங்களே...இது என்ன சார் நியாயம்?

கலா : அவரை சோதனை பண்ணுனது போதும். உண்மையைச் சொல்லிடுங்கப்பா...

சாந்த : நான் என்னம்மா சொல்றது...நீயே சொல்லும்மா!

கலா : ரவி. அவர் என்னோட அப்பா...நான் அவரோட மகள்...

ரவி : அது புரியுது...அப்புறந்தான் குழப்பமா இருக்குது!

கலா : நான் என் அப்பாவுக்கு ஒரே பொண்ணு! என் அப்பா கிட்ட உள்ள ஏராளமான சொத்துக்கு ஆசைப்பட்டு, எல்லாரும் பெண் கேட்க ஆரம்பிச்சாங்க. ஒருத்தராவது உள்ளன்போட இல்லே. இந்த சமயத்துல தான், நம்ம ரெண்டு பேருக்கும் அன்பு வளர்ந்தது. நான் அப்பாகிட்ட சொன்னேன். சம்மதம் தந்தாரு. அவர் வச்ச டெஸ்ட்ல நீங்க பாஸ் பண்ணிட் டீங்க.

ரவி : சார்...நீங்க ஒரு திட்டத்தோட தான் எனக்கு உதவி செய்தீங்க, இல்லீங்களா?...

சாந்த : அந்த எண்ணம் ரொம்பத் தவறு ரவி... ஊக்கமும் முயற்சியும், உண்மையான உழைப்பும் உள்ளவர்களுக்கு யாருக்கும் தெரியாம இப்படி பணம் கொடுத்து உதவுறது எனக்கு ஒரு பழக்கம். அப்படி அவங்க முன்னேறினு, எனக்கு ஒரு ஆத்ம திருப்தி. அவ்வளவு தான். நான் விரும்பினு, பணத்தை வாங்கிக்குவேன். இல்லேன்னு, அதையே பரிசா கொடுத்து பாராட்டு வேன்.

ரவி : உங்களுக்கு ரொம்ப நல்ல மனசு சார். இதை கேட்டா யாரும் நம்பக் கூட மாட்டாங்க...

சாந்த : நிச்சயமா யாரும் நம்ப மாட்டாங்க ரவி! உன்னை எனக்கு ரொம்ப புடிச்சிருந்தது.

கலா : அதனுலதான், உங்களுக்குத் தெரியாமலே 5 வருஷம் பாலோபண்ணிக்கிட்டு வந்தாரு...

ரவி : எப்படியோ ஒரு சந்தர்ப்பம் கொடுத்து, என்னே முன்னேற வச்சிட்டீங்க...ரொம்ப நன்றிங்க...

சாந்த : இன்னெரு சந்தர்ப்பமும் தர்ரேன். என் பெண்ணேயே உன் கிட்ட ஒப்படைச்சு, நல்ல வாழ்க்கையை தர முடிவு பண்ணியிருக்கேன்...அடுத்த மாசமே கல்யாணம்... அதற்கு அடுத்த நாளே அமெரிக்கா எப்படி?

கலா, ரவி : தேங்க் யூ, தேங்க் யூ.

(இருவரும் சிரிக்கின்றனர்)

சாந்த : இந்த சந்தர்ப்பம் கொடுத்த உங்களுக்கு நான் தானே தேங்க்ஸ் சொல்லணும். வாழ்க. வாழ்க !

(வாழ்த்துகின்ருர்)

— திரை —

பார்வதி விஜயம்

கதை மாந்தர்கள் :

மாதவன்	—	அலுவலக எழுத்தர்
அருணகிரி	—	மாதவனின் நண்பன்
சேதுராமன்	—	மாதவனின் நண்பன்
பரமானந்தம்	—	மாதவனின் மாமனார்
பார்வதி	—	மாதவனின் மனைவி
சிந்தாமணி	—	பார்வதியின் தாய்

பார்வதி விஜயம்

காட்சி 1

இடம் : பார்வதி, மாதவன்.

உள்ளே : மாதவன் வீடு.

மாதவன் : (சற்று உரத்த குரலில்) பார்வதி! பார்வதி இத்தனை முறை கத்துறேனே! உன் காதுலே விழுதா?

பார்வதி : (எரிச்சலுடன்) விழுது, விழுது!

மாத : காதில விழுந்துமா இப்படி கம்முனு இருக்கே!

பார் : நான் கேட்டதெல்லாம் உங்க காதுல விழுந்ததா?

மாத : நீ என்ன கேட்டே! நான் பேசாம இருந்தேன்!...

பார் : ஆகா! ஒண்ணுந் தெரியாத சின்னக் கண்ணு மாதிரி பேசுறீங்களே! பீச்சுக்கு போகலாம்னு கேட்டா பேச்சு மூச்சு இல்லே! சினிமாவுக்கு கூப்பிட்டா, இனிமே நமக்கு எதுக்குன்னு கேட்கறது! சரி, ஓட்டலுக்காவது வாங்கன்னு, நான் என்ன நோட்டா அடிக்கறேன்னு கிண்டல் பண்றது! நீங்க என்னதான் மனசுல நினைச்சுகிட்டு இருக்கீங்க.

மாத : கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கலாமுன்னு நினைச்சுகிட்டு இருக்குறேன்.

பார் : (கோபமாக) ஒரே அடியா போய் ரெஸ்ட் எடுத்துக்கங்க. உங்களுக்கும் எனக்கும் இனி ஒரு நிமிஷங் கூட ஒத்து வராது. நான் என் புறந்த வீட்டுக்குப் போறேன்.

மாத : நீ கோபிச்சுகிட்டு போற அளவுக்கு இங்கே என்ன நடந்துச்சு?

பார் : என்ன நடக்குலே! உங்களுக்கு கழுத்தை நீட்டி பத்து வருஷம் ஆச்சு. என்னே பசியும், பட்டினியுமாத்தான் போட்டு கொன்னீங்களே தவிர, நல்லா வசதியா வாழ என்ன பண்ணுனீங்க! இந்த வீட்டில ஒரு பேன் உண்டா? பட்டு மெத்தை உண்டா? படுக்க கட்டில் உண்டா? அதுவும் வேண்டாம், ஒரு பஞ்சு தலையணை யாவது உண்டா?

மாத : கேட்டாச்சா? இன்னும் பாக்கி இருக்கா?

பார் : கடவுள் வரம் கொடுக்கற மாதிரி, கேட்டாச்சான்னு கேட்குற ஸ்டெயிலே ஸ்டெயில்தான். இங்க வரட்டு ஜம்பமும் வாய் சவடாலும்தான் நிறைய இருக்கு.

மாத : கொஞ்சம் மரியாதை கொடுத்து பேசேன். நான் உனக்கு புருஷன்டி! புரியுதா?

பார் : இதை நீங்க சொல்லித்தான் புரியணுமா? நாலு குழந்தைங்க வீட்டுல லோலோன்னு கத்திகிட்டு அலையுதே... அந்த சாட்சிகள் போதாதா! உரிமைக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே.

மாத : பின்ன எதுலதான் குறைச்சல்னு சொல்லு?

பார் : அடுத்த வீட்டு அருணகிரியை பாருங்க! உங்க மாதிரி அவரும் ஒரு குமாஸ்தாதானே! அவர் வீட்டுல எப்படி எப்படி எல்லாம் வாழுறாங்க பாத்தீங்களா?

மாத : எப்பவும் இக்கரைக்கு அக்கரை பச்சையாத்தான் இருக்கும். அத்திப்பழம் அழகாகத்தான் இருக்கும், அதை புட்டுப் பார்த்தா பூச்சியும் புழுவுமாத்தான் இருக்கும்! அன்னுசிப் பழத்தைப் பாரு! முள்ளும், முரடுமா இருந்தாலும், உள்ளே எவ்வளவு இனிப்பா இருக்குது.

பார் : பேசாதீங்க! வயித்தை பத்தி எரியுது.

மாத : கடல் தண்ணியை கொண்டு வந்து கொட்டினலும் உன் எரிச்சல் அடங்காதுண்ணு எனக்கு நல்லாத் தெரியும்... எங்கே நம்ப குழந்தைங்க...

பார் : எங்க அப்பா வந்திருந்தாரு. அவர் கூட அனுப்பிவச்சுட்டேன். நானும் இப்பவே புறப்படுறேன்.

மாத : ஆபீஸ்ல ஆடிட்டிங் நடக்குது. அங்க சிண்டை பிச்சுகிட்டு கணக்கு பாக்குறேன்... வீட்டுக்கு வந்தா...

பார் : வேட்டியை கிழிச்சுகிட்டு ஓடுங்க! எனக்கென்ன? எப்ப பார்த்தாலும் ஆபீஸ், ஆபீஸ்னு சொல்றீங்களே! ஆபீசையே கட்டிகிட்டு அழுங்க...

மாத : உன்னே கட்டிகிட்டு அழறேனே! இதுக்கே கண்ணீர் பத்தலே...

பார் : கடலுக்குள்ளே இறங்கி அழுங்க! கண்ணீர் வத்தாது. என்னங்க கதையா விடுறீங்க. என்னோட தேவை என்னன்னு தெரிஞ்சு நடந்துக்க ஒரு இங்கிதம் தெரியல... இடக்கு மடக்கா மட்டும் பேச தெரியுது.

மாதவன் : சரி பாயிண்டுக்கு வா ! உன் தேவை என்ன?

பார்வதி : விற்குற விலைவாசியில நீங்க வாங்குற சம்பளம் பத்து நாளைக்கு கூட வரலே!

மாத : இது தெரிஞ்ச கதைதானே... சரி மேலே போ...

பார் : நான் மேலே போயிட்டா, நீங்க வேறொருத்திமை கட்டிக்கலாமுன்னு தான் இந்த கலாட்டாவெல்லாம் பண்றீங்களா?

மாத : வெறுப்பு வந்துட்டா எப்படி பேசினாலும் திருப்பித் தாக்குறதுக்குப் பெண்கள் போல் யாராலுமே முடியாது! சரி மேலே விஷயத்தை சொல்லுன்னு சொன்னேன்.

பார் : திருப்பி திருப்பிச் சொல்ல நான் என்ன டேப் ரிக்கார்டரா? நல்லா கேட்டுக்கங்க... நான் பிறந்த வீட்டுக்குப் போறேன் நான் கேட்ட நகை, நட்டு, பண்ட பாத்திரம் எல்லாத்தையும் சம்பாதிச்சுகிட்டு வந்து என்னை கூப்பிடுங்க... திரும்பி வர்ரேன். உங்களாலே வாங்க முடியலேன்னு விட்டுடுங்க. நிம்மதியா நான் எங்க வீட்டுல வாழறேன்.

மாத : இது தான் உன் முடிவா?

பார் : ஆமா! ஒரு நாளைக்கு வாழ்ந்தாலும் நிம்மதியா வாழணும். இப்படி ஏக்கப்பட்டு பட்டு வாழறதுல என்ன பிரயோஜனம்?

மாத : சரி புறப்படு

பார் : போக சொல்றீங்களே! உங்களுக்கு கல் நெஞ்சம்.

மாத : புறப்படச் சொன்னது உன்னை இல்லே... என்னைத் தான்! நீ சொன்ன மாதிரியே, அடுத்த வீட்டு அருணகிரி அசந்து போற மாதிரி சம்பாதிக்குறேன். உன்னை வந்து கூப்புடுறேன்... போதுமா...

பார் : ஏதோ எல்லாத்தையும் வாங்கிகிட்ட மாதிரி போதுமான்னு கேட்குறீங்க! சரி! நீங்க சொன்னதே போதும். எனக்கு பஸ்ஸுக்கு நேரமாச்சு.

மாத : பார்த்து போ... பத்திரமா இரு... பெஞ்சாதி அருமே இல்லேன்னு தான் தெரியும்... புருஷன் அருமை

உனக்கு இப்ப புரியலே! போன பிறகுதான் தெரியும். புறப்படு... கடவுள் நிச்சயம்கண் திறப்பாரு... பாரு... பாரு!

மார் : பாரு... பாருன்னு பேரைச் சொன்னாலும், பார்க்கச் சொன்னாலும் என் மனசு மாறுது... வர்ரேன்.

(போகிறான்)

காட்சி 2

இடம் : மாதவன், அருணகிரி, சேதுராமன்

உள்ளே : கடற்கரை.

அருணகிரி : மாதவா! என்னப்பா கடல்ல அலைகளையே பார்த்துகிட்டு இருக்குறே... கரையில எத்தனையோ மனிதத் தலைகள் உலவுதே... அதுகளைப் பார்க்கலியா!

மாது : உள்ளத்துல எண்ண அலைகள் உயிரை எடுக்கும் போது, வேடிக்கை என்னப்பா வேடிக்கை! மனுஷர் களை பார்க்குறப்ப எல்லாம், எனக்கு எரிச்சல் தான் வருது.

சேதுராமன் , காய்ச்சல்காரன் வாய்க்கு எதுவும் கசக்கத் தான் செய்யும். அதுக்காக சாப்பிடாமலே இருக்க முடியுமா? உன் மனைவி கோவிச்சுகிட்டு ஊருக்கு போயிட்டா, அதுக்காக உலகத்தையே வெறுக்க முடியுமா? கவலையை விடப்பா...

மாதவன் : மனுஷர்களுக்கு ஆசைன்னு இருக்குற வரைக்கும், இப்படி அவஸ்தைகள் வந்துகிட்டுதான் இருக்கும். சம்சார சாகரம்னு சரியாத்தான் சொல்லி இருக்காங்க. நான் நல்லா சாகறேன்.

அருணகிரி : சாகரத்துல குளிக்கறதுக்கும் சாகசம் தெரிஞ் சுருக்கணும்பா... சின்ன அலை வந்தா தாண்டிக்கனும்!

பெரிய அலையா வந்தா அலைக்குள்ளே முழுகிக்கணும். அப்பதான் குளிக்க முடியும்.

மாதவன் : புரியலியே !

சேது : குடும்பக் கடலிலே மனைவிகிட்டே இருந்து கஷ்டங்ற சின்ன அலை வந்தா சமாளிச்சுக்கணும்.

மாதவன் : எனக்கு மாதிரி பெரிய அலையா வந்தா?

அருணா : நிலையையே மாத்திக்கணும்.

மாத : புரியும்படியா சொல்லுப்பா.

சேது : துன்பத்தை முதல்ல துவைக்கணும். அப்புறம் தொலைக்கணும். இந்த மாதிரி கஷ்டம் உனக்கு எப்படி வந்தது? முதல்ல அதைச் சொல்லு.

மாத : எல்லாம் இவனால தான் வந்தது!

அருணா : என்னப்பா என்னைச் சொல்றே...கல்யாணம் ஆச்சான்னு கேட்டா, உன் வீட்டுல பெண் இருக்கான்னு கேட்ட கதை மாதிரி இருக்கே!

மாத : உண்மைதாம்பா...நீ வசதியா இருக்கிறேன்னு தானேப்பா என் சம்சாரம் என்கிட்ட சண்டைப் போட்டுக்கிட்டு ஊருக்குப் போயிட்டா! அதுசரி! இவ்வளவு வசதி உனக்கு எங்கேயிருந்து வந்தது?

சேது : அவன் அதிருஷ்டக்காரன். வசதியா வாழறான். ஏண்டா உனக்கு இந்த ஆராய்ச்சி?

அருணா : சேதுராமா! உனக்குதான் சுண்டல் வாங்கி தந்திருக்கோமே! சுண்டலை திங்காம கிண்டலா பண்றே!

சேது : சரிப்பா...காசிக்குப் போயும் கர்மம் தொலையாத மாதிரி, கடற்கரைக்கு வந்தும் கஷ்டத்தைப்பத்தியே பேசுறீங்களே....நான் வர்ரேம்பா...

அருணா : ஆளை விடுப்பா...அனந்த கோடி நமஸ்காரம்.

சேது : நாளைக்கு ஆபீஸ்க்கு வாங்க. பேசிக்குறேன். வர்ரேம்பா, வர்ரேன்!

(போகிறான்)

மாது : சே! காலம் நேரம் தெரியாம கழுத்தை அறுக்கிறான் பாவி... அருணகிரி நீ சொல்லுப்பா! உனக்கு எப்படி இவ்வளவு வசதி வந்தது?

அருணா : என் மனைவி அவ பெற்றோருக்கு ஒரே பொண்ணு! நான் எங்க அப்பா அம்மாவுக்கு ஒரே பையன். ஏற்கனவே கொஞ்சம் வசதி. இரண்டு வீட்டு சொத்தும் எங்களுக்குத்தானே!

மாது : உண்மையிலேயே நீ கொடுத்து வச்சவன்தான், அருணகிரி! எப்பவும் ஏழை வீட்டுல முதல் குழந்தை யாகவும், பணக்கார வீட்டுல கடைசிக் குழந்தை யாகவும் பிறக்கவே கூடாதுப்பா!

அருணா : ஏன்?

மாது : ஏழை வீட்டுல பொறந்த மூத்தக் குழந்தை தலையிலதான் குடும்ப பாரம் அத்தனையும் விழும். அதே மாதிரி, பணக்கார வீட்டுல கடைசி குழந்தையா பிறந்தா, முன்னே புறந்ததெல்லாம் ஆடி அடங்கிட்டு, கடைசி குழந்தையை கஷ்டப்பட வச்சிடுங்க...

அருணா : அது சரி! இதெப்படி உனக்கு பொருந்தும்?

மாது : நான் என் அப்பாவுக்கு முதல் குழந்தை. என் மனைவி அவ குடும்பத்துல ஏழாவது பெண் குழந்தை.

அருணா : ஐயோ! பாவம்.

மாது : அவ வாழ்க்கையில் பட்ட கஷ்டத்தைதாம்பா இஷ்டம் போல என் மேல கொட்டி தீக்குறு...நானும்

பட்டு பட்டு அனுபவிக்கறேன். எவ்வளவு பணம் வந்தாலும் அவளுக்கு நிம்மதி இல்லே...என்ன பண்றது.?

அருணா : இதுக்கு ஒரு வழி பண்ணியாகனும்! எழுந்திரு! மணல்ல படுத்திருந்தது போதும்.

மாத : என் வாழ்க்கைதான் படுத்து போச்சேப்பா!

அருணா : எழுந்திரு! மணலே தட்டி விழுடுற மாதிரி, மனசுல உள்ள கவலேகளே எல்லாம் தட்டி விடு. நான் வழி சொல்றேன்.

மாத் : என்ன வழிப்பா!...

அருணா : உன் wifeக்கு கடுதாசி போட்டு, வரவழைச்சுடு.

மாத : இந்த முப்பது நாளா முள்ளு மேல இருந்த மாதிரி இருந்தேன். இப்ப அவளே வரச் சொல்லி...

அருணா : எதுக்கும் ஒரு முடிவு வேண்டாமா...? லெட்டரை எழுதி போடப்பா. அப்புறம் பேசிக்கலாம்!

மாதவன் : என்னப்பா! தெரிஞ்சிருந்தும் தேன் கூட்டில கல்லெடுத்து போடுறியே! வெய்யில் காலத்துல காற்றோட்டமில்லாத அறைக்குள்ளே படுத்துகிட்டு கொசு கடியில அவஸ்தை படுறமாதிரி, நான் அவஸ்தை பட்டுகிட்டே இருக்கேன்!

அருணகிரி : உனக்கு தேவை பேன், மெத்தை, பிரஷ்ஷர் குக்கர், இத்யாதி இத்யாதி...

மாதவன் : ஆமா, ஆமா! உன்னே நம்பித்தான் எழுத போறேம்பா! தேளுன்னு சொன்ன பிறகும் கொடுக்கை காட்டுன்னு கையவைக்குறது நல்லதில்லேப்பா! அவ ஒரு முடிவோட போயிருக்கா! இங்கே வந்து ஏமாந்தா...என் கதி என்ன ஆகும் தெரியுமா?

அருணகிரி : கண்ணகி மதுரையை எரிச்ச மாதிரி, உன் மனைவி உன்னை எரிக்காம நான் பாத்துக்கறேன்!

மாதவன் : சரி! தலைவிதி யாரை விட்டது! படனும்னு இருக்கும் போது என்ன பண்றது. கூப்புடுறேன். நமோ பார்வதி...நமஹ...(அருணகிரி சிரிக்கிறான்)

காட்சி-3

உள்ளே : பார்வதி, மாதவன், பரமானந்தம், சிந்தாமணி, அருணகிரி

பார்வதி : (ஆவலுடன் பார்த்தவாறு பேசுகிறாள்) ரேடியோ, பேன், பிரஷ்ஷர் குக்கர், பட்டு மெத்தை, வெள்ளி பாத்திரங்கள், லைட்டுல பார்த்தா ஜொலிக்குதே!அலாவுதீன் பூதம் கொண்டு வந்த மாதிரி இவ்வளவையும் எங்க வீட்டுக்காரர் வாங்கியிருக்கார்... பார்த்தீங்களாப்பா! அப்பா பார்த்தீங்களா!

பரமானந்தம் : பார்த்தேம்மா! பார்வதி! என் மருமகனுக்கு இவ்வளவு சாமர்த்தியம் இருக்குன்னு இப்பதாம்மா தெரியுது!

பார்வதி : எல்லாம் என்னாலதாம்பா!நான் சொல்லலேன்னா இதெல்லாம் எப்படி வரும்! அனுமாருக்கு விஸ்வரூபம் எடுக்க முடியும்னு, ராமர் சொன்ன பிறகுதான் தெரிஞ்சதாம்!

மாதவன் : ஆனந்தம் வந்துட்டா என்னை அனுமார்னு சொல்லுவே! ஆந்தைனு கத்துவே! எல்லாம் உன் இஷ்டம்தான்.

பரமானந்தம் : பாரு! நானுந்தான் 40 வருஷமா முயற்சி செஞ்சேன். என்ன புண்ணியம்? இருந்த சொத்

தெல்லாம் இறக்கை கட்டி பறந்து போச்சே ஒழிய, என்னுலே ஒரு பீரோ கூட வாங்க முடியலே! பாவம் உங்க அம்மா...

சிந்தாமணி : இருக்குற வீட்டை கூட வித்து, எல்லா பொண்ணுக்கும் கல்யாணம் பண்ணி வச்சிட்டு, கடைசியில வாடகை வீட்டுல குடியிருக்க வச்சீட்டீங்க! ஏழரை நாட்டு சனியன் வேற எங்கேயும் போகாம உங்க தலையில உட்கார்ந்துகிடுச்சு. என்ன பண்றது? எல்லாம் என் தலை எழுத்து.

பரமானந்தம் : சிந்தாமணி! கொஞ்ச நேரம் கண்ணீர் சிந்தாம சும்மா தான் இரேன்! மருமகன் வீட்டுக்கு வந்து கூட உன் மயானகாண்ட ஒப்பாரியை விடலியே! உனக்கு சிந்தாமணின்னுபேர் வச்சதுக்கு பதிலா, சந்திர மதின்னு வச்சிருந்தா, ரொம்பா பொருத்தமா இருக்கும்.

சிந்தாமணி : நல்லவேளை...நீங்க அரிச்சந்திரனு இல்லாம போயிட்டீங்க, இல்லேன்னு நீங்க வீட்டை வித்தமாதிரி என்னையும் வித்து சாப்பிட்டு இருப்பீங்க. என் அதிர்ஷ்டம்தான்!

பார்வதி : அடடா...அப்பா...அம்மா. (கோபமாக)சண்டை போடுறதுன்னு உங்க ரெண்டு பேருக்கும் சர்க்கரை பொங்கல் மாதிரிதான். நான் இன்னிக்குதான்கொஞ்சம் சந்தோஷமா இருக்கேன். அது உங்களுக்கு பொறுக் கலியா! எங்க வீட்டுக்காரரை நாலுவார்த்தை சொல்லி பாராட்டத் தெரியலே. உங்க பட்டி மன்றத்தை ஆரம்பிச்சிட்டீங்களே!

பரமானந்தம் : அப்படி சொல்லும்மா...உன்னை மாதிரி உங்க அம்மா, உங்க அம்மா மாதிரி நீ, தாயை போல பிள்ளை!

சிந்தாமணி: சரிதான் வாங்க! போய் பேரக் குழந்தைகளைப் பார்த்துக்குவோம். பார்வதி! ஏதாவது வேணுமுன்னு கூப்பிடும்மா, வந்துடறோம். (போகிறார்கள்)

பார்வதி : ஏங்க! நீங்க எப்போ இவ்வளவு சமர்த்தா மாறினீங்க (குழைவு).

மாதவன் : நீ என்னை விட்டுட்டு போனப்புறம்தான்.

பார்வதி : பார்த்தீங்களா! என்னை மறுபடியும் போகச் சொல்றீங்களே! நான் போறேங்க!

மாதவன் : அதுக்கில்லே பார்வதி! நீ என் கூட இருக்குற வரைக்கும் சண்டை போடவும், சமாதானம் செய்யவுந் தான் நேரம் இருந்தது. நிதானமா யோசிக்க நேரமே கிடைக்கலியே அதை சொன்னேன்.

பார் : கட்டுன புருஷனே கரிச்சு கொட்டுற அளவுக்கு நான் பொல்லாதவளா இருந்துருக்கேன். அப்படி இருந்த துனலே தானே, இவ்வளவு சாமான்களையும் சேர்க்க முடிஞ்சது. பணம் பத்தும் செய்யுங்க.

ஏங்க... நீங்க எப்படி சம்பாதிச்சீங்கன்னு சொல்லவே இல்லீங்களே?

மாத : அதா... கொஞ்சம் பொய் சொன்னேன். கூசாம லஞ்சம் வாங்கினேன். கைமறவா கமிஷன் வாங்கினேன். அவ்வளவு தான்!

பார் : ஏதோ மர்ம கதையை படிக்குற மாதிரி இருக்குங் களே! இன்னும் கொஞ்சம் புரியும்படியா எங்களுக்கு சொல்லுங்களேன்!

மாத ; உத்தியோகம் வேணுமுன்னு எத்தனையோ பேர் அலையறாங்க! பரீட்சையில் பாஸ் பண்ணனும்னு எத்தனையோ பேர் பறக்கறாங்க! உத்யோக மாற்றல் வேணும்னு எத்தனையோ பேர் தவிக்கறாங்க! அவங்க

எல்லோரையும் தேடி பிடிச்சேன்! காரியத்தை முடிச்சேன். கத்தை கத்தையா கையில்நோட்டு! எப்படி?

பார் : அடேயப்பா! எனக்கு சந்தோஷம் தாங்க முடியலேங்க! இப்படி...ஏங்க! நீங்க இன்னும் ரெண்டு வருஷம் விடாம சம்பாதிச்சா?

மாத , எட்டடுக்கு மாளிகை! இம்பாலா கார்! எல்லாத்திலேயும் ஏர் கண்டீஷன் எப்பவும் இருக்க, இன்பமான வாழ்க்கை வாழலாம்.

பார் : சொல்லாதீங்க! செஞ்சு காட்டுங்களேன்! பத்தாத சம்பளம் வாங்கிகிட்டு வந்து, பசியும், பட்டினியுமா வாழ்ந்த வாழ்க்கை போதும் ; கடவுளே ! இனி இப்படியே வாழறதுக்கு கண் திறப்பா! என் மனசு குளிர்ந்து போச்சு!

மாத : பார்வதி ! இன்னும் கொஞ்சம் சம்பாதிச்சுட்டு, வேலையை விட்டுட்டு, வீட்டோட இருந்து ஓய்வு எடுத்துக்கலாமுன்னு இருக்கேன்!

பார் : ராஜா மாதிரி இருங்க! ராஜ உபசாரம் நான் செய்யுறேன்.

மாத : நிம்மதியா சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு வா! போகலாம்!

அருண : (வந்து கொண்டே) மாதவா ! நானும் சாப்பிட வரலாமா!

மாத : வாப்பா அருணகிரி! நான் வாங்குன பொருள்களை யெல்லாம் வந்து முதல்ல பாரு! அப்புறம் சாப்பிட போகலாம்.

அருண : இந்த லெட்டரை முதல்ல படி! அப்புறம் பேசலாம்.

மாத : என்னப்பா இந்த நேரத்துல லெட்டர்.?......

அருணா : ஆபீஸ்ல இருந்து பியூன் பெரியசாமி கொண்டு வந்தான். நான் வழியில பார்த்தேன். வாங்கிகிட்டு வந்தேன்.

மாத : ஏம்பா...ஒரு வேலை பிரமோஷன் ஆர்டரா யிருக்குமோ

பார் : சூப்பிரண்டு வேலை வருமுன்னு சொன்னீங்களே, அந்த ஆர்டரா?. கொடுக்கற தெய்வம் கூரையைப் பிச்சுகிட்டு கொட்டுது.! என்னங்க, பார்த்தீங்களா! எல்லாம் என் அதிர்ஷ்டம்தான்!

மாத : பார்வதி! எல்லாம் உன் அதிர்ஷ்டம்தான்! இருந்த வேலையும் போச்சுடி!

பார் : (பதட்டத்துடன்) என்ன சொல்றீங்க!

மாத : என்னை வேலையிலிருந்து சஸ்பெண்ட் பண்ணி யிருக்காங்க.

அருணா : சஸ்பெண்டா...லெட்டரை இப்படி கொடு. (பதறுதல்)

பார் : அந்த லெட்டரை கொஞ்சம் படியுங்களேன்.

அருணா : (படிக்கறான்) Mr. மாதவன்! உங்கள் மேல் பல லஞ்சப் புகார்களும், ஊழல் குற்றச் சாட்டுகளும் அடங்கிய பட்டியல் கிடைக்கப் பெற்றதால், உங்களை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி இருக்கிறோம். சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. லஞ்ச ஊழல் அதிகாரி இன்னும். கொஞ்ச நேரத்தில் உங்கள் வீட்டுக்கு வர இருக்கிறார், வீட்டிலே இருக்கவும்.

பார் : என்னங்க இது! இடி மேல் இடியா விழுதே...

மாத : ஆமா பார்வதி! இடி மேல இடிதான். என் வேலையும் போச்சு. மானமும் போச்சு. வீதியில

விலங்கோடு போய், கோர்ட்டுல நின்னு, கைதியா மாறி கம்பி எண்ணப் போறேன்...என் குழந்தை களோடு நீ நடுத் தெருவில நிக்கப் போறியே!

(அழுதல்)

பார்வதி : அற்ப சுகத்துக்கு ஆசைப்பட்டேன், உருட்டி முழிக்கப் போய் உள்ள முழியும் நொள்ளையாய் போச்சே! ஏங்க! இதிலிருந்து தப்பிக்க வேற வழியே இல்லையா?

அருண : கோர்ட்டுல போய் எதிர் வழக்காடணும்!

பார்வதி : இந்தாங்க, எங்கிட்டே இருக்குறது இந்த் தோடும், மூக்குத்தியும் தான். இதை வித்தாவது என் கணவரை காப்பாத்துங்க (அழுதல்)

அருண : கேஸ் ரொம்ப பெரிசும்மா! லஞ்ச ஊழல், மோசடி வழக்கு. குறைஞ்சது 10 வருஷமாவது தண்டனை கிடைக்கும்,

பார்வதி: (சத்தம் போட்டு அழுகிருள்.) அப்பா, அம்மா. இங்கே வாங்களேன்!என் நிலைமையைப் பார்த்தீங்களா!

(உள்ளே பேச்சுக் குரல் உள் அறையிலிருந்து)

சிந்தா : என்னங்க! பார்வதி அழற சத்தம் போல இருக்கு.

பரமா : போடி. உன் மகளுக்கு மெதுவா பேசவும் தெரி யாது. அழவும் தெரியாது. ஏதாவது குடும்ப சண்டையா இருக்கும். இங்கே பேசாம இரு!

சிந்தா : இல்லீங்க. வாங்க போய் பார்க்கலாம்!

(வருகின்றனர்)

பார் : என்னை மன்னிச்சுடுங்க.

மாத : பார்வதி! நான் உன்னை மன்னிச்சுடலாம். நான் செய்த தப்புக்கு மன்னிப்பே கிடையாதே!

பார் : புருஷனோட வருமானத்துக்கு ஏற்ற மாதிரி பொறுப்பா குடும்பம் நடத்தறவதான் உத்தம பொண்ணுன்னு எங்க அப்பா அடிக்கடி சொல்வாரு! எனக்கு இப்ப புத்தி வந்திடுச்சுங்க.

அருணா : கண் போன பிறகு சூரிய நமஸ்காரமா?

பார் : எனக்கு பணமே வேண்டாங்க. இது சத்தியம். சத்தியம்!

பரமா : என்னம்மா பார்வதி! சத்தியம் பண்ணிக்கிட்டு இருக்கே!

பார் : அப்பா! பணம் பணமுன்னு பேயா திரிஞ்சேன். பகல்னு ராத்திரின்னு பாராம அவர்கூட சண்டை பிடிச்சேன். இப்ப, என் குடும்பமே குட்டிச் சுவராயிடும் போல இருக்கே.

பரமா : உனக்கு இந்த நிலைமை வந்திடுச்சே. என்ன பண்றது?

பார் : அப்பா! என் கணவர் கிடைச்சா போதும். இந்த மாதிரிபொருளுக்கும் பணத்துக்கும் நான்ஆசைப்படவே மாட்டேம்பா!

பரமா : அப்படியா! ரொம்ப சரி Mr. அருணகிரி! உங்களுக்கு ரொம்ப நன்றி. உங்கப் பொருள்களையெல்லாம் நீங்க இனிமே எடுத்துகிட்டு போகலாம்.

சிந்தூ : ஆளுக்கு ஒரு பொருளா எடுத்தா, அஞ்சு நிமிஷத்துல அப்புறப் படுத்தி விடலாம். வெளியே வண்டி நிற்குது.

பார் : என்னப்பா சொல்றீங்க? (தடுமாற்றத்துடன்)

பரமா : பார்வதி! உன்னோட பணத்தாசையை குறைக் கணும், புருஷன் கூட சண்டை போடுறதை மறக்க

வைக்கணுங்கறதுக்காக, நாங்க மூணு பேரும் செஞ்ச ஏற்பாடு.

மாத் : இதோ பாரு. இந்த சாமான் எல்லாம் அருணகிரி யோடதுதான். சும்மா கொண்டு வந்து அடுக்கி வச்சேன்.

பரமா : இந்த ஆபீஸ் லெட்டரை எழுதினது நான்தாம்மா!

அருணா : அதை அவ்வளவு அழகா வாசிச்சது நான்தாம்மா!

பரமா : ஏம்மா அப்படி பாக்குறே, விரலுக்கு தகுந்த வீக்கம் வேணும்மா! நமக்கு ஆசை அதிகம் இருக்கலாம். அதுக்கு கஷ்டப்பட்டு உழைக்கணுமே தவிர, குறுக்கு வழியில சம்பாதிக்க முயற்சி பண்ண கூடாதும்மா.

பிருந்தா : என்னதான் இருந்தாலும், புருஷனை தெய்வமா மதிக்கணும்! அம்மா. வேலைக்குக் போய் வீடு திரும்பற புருஷன் கிட்டே சமாதானமா இருந்தாதான், வீட்டுல நிம்மதி இருக்கும். நாங்க சண்டை போடற மாதிரி பேசிகிட்டதை நீ எவ்வளவு வெறுத்தே! அது மாதிரிதாம்மா நீயும் அனுசரிச்சு போகணும்.

மார் : புரிஞ்சுகிட்டேம்பா! நிம்மதியும் சந்தோஷமும் பணத்தால் மட்டும் வராது. குணத்தாலேயும், நல்ல மனசாலேயும்தான் வருங்கறதை நான் நல்லா புரிஞ்சுகிட்டேம்பா.

மாது : பார்வதி மணி 9½ ஆச்சே! பசிக்குதே, விருந்து போடுறியா?

மார் : இருக்குற சாதத்தை விரும்பி சாப்பிட்டா, அதுவே விருந்துதாங்க. வாங்க எல்லோரும் விருந்து சாப்பிட போகலாம்.

பரமா : பணம் பத்தும் செய்யும். உண்மைதான்.

மார் : போங்கப்பா (எல்லோரும் சிரிக்கின்றனர்)

திரை

டியூஷன்

கதை மாந்தர்கள்

வீராசாமி — மிராசுதார்

ஏகாம்பரம் — வீராசாமியின் நண்பர்

முத்துசாமி — வீராசாமியின் மகன்

அம்பிகாபதி — டியூஷன் மாஸ்டர்

பானு — வீராசாமி தங்கை மகள்

டியூஷன்

காட்சி 1

இடம்: *வீராசாமியின் வீடு*

உள்ளோர்: *வீராசாமி, ஏகாம்பரம், அம்பிகாபதி, முத்துசாமி*

வீராசாமி: வாப்பா ஏகாம்பரம்! சாப்பாட்டு நேரமாச்சே! —உன்னை இன்னும் காணோம்னு பாத்தேன்.

ஏகாம்பரம்: காரியத்துக்காகத்தானே வந்திருக்கேன்! விடுவேனா...

வீரா: போய் சாப்பிடு—சொன்னதை செய்யுறேன்டா. சாப்பிடத்தான் வருவே! ஒரு வாத்தியார் கேட்டேனே! என்ன ஆச்சு?

ஏகா: பசி வந்துடுச்சு--சாப்பிட்டுட்டு வந்துடறேன்..அம்மா பாணு? சாப்பாடு தயாரா...

வீரா: அறிவுதான் இல்லேன்னு நினைச்சேன். உனக்கு சுரணையும் இல்லேன்னு இப்பதான் புரியுது.

ஏகா: வீராசாமி! திட்டிகிட்டே சோறு போட்டா திங்க மாட்டேன்னு நெனைச்சியா — சோறு போடட்டும். அதுக்குள்ளே உன்கிட்டே ஒரு விஷயம்...கேட்கணும்.

வீரா: சாப்பிடறதுக்குக் கூலி கேக்கப் போறியா?

ஏகா: அது இல்லே—உன் பையனுக்கு டியூஷன் மாஸ்டர் பாத்துட்டேன். அதைப்பத்திதான்!

வீரா: சாப்பிடற வரைக்கும் அடிக்குற நீப்பா...

ஏகா : இதோ வெளியிலே இருக்குறரு...நமக்கு வேண்டிய பையன். ரொம்ப நல்ல பையன்.

வீரா : வேண்டியவங்கன்னுதாம்பா, இப்ப எந்த வேலேயும் நடக்குது.

ஏகா : நம்ம பையன் இருக்கானே, நல்லா படிச்சவன்—படிப்பைத் தவிர வேறு எந்த விஷயமும் அவனுக்குத் தெரியாது.

வீரா : இந்த காலத்துலேயும் இப்படி ஒரு பையனு?

ஏகா : பையன் நல்லா டியூஷன் கத்துத் தருவான்.

வீரா : என் பையன் பொறுமையா இருந்து படிக்கணுமே!

ஏகா : கோபிச்சுக்காதேப்பா—உனக்கு ஒரே பையன்னு செல்லம் குடுத்துட்டே. என்ன பண்றது?

வீரா : எதுக்கும் ஒரு முடிவு வருமே—பார்ப்போம்! நீ போய் வாத்தியாரை அழைச்சுகிட்டு வா!

ஏகா : இதோ வந்துடறேன்.

(விசில் சத்தம் கேட்கிறது)

முத்து : அப்பா! அப்பா!

வீரா : வாடா முத்து...

முத்து : அப்பா—என் பேர் முத்துவும் இல்லே—முத்து சாமியும் இல்லே...

வீரா : ஏண்டா...பேரு வச்சவன்கிட்டேயே இல்லேங்குற...

முத்து : வெட்டிட்டேன்...

வீரா : எதைடா...

முத்து : என் பேரைத்தான்—முத்துசாமியை முசாமின்னு மாத்திட்டேன்!

வீரா : வெட்ட வேண்டிய தலைமுடியை வளர்த்துவிட்டே— வளக்க வேண்டிய பேரை வெட்டிட்டியே...முசாமி... சே......பேரா இது!

முத்து : கிருஷ்ணசாமியை கிச்சாமின்னு கூப்பிடலாம்... பார்த்தசாரதியை, பாச்சான்னு கூப்பிடலாம்...முத்து சாமியை, முசாமின்னு கூப்பிடக் கூடாதோ...

வீரா : புத்தி போகுது பாரு...உலக்கைக் கொழுந் தாட்டம்...

முத்து : சரிப்பா...நான் காலேஜுக்குப் போறேன்...

வீரா : இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை! ஏதுடா காலேஜ்...

முத்து : என் Friends எல்லாம் சேர்ந்து Assemble பன்றோம்...

வீரா : ஏன்? பெஸல் கிளாஸா (Glass)

முத்து : என்னப்பா கிளாஸான்னு கேக்குறீங்க...நாங்க கிளாஸ் போடவா காலேஜுக்குப் போறோம்?

வீரா : கிளாஸ் இல்லேடா, கிலாஸ்...புரியுதா...உனக் கெங்கே புரியப் போகுது...உனக்கு புரிய வைக்கத்தான் ஒரு டியூஷன் மாஸ்டரை வர வச்சிருக்கேன்.

முத்து : டியூஷனு...

வீரா : அடடே...அதோ வந்துட்டாங்க...வாங்க, வாங்க...

அம்பி : வணக்கங்க...

ஏகா : வீராசாமி...எல்லாத்தையும் விவரமா சொல்லி யிருக்கேன். அவசர வேலையிருக்கு வர்ரேன்... வர்ரேம்பா...

வீரா : ரொம்ப நன்றி ஏகாம்பரம்...போய் அப்புறமா வா...தம்பி! உங்க பேரு என்னங்க...

அம்பி : அம்பிகாபதி.

முத்து : பேரை Cut பண்ணிஞ, அம்பின்னு அழகா கூப்பிடலாம்...அம்பி, உங்க Qualification?

அம்பி : M. A

வீரா : டேய் மடப்பயலே! வாத்தியார் கிட்டே மரியாதையே கெடையாதா?

முத்து : எங்க காலேஜிலே நாங்க அப்படித்தான்.

வீரா : Mr. அம்பிகாபதி...எனக்கு ஒரே பையன். ஓவர் செல்லம்...நீங்க தப்பா நெனேச்சுக்கக் கூடாது.

அம்பி : Mr. ஏகாம்பரம் எல்லாம் விவரமா சொன்ஞரு...

வீரா : இவன் காலேஜை முடிச்சாத்தான் கல்யாணம்... பொண்ணுகூட தயார்தான்.

முத்து : காலேஜ் படிச்சு பாஸ் பண்ணுஞதான் கல்யாணம். என்ன கன்ட்ரித்தனமான கண்டிஷன்...

வீரா : உங்களுக்கு சம்மதந்தானே...

அம்பி : சம்மதம் இருந்ததுஞலேதான் வந்திருக்கேன்...

முத்து: எனக்கு டியூஷன் வேணுமான்னு, யாராவது என்னே கேட்டீங்களா... எல்லாம் உங்க இஷ்டமா?

வீரா : உனக்கு எது புடிக்கும், எது புடிக்காதுன்னு எனக்குத் தெரியும்...

முத்து : அப்பா...நான் மேஜர்...மேஜர் முசாமி...

அம்பி : மேஜரா?... எந்த டிவிஷனுக்கு?

வீரா : இவனுக்குக் கழுதை வயசாகுறதை நாசூக்கா சொல்ருன்? புரியலியா உங்களுக்கு!

அம்பி : தம்பி மேஜரா?

வீரா: இன்னும் இவன் P. U. C-யே தாண்டலே...

முத்து: நீங்க இன்னும் எட்டாவதையே தாண்டுலியே—ஏன் சார்? நீங்களே சொல்லுங்க— எங்க அப்பாவை விட நான் புத்திசாலிதானே.

அம்பி: அப்பா காலம் வேறே— இன்றைய நிலைமை வேறே! இன்னும் படிச்சா நிறைய முன்னேறலாம் இல்லியா...

முத்து; "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்க"

வீரா: என்னடா புதுசா பாட்டு பாடறியே—

முத்து: தம்மை விட கீழானவங்களைப் பார்த்து, நாம உயர்ந்த நிலையிலே இருக்கிறோம்னு நினைச்சாத்தான் மனசுக்கு அமைதி வருமாம்.

வீரா: தடியா... படிடான்னு பாட்டா பாடுறே... சார்! இவன் இப்படித்தான் எதையாவது ஏட்டிக்குப் போட்டியா பேசுவான். இவனை ஒரு நல்ல நிலைக்கு நீங்கதான் கொண்டு வரணும். இன்னைக்கே நல்லநாளு! பாடத்தை தொடங்குங்க. நான் வெளியே போய்ட்டு வந்துடறேன். (போகிறார்)

முத்து: அப்பா நான் காலேஜுக்கு போகணுமே...

அம்பி: எந்த காலேஜுக்கு

முத்து: தோற்றாரை முன்னேற்றும் தோற்றோரியல் காலேஜுக்குத்தான்... அதாவது டியோடிரியல்! அங்கே போனாத்தான் எனக்கு நிம்மதியே வரும்.

அம்பி: எப்படி?

முத்து: என்னை மாதிரி பெயிலானவங்க நிறைய பேர் அங்கே இருக்காங்களே...அவங்களைப் பார்த்தா தான்...

அம்பி: சரி, முத்து—ஆரம்பிக்கலாமா பாடத்தை!

முத்து: (விசிலடிக்கிருன்)

அம்பி: என்ன விசிலடிக்குறே...

முத்து: விசிலடிச்சாத்தான் எனக்கு மூடே வரும். அப்படியே பழகிட்டேன்.

அம்பி: (சிரித்தபடி) ரயிலும் விசிலடிச்சாத் தான் புறப்படும்.

முத்து: டிரான்ஸ்போர்ட் பஸ்ஸும் அப்படித்தான். (விசிலடித்தல்). பஸ்ஸுன்னு சொன்னதும் எனக்கு புட் போர்டுதான் ஞாபகம் வருது!

அம்பி: ஏன் அப்படி?

முத்து: பஸ் புறப்பட்ட உடனே, பின்னுலே ஓடிவந்து, புட் போர்டுலே தொத்தி—

அம்பி: தொத்தியா...

முத்து: ஆமாங்க சார்... ஒரு கையிலே கம்பியைப் புடிச்சி கிட்டு, இன்னெரு கையாலே சிகரெட்டைபுடிச்சிகிட்டு.

அம்பி: நீ சிகரெட் பிடிப்பியா...

முத்து: எப்பவாச்சும் சார்—நீங்க தப்பா நெனைச்சுக்கக் கூடாது— மட்டன் சாப்பிட்டாத்தான் நான் சிகரெட் பிடிப்பேன்.

அம்பி: நீ மட்டன் சாப்பிடுவியா— ரொம்ப ஆச்சரியமா இருக்கே—உங்க அப்பா ரொம்ப ஆசாரமா இருக்காரு! தலையிலே குடுமி— நெத்தியிலே பட்டை— இதெல்லாம் அப்பாவுக்குத் தெரியுமா?

முத்து: தெரியுமான்னு எனக்குத் தெரியாது. என் Friends எல்லாம் ரொம்ப மோசம் சார்— நான் மாட்டேன்னு

தான் சொல்வேன். முதல்லே Brandy யே ஊத்திக் குடுத்துடுவானுங்க, அப்புறம் அது மட்டமா இருந்தா என்ன, மட்டமா இருந்தா என்ன! எல்லாத்தையும் சாப்பிடத்தானே வேண்டியிருக்கு!

அம்பி: சிகரெட், மட்டன், பிராண்டி... அவ்வளவுதானா...

முத்து: தப்புன்னு தெரியுது—தப்பிக்க முடியலே சார்—(விசிலடிக்கிறான்) நீங்க என்ன பாடம் சார் ஆரம்பிக்கப் போறீங்க?

அம்பி: P, U, C, லே நீ எந்த குரூப்? A - யா?

முத்து: A—ன்னு சொன்னவுடனே எனக்கு Adults Only படம் ஞாபகம் வருது சார்—என் பிரண்ட்ஸ் எல்லாம் புதுசா ரிலீசான A— படத்துக்காக, எனக்காகக் காத்துக்கிட்டிருப்பாங்களே, சார் — நீங்களும் வாங்க் போகலாம் (விசிலடிக்கிறான்),

அம்பி: முத்துசாமி— நீ ரொம்ப அழகா விசிலடிக்கிறியே!

முத்து: Adults ஆயிட்டோம்கிறதுக்கு இதுதான் சார் அடையாளம்! உங்களுக்கு அடிக்கத் தெரியுமா...

அம்பி: எனக்குத் தெரியாதுப்பா...

முத்து: போங்க சார்— இப்ப லேடீஸ் எல்லாம் விசில் அடிக்குறாங்க— சிகரெட் பிடிக்கிறாங்க— பிராண்டி குடிக்கிறாங்க,

அம்பி: எங்கேப்பா...

முத்து: A படத்துலேதான்— இங்கே பாருங்க— விசில் அடிக்குறது ஒண்ணும் தப்பில்லே சார்— இப்படி உதட்டைக் குவிச்சு, நாக்கை மடிச்சு...

அம்பி: எனக்கு வராதுப்பா...

மூத்து: முதல்லே கஷ்டமா இருக்கும் - அப்புறம் சரியா போயிடும். (விசிலடித்துக் காட்டுதல்) [அம்பி, புஸ், புஸ் என்று ஊதிப் பார்த்தல்] Ok, sir, first test லேயே best ஆ பண்ணிட்டீங்க. சார், நீங்க எனக்கு நாளைக்கு 5 மணிக்கு வந்து பாடம் கத்துக் கொடுங்க.

அம்பி: (விசில் மூலம் ok, சொல்கிறான்)

மூத்து: அதுக்குள்ளே விசில்லேயே பதிலா! very good improvement.

அம்பி: (விசிலால்) ok... (இருவரும் சிரிக்கின்றனர்).

மூத்து: நாளை சந்திப்போம்.

—திரை—

காட்சி-2

இடம் : வீடு

நேரம் : மாலை

உள்ளே : வீராசாமி, அம்பி, முத்துசாமி

வீரா: என்ன சார்! பத்து நாளா பாடம் சொல்லித் தர்ரீங்களே! நம்ப பையனைப் பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?

அம்பி: உலக ஞானம் நெறைய இருக்குங்க-ரொம்ப அனுபவப்பட்ட பையன்.

வீரா: உங்ககிட்ட மரியாதையா நடந்துக்கிறானா?

அம்பி: நான் மரியாதையா நடந்துக்கிறேன். நான் குருவா இருந்தாலும், சில சமயத்துலே சிஷ்யன் மாதிரியும் நடந்துக்குவேன்.

அம்பி: ரொம்ப அடக்கமா இருக்குறீங்க சார். என் பையன் இருக்கானே சார், அது பெரியகதை. காசியிலேயிருந்து, ராமேஸ்வரம் வரை உள்ள எல்லா கோயிலுக்குப் போன பிறகு பொறந்த பையன் சார் இவன்.

அம்பி: கைமேல் பலன், பையனைப் பாத்த உடனே நான் புரிஞ்சுகிட்டேன்ங்க. (விசில் சத்தம் கேட்கிறது).

விரா: யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே!

அம்பி: முத்துசாமி வரும் பின்னே, விசில் ஓசை வரும் முன்னே.

விரா: பைத்தியக்கார பையன். உலகமே தெரியாதுங்க! ரொம்ப குழந்தை மனசு. என்னமோ நீங்கதான் அவனை கரையேத்தி விட்டுக் காப்பாத்தணும்,

அம்பி: என்னாலே முடிஞ்சதை சொல்லித் தரேங்க.

விரா: வரேங்க-டியூஷனை நான் கெடுக்கக் கூடாது.

அம்பி: சரிங்க... ம் .. முத்து! ஏம்பா லேட்?

முத்து: சார்- சாரி- one hour late. சினிமாவுக்கு போனேன். ரொம்ப கூட்டம். சமாளிச்சுக்கிட்டு ஓடிவர்ரேன். அதான் லேட்!

அம்பி: சரி - பாடத்தை ஆரம்பிப்போம் -புஸ்தகத்தை எடு,

முத்து: புஸ்தகம்னு சொன்னவுடனே அந்த A படத்துலே வர்ர ஒரு சீன் ஞாபகம் வருதுங்க சார். அதுலே காலேஜ் கேர்ள் ஒருத்தி, ரொம்ப கவர்ச்சியா டிரஸ் பண்ணிகிட்டு வர்ரா.

அம்பி: எப்படி இருக்குறு அவ?

முத்து; என் அத்தை பொண்ணு, முறைப் பொண்ணு பானு மாதிரியே ரொம்ப அழகு சார் . .

அம்பி: இப்ப கிச்சனுக்குள்ளே போனதே - அந்தப் பொண்ணு மாதிரியா?!

முத்து; நீங்க எப்படி சார் பாத்திங்க - எப்படிப் பார்த்தாலும் நீங்க தரையை பார்த்துக்கிட்டுதானே இருப்பீங்க!

அம்பி: அதுவா? அகஸ்த்துமாத்தா பாத்தேன், (ஹீ ஹீ அசட்டுச் சிரிப்பு)

முத்து: சரி அதை விடுங்க! அவ முன்னாலே ஒருத்தன் வர்றான், இரண்டு பேருமே ஏற்கனவே அறிமுகமானவங்கதான். ஆனா பீச்சு போறவரைக்கும், பழக்கமே இல்லாதவங்க மாதிரி நடந்து போய்ட்டு, பீச்சுக்குப் போய் படகுக்குப் பக்கத்திலே போன உடனே...

அம்பி. இதெல்லாம எனக்குப் புரியாது வேற topic பேசு

முத்து: இதெல்லாம் புரிஞ்சுக்கணும் சார்-பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது. கொஞ்சம் காதல் பண்ணவும் தெரிஞ்சிக்கணும்.

அம்பி: விசில் அடிக்கக் கத்துக் குடுத்தே கத்துகிட்டேன், சிகரெட் குடிச்சாத்தான் ஸ்டைலா இருக்கும்னு சொன்னே! அதையும் செஞ்சேன்.

முத்து: மிலிடெரி ஹோட்டலுக்கு family room வரைக்கும் வந்துட்டீங்க. இன்னும் ஒண்ணுதான் பாக்கி. அதுலே பாஸ் பண்ணிட்டா, என் ட்யூஷன் முடிஞ்சு போச்சு,

அம்பி: எதுலேப்பா?

முத்து : லவ் பண்றது. வாலிபம் ஒரு தடவைத்தான் வாழ்க்கையிலே வருது சார்!

அம்பி: முத்து! நான் உனக்குப் பாடம் படிச்சுத்தர வந்தேன்! புரியுதா!

மூத்து: நமக்குள்ளே படிப்புதான் வித்தியாசமே தவிர, வயசு ஒண்ணுதானுங்களே! உங்களுக்குத் தெரிஞ்சதை நீங்க சொல்லித் தாங்க! எனக்குத் தெரிஞ்சதை நான் சொல்லித்தரேன்.

அம்பி: காதல் பண்றதைக் கூடவா கத்துத் தருவே?

மூத்து: வாங்க பீச்சுக்கு போகலாம். அதுதான் காதலுக்கு Experiment பண்ற Laboratory.

அம்பி: நான் வரலேப்பா.

மூத்து: குரு சொல்றேன். சிஷ்யன் கேக்கணும்,

அம்பி: கேட்குறேன், கேட்குறேன்,

(இருவரும் விசிலடிக்கின்றனர்),

காட்சி. 3

இடம் : வீடு

நேரம் : மாலை

உள்ளே : அம்பி, பானு, மூத்துசாமி
வீராசாமி

அம்பி: பானு!!

பானு: ஏன் இப்படி பயப்படுறீக! வீட்லே தான் யாருமே இல்லீங்களே?

அம்பி: இந்த அளவுக்கு எனக்கு எப்படி தைரியம் வந்ததுன்னு எனக்கே புரியலியே?

பானு: உங்க குருதான் ட்யூஷன் கத்துக் கொடுத்தாரே!

அம்பி: அதெப்படி உனக்குத் தெரியும்?

பானு: சிச்சன்லேருந்து எல்லாத்தையும் கேட்டுக்கிட்டுத் தானே இருந்தேன். நீங்களும் இங்கேயே பார்த்துகிட்டு இருந்தீங்களே!

அம்பி: அப்படியா?

பானு: உங்களை எனக்கு ரொம்ப புடிச்சுப் போச்சு, அதனாலேதான் நானும் சம்மதிச்சேன்.

அம்பி: உனக்கு இதுல சம்மதமா, நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன்.

பானு: நீங்க பரீட்சையிலே பாஸ் பண்ணிட்டீங்க!

அம்பி: ஆமா பானு! என் வீட்லே என் அப்பா ரொம்ப கோபக்காரரு. என் காலேஜ் ஹாஸ்டல் வார்டன் ரொம்ப ரொம்ப கெடுபிடி, அதனாலே, நான் படிப்பே பிரதானம்னு, இப்படியே இருந்துட்டேன். உலகமே புரியாம போச்சு.

பானு: நாம ரெண்டு பேரும் தனியா இருக்குறதைப் பார்த்தா, என் அத்தானுக்கு ரொம்ப கோபம் வந்துடும்.

அம்பி: பானு! அதுக்குள்ளே நாம ஒரு முடிவுக்கு வரணும்,

முத்து: என்ன Mr. அம்பி - வீட்டுக்குள்ளே நாடகமா? (கோபமாக) பானு?

பானு: ஆமா. . , இதுலே என்ன தப்பு?

முத்து: முறை மாப்பிள்ளை நான் இருக்கேன்.

பானு: முறைன்னு தரம் வேணுமா? தகுதி வேணுமா?

முத்து: உங்க ரெண்டு பேரையும் என்ன பண்றேன் பாரு! என்ன அம்பி?

வரம் கொடுத்த பரமசிவன் தலையிலே கைவச்ச பத்மாசுரன் மாதிரி. , .

அம்பி: நீ சொல்லிக் கொடுத்தே, பானுவும் தைரியம் கொடுத்தா. என்னை என்ன பண்ணச் சொல்றே?

முத்து: முதல்லே - You Get Out - இல்லே...(கோபமாக)

[வீராசாமி வருகிறார்]

வீரா: டேய் முத்துசாமி - ஏண்டா அவரை போகச் சொல்றே? நல்ல பையனை இல்லாததும் பொல்லாததுமா சொல்லிக் கத்துக்குடுத்துட்டு என்ன பேச்சு வேண்டியிருக்கு...

அம்பி: எல்லோரும் என்னை மன்னிச்சுக்குங்க.

வீரா: அம்பிகாபதி...ஏகாம்பரம் எல்லா விவரமும் சொன்னான். என், தங்கச்சி பொண்ணு பானு தாயில்லாத பொண்ணு. நல்ல மாப்பிள்ளையா தேடிக்கிட்டு தான் இருந்தேன், முதல் முறையா உங்களைப் பார்த்தவுடனே எனக்கு புடிச்சி போச்சு! எதுவுமே தெரியாத உங்களை இவ்வளவு சீக்கிரம் இப்படி என் பையன் மாத்துவான்னு என்னாலே நம்பவே முடியலே!

முத்து: அப்பா...

வீரா: உன்னை அறியாம நீ செஞ்ச ஒரு நல்ல காரியம்-, இது ஒண்ணுதான், இந்தாடா ட்யூஷன் பீஸ்?

முத்து: எனக்கா...எதுக்கு?

வீரா: பானுவுக்கு நல்ல மாப்பிள்ளையா தேடித் தந்ததுக்கு.

முத்து: அப்பா! பானுவுக்கு நான்தான் முறை மாப்பிள்ளை! தெரியுமா?

வீரா: முறை பெரிசு இல்லேடா. மனசுதான் முக்கியம். பானுவுக்கு இவரை புடிச்சு போச்சு, இனிமே அடுத்த முகூர்த்தத்துலேயே கல்யாணத்தை நடத்திட வேண்டியதுதான்.

அம்பி: குருவே.. என்னை மன்னிச்சுடு...

முத்து: விசில்லயே O.K, சொல்றேன். போதுமா! வர்ரேன் சிஷ்யா! (போகிறான்)

வீரா: எதுவுமே அவனுக்கு தூசிதான், வாங்க போகலாம்.

(விசிலால் இருவரும் சிரிப்பூட்டுகின்றனர்)

...திரை...

தலையெழுத்து

கதை மாந்தர்கள்

கருப்பண்ணன்	...	விவசாயி
காமாட்சி	...	கருப்பண்ணன் மனைவி
மகேஸ்வரன்	...	கருப்பண்ணன் மகன்
சுப்ரமணியம்	...	ஒப்பனைக்காரர்
மணி, குமார்	...	மகேஸ்வரன் நண்பர்கள்

தலையெழுத்து

காட்சி 1

இடம்: மாங்குடி கிராமம்.
காலம்: காலை
உள்ளே: கருப்பண்ணன்... காமாட்சி

(கருப்பண்ணன் தன் மனைவி காமாட்சியை உரக்கக் கூவி அழைக்கிறார்)

கருப்: காமாட்சி... காமாட்சி... ஏய் காமாட்சி!

காமா: [சிறிது நேரம்கழித்து வந்தபடி] என்னங்க, கூப்புட்டீங்களா..

கருப்: இருபது வருஷமா நானும் இப்படித்தான் கூப்புடுறேன். நீயும் இப்படித்தான் கேட்டுகிட்டே வர்றே! காமாட்சி! முதல் வேலையா, உனக்கு ஒரு செவிட்டு மிஷின் வாங்கித் தரணும். இல்லே... நான் ஒரு லவுடு ஸ்பீக்கர் ஆவது வாங்கிக்கணும்.

காமா: (அலட்சியமாக) உங்க பையன் பட்டணத்துலதான் காலேஜில படிக்கிறான், அவன் படிச்சி முடிச்சு, ஆபீசர் வேலைக்குப் போன பிறகு. முதல் சம்பளம் வாங்கின பிறகு, இரண்டையுமே வாங்கிக்கலாம்! இப்ப ஏன் கூப்புட்டீங்க... அடுப்பில சாதம் இருக்கு... சீக்கிரமா சொல்லுங்க...

கருப்: (எரிச்சலுடன்) ஒண்ணுமில்லே...

காமா: ஒண்ணுமில்லாததுக்கா இந்த ஆர்ப்பாட்டம்? அடியாத்தா! நிசமாவே ஏதும் விஷயமிருந்தா சும்மா கால்ல சலங்க கட்டிகிட்டு ஆடிட மாட்டீங்களா?

கருப்: ஏய்! இப்ப நீ ஆடாதே... இங்கே வா... என்னதான் நாம தனியா இருந்தாலும், நான் புருஷன் புருஷன்தான். நீ பொஞ்சாதி பொஞ்சாதிதான். மரியாதை குடுக்கக் கத்துக்கோ!

காமா: (ஏளனமாக) என் ராசா! போதுங்களா?

கருப்: உன் தொணதொணப்பு போதும்ண்டி... நான் வயற்காட்டுக்குப் போய் வந்துடறேன்— வீட்டைப் பத்திரமா பார்த்துக்க!

காமா: நான் வீட்டாள்தானே! வேற வேலே?

கருப்: அப்ப என்னைக் காட்டாள்னு சொல்றியா?

காமா: நான் உங்களை ஒண்ணும் தப்பா சொல்லலிங்களே!

கருப்: ஏன், தப்பா சொல்லணும்னு நினைக்குறியா...

காமா: இப்ப என்ன சொல்லிட்டேன்! ஏன் இப்படி சள்ளுன்னு விழறீங்க!

கருப்: என்னடி சள்ளுன்னு சொல்றே... வள்ளுன்னு நாய் மாதிரி விழறேன்னுதானே சொல்ல வந்தே...

காமா: காலங்காத்தாலே உங்களுக்கு என்ன வந்தது?

கருப்: எனக்கா?...

(வெளியிலிருந்து 'சார் தந்தி' என்ற குரல் கேட்கிறது) தந்தி வந்துருக்கு... தந்தி வந்துருக்கு...

காமா: ஐயையோ தந்தியா... சீக்கிரமா வாங்குங்கோ... அதில என்ன இருக்கோ?

கருப்: சத்திக் கதறி என்னையும் பயமுறுத்தாதே! இப்படிக் கொண்டாப்பா தந்தியை...

தந்திக்காரன்: இங்கே கையெழுத்தைப் போடுங்க! இந்தாங்க... வர்ரேன் சார்...(தந்தியை கொடுத்து விட்டுப் போகிறான்)

காமா: அந்த ஆளு போயாச்சு...பிரிங்க...படிங்க! கைகால் ஆடுனது போதும்... இவ்வளவு நேரமா பிரிக்க...

கருப்: இந்தா ஆச்சுடி... அய்யய்யோ... நாக்கெல்லாம் வறண்டு போச்சே... கொஞ்சம் தண்ணி கொண்டு வாயேன்.

காமா: தந்தியை படிங்க... தண்ணியை அப்புறம் குடிக்கலாம்.

கருப்: (முணுமுணுக்கிறார், பிறகு) காமாட்சி...உன் பையன்...

காமா: என் பையனுக்கு என்ன ஆச்சுங்க... (அழ ஆரம்பிக்கிறாள்) ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணுன்னு வாழைக் கண்ணு மாதிரி வச்சிருந்தேன். அட கடவுளே! உனக்குமா கண்ணுல்லாம போச்சு...

கருப்: அடசீ! உன் பையன் மகேஸ்வரன் தந்தி அடிச்சிருக்கான். அவனுக்கு ஒண்ணும் ஆகலே! நல்லா கல்லுப் பிள்ளையார் மாதிரிதான் இருக்கான்.

காமா: அப்பா... என் வயிற்றில பால் வார்த்தீங்க.

கருப்: பாலே ஊத்துனேனு? இப்பொ நெருப்பையும் கொட்டப் போறேன், பாலை நல்லா பொங்கப் போகுது.

காமா: என்ன சொல்றீங்க?

கருப்: உன் பையன், பணம் வேணும்னு தந்தி அடிச்சிருக்கான்.

காமா: அடப்பாவி... பத்து நாளைக்கு முன்னேதானே 100 ரூபா அனுப்பி வச்சோம் அதுக்குள்ளே என்ன அவசரம்?

கருப்: என்னமோ தெரியலே. C. C. C. வாங்கணுமாம்.

காமா: சீ வாங்கவா... 'சீ' போகவா... என்னங்க அது...

கருப்: எனக்கு என்ன தெரியுது? அந்தக் காலத்து அஞ்சாங் கிளாஸ்தானே! காலேஜ்ல புஸ்தகம் வாங்கணும்னு, மூதல்ல கவர்ல எழுதி பணம் கேட்டான். அப்புறம் N. C. C. ல சேரணும்னு எக்ஸ்பிரஸ் லெட்டரில பணம் கேட்டான். இப்ப என்னடான்னு, C. C. C. வாங்கணும்னு தந்தியே அடிச்சிருக்கான்.

காமா: என்ன முக்கியமான பாடமோ! அது இல்லாம எப்படி என் பையன் துடிக்கிறானோ? யார் பக்கத்துல இருந்து ஆறுதம் சொல்றாங்களோ? என்ன அவசரம் அவசரம் இருந்துருந்தா என்பிள்ளை இப்படி தந்தியே அடிச்சிருப்பான்?... (அழுகிறாள்)

கருப்: அழாதேடி காமாட்சி—இந்த மாசம் தானே கடன் உடன் வாங்கி 300 ரூபா வரைக்கும் அனுப்புனேம், இவன் இப்படியே கேட்டா, நாம என்ன செய்ய முடியும்? – அவன் காலேஜ் முடிக்கறதுக்குள்ள. நாம காவடியை தூக்கிட வேண்டியதுதான்.

கருப்: காவடிய தூக்கினலும், சரி. சத்திரம் சாவடியில தங்கினலும் சரி, பணம் அனுப்பத்தான் வேணும். நீங்க அனுப்பப் போறீங்களா மாட்டிங்களா?

கருப்: (பரிதாபமாக) அங்கே பையன் பணத்துக்கு பேயா பறக்குறான். இங்கே பொண்டாட்டி பாம்பா விரட்டுறா. என்ன, செய்யறது? சம்சார சாகரத்துல சிக்கிக்கிட்டு சாகுறேன்...சரி,. காமாட்சி...நாம பட்டணத்துக்கே போவோம். பையன் மகேஸ்வரனைப் பார்ப்போம்.

பணத்தைக் கொடுத்துட்டு வருவோம் எப்படி என் யோசனை?

காமா: ஆமாதங்க, நம்மை பிரிஞ்சி அவன் எப்படி தவிக்குருனே? அநாதை மாதிரி என் குழந்தை தெருவில நிற்குதோ என்னமோ?

கருப்: போகலாமா வேண்டாமா?

காமா: நிச்சயம் போகனுங்க...என் குலதெய்வம் சமயத்துல உங்களுக்கு நல்லா மூளைய கொடுக்குது.

கருப்: நீ எப்ப என்கிட்ட வந்தியோ... அப்பவே என் மூளை மாறியே போயிடுது! சரி, பட்டணம் போனு எங்க தங்கறது?...

காமா: ஏங்க, நம்ம வீட்டுல தங்கி இருந்த சுப்பிரமண்யம்...

கருப்: யாரு! சுண்ணும்பு அடிச்ச சுப்பிரமணியமா?

காமா: அவனேதான்! அவன் அட்ரஸ் கூட கொடுத்துட்டுப் போயிருக்கான்...

கருப்: நன்றியுள்ளவன்... போற இடத்தை சொல்லிட்டு வேற போயிருக்கானே! தருமமும் சத்தியமும் நாட்டுல இன்னும் இருக்குதுடி...காமாட்சி! பட்டணம் புறப்பட பொட்டணத்தைக் கட்டு! போவோம்...

ஓ! சுப்பிரமணியா! உன்னை நம்பித்தாப்பா வரோம். எங்கயும் கம்பியை நீட்டிடாதே...

—திரை—

காட்சி. 1.

இடம்: சென்னையில் ஒரு அறை

உள்ளே: மகேஷ். மணி. குமார்.

மணி: மகேஸ்வரா...

மகேஷ்: டேய் மணி! இப்ப என் பேரு மகேஸ்வரன் இல்லடா! மகேஷ்னு மாத்திவச்சிருக்கேன்... இனிமே பழைய பேரை கூப்புட்டெடா...

குமார்: மகேஷ...பேரை மாத்திக்கலாம். ஆனு ஆளு பழைய ஆளுதானடா...

மகேஷ்: ஆளும் மாறிக்கிட்டுதான்டா வரேன்... நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம் பட்டிக்காடா இருக்கலாம். ஆனு நான் ஆரம்பிச்ச பிறகு தான்டா பட்டணத்துல பேஷன் கண்டினியூ ஆகுது, அதனுல தான், ஆஸ்டல் லைப் வேண்டா முன்னுட்டு தனி ரூம் எடுத்து தங்கி இருக்கேன்...தெரியுதா!

மணி: இது உங்க அப்பா அம்மாவுக்கு தெரியுமாடா?

மகேஷ்: தெரிய வேண்டிய அவசியமே இல்லே...பணத்தை அனுப்ப வேண்டியது பெத்தவங்க கடமை... மனம் போல வாழ வேண்டியது மகனோட கடமை...

அட்வைஸ் பண்ற அளவுக்கு என் அப்பா வளர்ந்துடலே, வாழ்ந்துடுலே! புரியுதா?

குமார்: புரியுது டேய்! உட்கார்ந்து பேசுடா... ஏன் இப்படி கூண்டுக்குள்ளே இருக்குற குரங்கு மாதிரி அங்கு மிங்குமா அலையுறே?

மகேஷ்: பணம் இல்லேன்னு பட்டணம் இல்லேடா...

மணி: உங்க அப்பாகிட்டே அடிக்கடி பணம் கேட்குறியே! காரணம் வேண்டாமா?

மகேஷ்: காரணமா (சிரிக்கிறான்). பெத்தவங்க தற்குறியா இருக்கிறது பிள்ளைகளுக்கு எவ்வளவு கொண்டாட்டம்டா! டேய்! நான் இப்ப C. C. C வாங்கனும்னு கேட்டிருக்கேன்.?

இரண்டு நாளா எப்படியோ சமாளிச்சேன்... இனிமே தாங்காதுன்னு தந்தியே அடிச்சிருக்கேன்...பணம் வர்ர நேரம்... அதுதான் இப்படி தவிக்குறேன்...

இருவரும்: C.C C யா! அது என்னடா

மகேஷ்: ஆமாண்டா! C ன்னு சிகரெட், C ன்னு காபி C ன்னு சினிமா... அதுதான் C.C C. எப்படி என் ஐடியா! காலேஜ் ஸ்டுடன்சுக்கு கண்கண்ட தெய்வம்... தெரியுதா?...

இருவரும்: (சிரிக்கின்றனர்)

மகேஷ்: என்னமோ ஏதோன்னு நினைச்சுகிட்டு, எங்க அப்பா பதறிப் போய் பணத்தை அனுப்புவாரு ஏய் குமார்! இதுதான் என் Life Philossophy,

படிக்குறவரை தாண்டா ஜாலி. அப்புறம் வேலையில்லாத் திண்டாட்டம், சம்சார சாகரம், பிள்ளை குட்டி விவகாரம்... வேதனை. எரிச்சல்.

மணி: அதுக்குன்னு, பெத்தவங்களை கஷ்டப் படுத்தலாமா?

மகேஷ்: ஏன்? பெத்தவங்க கஷ்டப்படக் கூடாதா? அவங்க கஷ்டப்படவே கூடாதா! டேய்! அவனவன் தலையெழுத்து எப்படியோ, அப்படிதான் நடக்கும்!

குமார்: ம், நடக்குறது நடக்கட்டும். வா, காலேஜுக்கு போகலாம்.

மகேஷ்: Mood இல்லே... லேட்டஸ்டா ஒரு இந்திப் படம் வந்திருக்கு, ரிசர்வ் பண்ணப் போகணும், வர்றியா நீ?

மணி:- நான் வரலேப்பா! எங்க அப்பா கண்டா திட்டுவாரு. காலேஜுக்கு போகணும்.

மகேஷ்; ஐயோ! மாணவ பரம்பரைக்கே மாபெரும் அவமானம். டேய்! படிப்பை காலேஜ்ல போய்தான் கத்துக்கணுமா? போடா! புக் இருக்கு. Notes இருக்கு Examல பாஸ் பண்ண எத்தனையோ Method இருக்கு மீறிப் போனா, Tutorial Colloge இருக்கு...இதை விட்டுட்டு, ஜெயில் மாதிரி ரூம்ல போய், யாராவது தினந்தோறும் அடைப்பட்டுக் கிடப்பாங்களா?

குமார்: உன்னுடைய Ideaவே அலாதி தான்டா, Student திலகமே, எங்க அப்பா என்னை வீட்டு படிவாசல் ஏத்த மாட்டாரு. . நான் வரேன். . (ஓடுகிறான்)

மகேஷ் - (சிரித்துக் கொண்டே) மணி! குமார் ஓடுற ஓட்டத்தைப் பார்த்தியா?, பாவம். காலேஜுக்கு வந்த பிறகுபாடா அப்பாவுக்கு பயம்? மணி! வாடா போகலாம். Time ஆச்சு.

மணி: எங்கே! காலேஜுக்கா?

மகேஷ்: Fool. ஏண்டா திரும்பத் திரும்ப காலேஜ்னு ஞாபகப் படுத்துறே! ' இன்னைய வரைக்கும் இனிமையாக இரு'' இதுதாண்டா உமர் கயாம் தத்துவம், வா! போய் காபி குடிச்சிட்டு, அப்படியே சிகரேட் பத்த வச்சிட்டு, சினிமா தியேட்டர் வரைக்கும்....

மணி: எங்க அப்பா....

மகேஷ்:- சமாளிக்கலாம் வா...

மணி: (தனக்குள்)காபியும் சிகரேட்டும் சினிமாவும் ஓசியிலே வருதே! இந்த காலத்துல யார் கொடுப்பா. (சத்தமாக) சரிடா மகேஷ்.

மகேஷ்: That is nice. குமாரைப் பார்த்தியாடா! குனிஞ்சு குனிஞ்சு படிச்சி முதுகு வளைஞ்சி போய் கிடக்குறான்., ஐயோ பாவம்! அவனவன் தலையெழுத்து எப்படியோ, அப்படிதான் நடக்கும், மணி. TMO வரட்டும். ஏ படமே நம்முடையது தான். (சிரிக்கிறான்)

திரை

காட்சி 3

இடம்:- சுப்ரமணியம் வீடு.

உள்ளே;- கருப்பண்ணன். காமாட்சி. சுப்ரமணியம்,

கருப்:- (ரகசியமாக) காமாட்சி! இது தான் 20ம் நம்பர் வீடு. இந்த வீடா சுப்ரமணியத்து வீடு? பட்டணத்துல வீட்டை கண்டு பிடிக்கிறதுக்குள்ளாக, பாதி வாழ்க்கையே வீணாயிடும் போல இருக்கே...

காமா:- இருங்க. யாரோ, உள்ளேயிருந்து வர்ரமாதிரி இருக்கு. பார்த்தா, நம்ம சுப்ரமணியம் மாதிரி இருக்கே.

கருப்:- மாதிரியா... இப்படி மாதிரி போட்டே நான் எத்தனையோ முறை ஏமாந்துருக்கேன். சுண்ணும்பு அடிக்குற சுப்ரமணியத்துக்கு இப்படி ஒரு வீடா... பார்க்குறப்ப லேவ கண்ணைப் பறிக்குதே!

சுப்ர:- (வந்து கொண்டே) வாங்க வாங்க! அய்யா வாங்க! அம்மா வாங்க,

காமா:- தம்பி சுப்ரமணியம்! நாங்க தடுமாறிப் போயி நிக்குறோம்.

கருப்:- தலைகீழா பார்க்கிற மாதிரியே இருக்குது.

சுப்ர:- ராத்திரி மெயில்ல சண் முழிச்சு வந்த களைப்பா இருக்கும். தூங்கிட்டா சரியா போயிடும். உள்ளே வாங்க போகலாம். (சத்தத்துடன்) பாய்! போயி அம்பி கடையில 3 ஸ்டிராங்காபி வாங்கிட்டு வா... (திரும்பி) இங்கே வந்த பிறகு நான் கட்டுன வீடுங்க. சொந்த வீடுங்க.

இ : சொந்த வீடா! (ஆச்சரியத்துடன்)

சுப்ர: ஆமாங்க... எல்லாம் உங்க ஆசிர்வாதந்தான்.

கருப்: தம்பி கோவிச்சுக்கப்படாது. சுவத்துக்கு சுண்ணாம்பு அடிச்சு எப்படி இவ்வளவு சம்பாதிக்க முடியும்?

சுப்ர: நம்ம ஊருல அந்த வேலைதான். இங்க நான் Make up man, அதாவது முகத்துக்கு பவுடர் அடிக்குற வேலை

காமா: என்னப்பா சொல்லுறே!

சுப்ர: சினிமா ஸ்டார்களுக்கு மேக்கப் போடுறேன்,

கருப்: அதெப்படி தம்பி இந்த வேலையை கத்துகிட்டே?

சுப்ர: அதெல்லாம் பெரிய கதைங்க... ஓய்வா சொல்றேன்.

கருப்: சுப்ரமண்யம்! நான் எதாவது கேட்டா கோபப்படமாட்டியே?

சுப்ர: உங்க வீட்டு சோத்தை சாப்பிட்டுட்டு, ஒட்டுத் திண்ணையிலே ஒதுங்கிக் கிடந்தவன் நானு! நீங்க எது கேட்டாலும், எதைச் சொன்னாலும் எனக்குக் கோபமே வராதுங்க!

கருப்: வேற ஒண்ணுமில்லே... மேக்கப்னு அதாவது பவுடர் பூசறதை ஆண்களுக்கு மட்டும்தான் போடுவியா...

சுப்ர: இல்லிங்க! பெண்களுக்கும் கூடத்தான்.

கருப்: அப்ப, அவங்களைத் தொடும்போது உனக்கு கூச்சமா இருக்காது...

சுப்ர: இருக்காதுங்க...

கருப்: சரி! உனக்குத்தான் இல்லே... பெண்களாச்சே! அவங்களுக்கும் கிடையாதா?

காமா: [கோபமாக] சும்மா இருங்க! வந்ததும் வராததுமா வர்ர சந்தேகத்தைப் பாரு! வந்த வேலையை மறந்திட்டு வம்புன்னு வால்புடிச்சு அலையுறதே உங்க தொழில்!

கருப்: சரி சுப்ரமண்யம்! நாம தனியா பேசிக்கலாம். காமாட்சி கோபிச்சுக்குறா. நம்ம டையன் இருக்கானே! மகேஸ்வரன், அவன் இங்கதான் காலேஜில படிக்கிறான்.

சுப்ர: அப்படிங்களா! ரொம்ப சந்தோஷம். அட்ரஸ் தெரிஞ்சிருந்தா நானே போய்ப் பார்த்திருப்பேன்.

கருப்: பரவாஇல்லே தம்பி... அவன் பாடம் படிக்குறானோ என்னவோ, எப்பப் பார்த்தாலும் பணம் பணம்னு உயிரை வாங்குறான். அவன் எப்படி இருக்கான்னு பார்க்கத்தான் நேரிலேயே வந்தோம்.

சுப்ர: வாங்க போய்ப் பார்ப்போம்!

கருப்: கொஞ்சம் பொறு தம்பி...இதுல ஒரு சிக்கல் இருக்கு!

காமா: இங்கேயுமா சிக்கல்!...

கருப்: கொஞ்சம் பொறு காமாட்சி! நான் அவனை நேரில பார்க்கணும். பேசணும். ஆனா அவன் என்னை யாருன்னு கண்டு புடிக்கக் கூடாது. அந்த மாதிரி நான் மாறு வேஷத்தல போயி பார்க்கணுங்கிறதுதான் என் ஆசை.

காமா: அதெப்படி முடியும்?

கப்ர: கவலைப் படாதீங்க ஐயா! உங்களை மேக்கப் பண்ணி அப்படியே ஆளை மாத்திடறேன்! கடவுளே வந்தா கூட உங்களை யாருன்னு கண்டுபிடிக்க முடியாது. என்னுடைய கைத்தொழிலை நீங்க பார்க்கக் கூடிய வாய்ப்பும் வந்துடுச்சே!... வாங்க மேக்கப் ரூமுக்குப் போகலாம்.

காமா: தம்பி! ஆளை மாத்து, மனசை மாத்திடாதே.

(இருவரும் சிரிக்கின்றனர்)

—திரை—

காட்சி—4

இடம்—மகேஷ் அறைக்கு முன்னே உள்ள சாலையோரம்

உள்ளே—காமாட்சி, கருப்பண்ணன், மகேஷ்

(மகேஷ் அறைக்கு கொஞ்ச தூரத்தில் இருவரும் நின்று பேசுதல்)

கரு: காமாட்சி! எப்படியிருக்கு என் வேஷம்?

காமா: என்னங்க இது? என்னாலேயே கண்டுபிடிக்க முடியலே... பூசனிக்காய்ல படம் போட்ட மாதிரி...

கரு: ஏண்டி! உனக்கு வேற உதாரணம் கிடைக்கலியா? காமாட்சி! இதை நல்லா கவனி. அங்கே இருக்கு பாரு அதுதான் நம்ம மகேஸ்வரன் ரூம். அந்த வாசல்லே நிற்குறவன் நம்ம பையன்தான். நீ இங்கேயே நில்லு, நான் போய் பேச்சுக் கொடுத்து பார்க்குறேன். பின் பக்கமாவே வந்து சத்தம் போடாம கவனி. மீதியை அப்புறம் பேசிக்கலாம்.

காமா: சரிங்க... நீங்க முன்னே போங்க! [அவர் போகிறார்]
(மகேஷ் தனியே தனக்குள் பேசிக் கொள்ளுகிறான்.)

மகேஷ்: என்னடா இது! இந்த குமாரும் மணியும் எங்கே போய்த் தொலைஞ்சானுங்க! சினிமாவுக்கு வேற டைம் ஆயிடுச்சு. ம்... சிகரெட் குடிச்சாதன் Mood வரும். ம்... தீப்பெட்டி இல்லியே! அதோ அந்த பெரியவரு இந்தப் பக்கம் தான் வர்றாரு... அவரையே கேட்போம்! என்ன பெரியவரே! வத்திப்பெட்டி இருக்கா!

கருப்: இல்லிங்களே! எனக்குப் பழக்கம் இல்லிங்க...

மகேஷ்: என்னய்யா பெரிய மனுஷன்... புகை பிடிக்குற பழக்கம் இல்லாத மனுஷன் என்னய்யா பெரியா மனுஷன்?

கருப்: தம்பியை பார்த்தா பெரிய மனுஷன் வீட்டு புள்ளே மாதிரி இருக்கு! தம்பி பேரு என்ன?

மகேஷ்: என் பேரா! மகேஷ்.

கருப்: மசேஷ்ன்னு... மகேஷ்தானு... இல்லெ வேற ஏதாச்சும் பேரா?

மகேஷ்: என் அப்பா வச்ச பேரு மகேஸ்வரன்... அது கர்நாடகமா இருக்கறதுனால பேரை பேஷனா மாத்திகிட்டேன்.

கருப்: தம்பி! நீ ரொம்ப அழகா இருக்குறியே! உங்க அப்பா ரொம்ப அழகா இருப்பாரோ?...

மகேஷ்: (ஏளனமாக) எங்க அப்பனு! ஐயோ! பேய்! பேரே கருப்பண்ணன்... கலரும் அப்படித்தான் பார்க்க சகிக்காது. சே! அவரை என் அப்பன்னு சொல்லவே எரிச்சலா இருக்குது!

கருப்: (தடுமாற்றத்துடன்) ஓ அப்படியா!... அப்ப நீ உங்க அம்மா மாதிரியே இருக்குற போலிருக்கு...

மகேஷ்: அம்மாவா! ஆபாமாதிரி! அய்யோ! அந்த கண்றாவியை ஏன் கேட்குறிங்க! சே! எனக்கு அவங்க ரெண்டு பேரும் பெத்தவங்களா வந்து தொலைச்சாங் களே? வெட்கம்...வெட்கம்! Shame! Shame...!

கருப்: தம்பி ரொம்ப சங்கடப்படுறே! விடுப்பா! இனி என்ன செய்யறது தம்பி... பார்க்கிறதுக்கு அசிங்கமா இருந்தாலும், நீ படிக்குறதுக்கு அவங்கதானே கஷ்டப் பட்டு பணம் அனுப்புறாங்க...

மகேஷ்: என்னய்யா பெரிய பணம்! பிச்சைக்காசு... அவங்க அனுப்புற காசு... கேவலம் சிகரெட்டுக்கே பத்துலெ... அப்புறம் சினிமா பீச். ஷாப்பிங், கண்காட்சி இதுக் கெல்லாம நான் எங்கே போறது?

கருப்: நான் சொல்றேன்னு தம்பி கோபிச்சுக்கப்படாது, நீ பட்டணம் வந்தது படிக்கத்தானே! காலேஜிக்கு போறதை மட்டும் சொல்லாமே எல்லாத்தையும் சொல்றியே!

மகேஷ்: ம்... பெரிய காலேஜ்... காலேஜா! அது ஒரு பெரிய அறுவைக் கூடம்... அதுல உள்ள லெக்சரர் எல்லாம் கழுத்தறுக்குற எமன்!

கருப்: ஏப்பா இவ்வளவு வெறுப்பு... ரொம்ப மனம் உடைஞ்சு பேசுறியே?

மகேஷ்: பின்னே என்னங்க! இந்த நாடு. இந்த வாழ்க்கை, இந்த பண்பாட்டு முறையே எனக்குப் புடிக்கலெ... இன்னும் ரெண்டு நிமிஷம் முன்னே புறந்திருந்தா நான் அமெரிக்காவில புறந்திருக்க வேண்டியவன். கொஞ்சம் தவறிப் போச்சு... இந்த பிச்சைக்கார நாட்டுல, பட்டிக்காட்டுல மகனா புறந்து, படாத பாடு படுறேன். நாயா சாகுறேன்.

(பளாரென்று கன்னத்தில் அறைகிறார் கருப்பண்ணன்)
ஏன் என்னே அறைஞ்சே! யாருய்யா நீ!

கருப்: நான்தாண்டா உங்க அப்பன்... ஓ! காமாட்சி நீயும் வா. கேட்டியா உன் மகன் சொன்னதை!

காமா: அடே மகேஸ்வரா! ஏண்டா உன் புத்தி இப்படி போச்சு!

கருப்: ஏண்டா! என்னேப் பார்த்தா பேய் மாதிரி... அம்மாவைப் பார்த்தா ஆயாமாதிரி...குருவைப்பார்த்தா ஏமன் மாதிரி... இந்த நாட்டைப் பார்த்தா கண்றாவியா இருக்கா...

மகேஷ்: அப்பா...

கருப்: சீ! அப்பான்னு கூப்புடாதே! மாதா, பிதா, குருவை தெய்வமா மதிக்கக் கத்துக்கனும்னுதாண்டா. நான் மாடா உழைச்சி, படிக்க வச்சேன். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி, உன்னே சுகமா வாழ வச்சேன்... நான் கடன்காரனு வாழ்ந்துகிட்டு, உன்னே ராஜா மாதிரி இருக்க வச்சேன். ஆனு, நான் எதிர்பார்த்தது உன்கிட்டே கிடைக்கலே! நீ படிச்ச படிப்பு பண்பைத் தரலே...நல்ல பண்பாட்டைப் பெற முடியாம, என்னடா படிப்பு? நீ படிக்கவே வேண்டாம்... புறப்படு...

மகேஷ்: எங்கப்பா...

கருப்: பட்டிக்காட்டுக்கு... நீ படிச்சது போதும். வா! என் கூட வயற்காட்டுல வேலே செய்... மனுஷனுக்கு முக்கியம் அறிவு. இத்தனே வருஷமா படிச்சது பெத்தவங்களேயும் மத்தவங்களேயும் இகழ்ச்சியா பேசறதுக்கா! உழைக்கிறதுதாண்டா படிப்பு... நாட்டுல படிச்சா தான் படிப்பா! வீட்டுலயும் படிக்கலாம் வா!

மகேஷ்: அம்மா! நான் செஞ்சது தப்புதாம்மா! நீயாவது சொல்லும்மா...

கருப்: வேண்டாம்... விதையில பழுதிருந்தா மரம் மட்டும் தரமா முளைக்குமா! டேய் உன்னை மாதிரி ஆளுங்களால தான் இந்த நாடே கெடுது! இந்த நாடு கெட்டுப் போக நான சம்மதிக்க மாட்டேன்... என் மகனை திருத்தியாவது, இந்த நாட்டுக்கு ஒரு நல்லது செய்யப் போறேன். படிச்சது போதும்! வா போகலாம்...

மகே: (அழுகிறான்)

காமா: போப்பா! அவனவன் தலையெழுத்து, எப்படியோ, அப்படிதான் நடக்கும்.

—திரை—

அதோ அந்த நேரம்

கதை மாந்தர்கள்

காமாட்சி	—	பால்காரி
பொன்னம்மாள்	—	பால்காரியின் சிநேகிதி
சிங்காரம்	—	காமாட்சியின் தம்பி
கந்தன்	—	காமாட்சியின் மகன்
பெரியசாமி	—	காமாட்சியின் மகன்

அதோ அந்த நேரம்

காட்சி 1

இடம்: காமாட்சி வீடு.

உள்ளே: காமாட்சி, பொன்னம்மா, சிங்காரம்.

(காமாட்சி சேலையை ஊசியால் தைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் கண்கள் கலங்கியிருக்கின்றன. தன்னை மறந்த நிலையில் அப்படியே அமர்ந்திருக்கிறாள். அப்பொழுது பொன்னம்மாள் உள்ளே வருகிறாள்)

பொன்: காமாட்சி. காமாட்சி! என்ன இது. நானும் வந்ததிலேயிருந்து பார்க்கிறேன். துணியை ஊசியால தைக்குறியா இல்லே பார்வையிலேயே தச்சிடுறியா? என்ன ஆச்சு? துறுதுறுன்னு கட்டெறும்பு மாதிரி ஒரு இடத்துல நிற்கமாட்டே! உட்கார்ந்து போயிட்டே. ஏன் இப்படி?

காமா: (சமாளித்தவாறு எழுந்து) வா வா பொன்னு! ஒன்னுமில்லே ஏதோ கவலையில அசந்துட்டேன். என்னை ஏன் என்னான்னு நீயாவது கேட்குறியே! அது போதும். அட ஏன் அப்படி பார்க்குறே. என் மூஞ்சி என்ன சினிமா ஸ்டார் மாதிரியா இருக்குது?

பொன்: அதில்ல. . என் தங்கச்சி வீட்டுக்கு எப்ப நான் வந்தாலும், பைய வச்ச கைபோட, உன்னே பார்க்கத்தான் ஓடோடி வருவேன். உன் சந்தோஷமான மூகத்தை பார்த்தா தான் எனக்கு வேலேயே ஒடும், அது சரி. ஆயிரம் நடந்தாலும் அசரமாட்டே. ஏன் உன் கண்ணு கலங்கியிருக்கு. ஒரு மாதிரி....

காமா: நான் ஒரு மாதிரிதான். விளக்கு திரி மாதிரி எரிஞ்சி இந்த வீட்டுக்கு வெளிச்சம் தர்ரேன். திரி எரிஞ்சி கரிஞ்சி போகுதுல்ல அப்படித்தான் இருக்கேன்.

பொன்: வீடுன்னு வாசல். குடும்பம்னு கஷ்டம் இருக்கத்தான் இருக்கும். அதுக்காக கலங்கத்தான் முடியுமா? நீ பேசாம கவலேயை விடு. எல்லாம் நல்லாவே நடக்கும்,

காமா: நாம ரெண்டு பேரும் சின்ன வயசல இருந்து ஒன்னுதான் வளர்ந்தாம். நான் மாட்டை ஓட்டிகிட்டு காட்டுக்கு போனேன். நீ புத்தகத்தை எடுத்துகிட்டு படிக்கப்போனே... நீ டீச்சர் ஆயிட்டே... நா...பணக்காரி ஆயிட்டேன், எவ்வளவு வித்தியாசம் பாரு.

பொன்: என்ன வித்தியாசம், நீ ராஜாத்தி மாதிரி இருக்குறே,படிக்காட்டியும் பணத்துல புரள்றே! நா'ன்னு வரவுக்கும் செலவுக்கும் வழி பண்ண முடியாம திண்டாடி சமயத்துல. தெருவில நிக்குறேன்... இக்கரைக்கு அக்கரை பச்சை... அவ்வளவுதான்.

காமா: அப்படி இல்லே... காலே நாலு மணிக்கு பால்கறக்க ஆரம்பிச்சு. பாலே தூககிகிட்டு வீடு வீடா சுத்தி. யானேக்கு நாமம் போடுற மாதிரி வீட்டு சுவத்துல கணக்குகாக கோடு போடடுட்டு வர்ரேன்.

பொன்: வியாபாரம்னு நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. ஊத்துன பாலுக்கு பணம். பணம் இல்லேன்னு பல்லே காட்டி கெஞ்ச வேண்டியதுதான். இதுல என்ன படாடோபம் வேண்டியிருக்கு.

காமா: நான் பணம் கூட கேட்குல... இன்னைக்கு இல்கேன்னு நாளைக்கு வாங்கிக்குறேன்... ஆனா, நான் கிழிச்ச கோட்டையெல்லாம் அழிச்சிபுட்டு, தப்புக் கணக்கு சொல்றுங்க. மீறி கேட்டா எங்க நோட்டுக் கணக்கு தப்பான்னு நோட்டை தூக்கி எறியுறுங்க... அது...என் மூஞ்சியில் எறியுற மாதிரி இருக்குது.

பொன்: கணக்கை அக்கம் பக்கம் காட்டுனா, அவமானம் தாங்காம...சே... தப்பு செய்யறதுக்கும் ஒரு அளவே இல்லியா...

காமா: என் நாபகம் எப்பவுமே தப்பாது. யானை மாதிரி, நாபக சக்தி எனக்கு... நியாயத்தை பேசக் கூட முடியாத மாதிரி, கைநாட்டுப் பேர்வழின்னு கதைகட்டி விரட்டுறுங்க பாரு, அதை நினைக்கும் போதுதான் வயித்தை பத்திக்கிட்டு எரியுது!

அடடே, என் விசாரத்துல நீ வந்து இவ்வளவு நேரமாச்சு...கவனிக்குலியே! உபசாரத்துக்கு என்ன வேணும்னு கேட்குல பாரு! நீ என்ன சாப்புடுறே... காபியா பாலா...இப்படி நேராவே கேட்குறேன்னு தப்பா நினைக்காதே! உனக்கு புடிச்சதை உங்கூட சேர்ந்து நானும் சாப்புடனும்; அவ்வளவுதான். (சிரிக்கிறுள்)

பொன்: நீ சிரிக்குறதே போதும்! எனக்கு ஐஸ் சாப்பிட்ட மாதிரி இருக்கு! காமு, முன்னக்கி இப்ப ரொம்ப வீக்கா இருக்குறே, ஏதாவது டானிக் வாங்கி சாப்பிட்டா என்ன? ஐஸ் விக்குறவன் டீ வாங்கி குடிக்கிறுன், டீ விக்கிறவன் ஐஸ் சாப்பிடுறுன், நீயோ பாலே போதும்னு இருக்குற... அப்படித்தானே...

காமா: ம்ஹூம், நம்ம சின்னப்பையன் சிங்காரம், டானிக் வாங்கத்தான் போயிருக்கான். நானும் மூணு மாசமா தான் சாப்பிடுறேன். மனசுல கவலை வந்துட்டா, என்ன சாப்பிட்டாலும் உடம்பு ஏத்துக்காது...தெரியுமா?

(சிங்காரம் டானிக் பாட்டிலுடன் உள்ளே நுழைந்தவாறு பேசுகிறான்)

சிங்கா: என்ன சாப்பிட் டாலும் என் உடம்பு ஏத்துக்கும்... எங்க அம்மா என்ன கொடுத்தாலும், அதை மட்டன் மாதிரி சாப்பிடுவேன்...ஏம்மா...(கொஞ்சலாக பக்கத் தில் பொன்னம்மாவை பார்த்துவிட்டு)[எச்சில் விழுங்கி முகத்தை சுளித்து]

யார்? அக்காவா... எப்ப வந்தீங்க, சுகமா இருக்குறீங்களா...மாமா எப்படி?

பொன்: எல்லாம் நல்லா இருக்கிறோம். நீ எப்படி? நல்லா இருக்குறியா? நல்லா படிக்குறியா? புத்தகம் எல்லாம் அட்டை போட்டு ஒழுங்கா வச்சிருக்கியா? அது சரி... ஸ்கூலுக்கு ஒழுங்கா போய் வர்ரீயா?...

சிங்கா: அக்கா... எல்லாத்துக்கும் ஒரே பதில், என் கிளாஸ்ல நான்தான் பஸ்ட், அப்படின்னு சொல்ல மாட்டேன், ஆனா, ரொம்ப கேவலமாவும் இல்லே. ரொம்ப கஷ்டப்பட்டு தான் படிக்கிறேன். ஆனா, என்னை சாமிதாக்கா கெடுத்துடுறாரு.

பொன்: சாமி படிப்பை கொடுப்பாருன்னு கேள்விப் பட்டிருக்கேன். ஆனா. கெடுப்பாருன்னு கேள்விப் பட்டதே இல்லியே! இந்த டீச்சருக்கும் புரியாதசேதியா இருக்கே! கொஞ்சம் புரியும்படியா சொல்லித்தாயேன்!

சிங்கா: அக்கா... மொத்தம் மார்க்கு 100 தானே! நான் எப்படி படிச்சி பரிட்சை எழுதினாலும், சாமி 80 ,90 மார்க்கை எடுத்துக்கிட்டு. மீதி 10, 20 மார்க்கை எனக்கு

பிச்சை மாதிரி போட்டுடுறுரு. சரி, சாமிதானே எடுத்துக்குறுரு. அவருகிட்ட போய் ஏன் சண்டை போடணும்! போறு போருருன்னு பெருந்தன்மையா நானும் விட்டுடுறேன்.

(பொன்னம்மா சிரிக்கிருள், பில். டானிக் இரண்டையும் அங்குள்ள நாற்காலியின் மீது வைக்கிருன்).

அம்மா! ஸ்கூலுக்கு நேரமாச்சு. டானிக் 15 ரூபாய். மீதி 5 ரூபாய். எடுத்துக்கங்கோ. அக்கா... நான் போறேன்... (கத்திக் கொண்டே வெளியே ஓடுகிருன்)

காமா : (பெருமூச்சு விட்டபடி) இவன் ஒருத்தன் தான் கொஞ்சம் பொறுப்பானவன். எந்த வேலை சொன்னு லும் தட்டவே மாட்டான். இவன் இருக்குறதுனுலதான் எனக்கு கொஞ்சமாவது நிம்மதியா இருக்குது. பெரிய பையன் பெரியசாமி மாதிரி இவனும் போயிட்டா, என் புருஷன் போன இடத்துக்கு நானும் இந்நேரம் போய் சேர்ந்திருப்பேன்.

பொன்: ஏன் காமு! பெரியசாமி எங்கே போனுன்? நாம பேசிக்கிட்டு இருந்ததுல. இவனே பத்தி விசாரிக்க முடியாம போச்சே. எங்கே போயிட்டான்? அக்கா வீட்டுக்கே அடிக்கடி போயிடுறுனு!

காமா : அவன் எங்கே போனுன்னே தெரியல! வழக்கமா போய் வாடிக்கைகாரங்ககிட்ட வசூல் வாங்கிட்டு வாடான்னு அனுப்பினேன். வாங்கப் போனவன் தான் பணத்தோட ஓடிப் போயிட்டாம்மா...

பொன் : ஓடிப்போயிட்டானு? இதென்ன பைத்தியக்காரத் தனமா இருக்கு. தான் பணத்தை தானே எடுத்துக் கிட்டு ஓடியிருக்கானே. அவனுக்கு சேர வேண்டிய பணம்னு அவனுக்கு தெரியாதா என்ன?

காமா : அவன் கேட்டிருந்தா நானே கொடுத்திருப்பேன், என்ன பண்றது? சேரக்கூடாத இடத்துல சிநேகிதம், சிகரெட்டுல இருந்து சினிமா வரைக்கும் ஒன்னையும் அவன் விட்டு வைக்கல, கைக்கு உதவியா இருப்பான்னு நினேச்சு செல்லம் கொடுத்தேன். அவன் கைம்பெண் வளர்த்த கழிசடையா போயிட்டான். வயசுக்கு வந்த பையன், அடிக்க மனசு இல்லே...அழுதே சாகுறேன்...ம்

பொன் : தகவல் ஒன்னும் இல்லியா...எனக்கு ஒரு லெட்டர் போட்டிருந்தா நானும் என் வீட்டுக்காரரும் வந்து ஏதாவது முயற்சி பண்ணி பார்க்க மாட்டோமா?

காமா : என் மருமகன் தான் தெய்வமா இருந்து காப்பாத்துது...அடிக்கடி வந்து அஞ்சு பத்துன்னு வாங்கிகிட்டு போய், பையனே தேடுது...அவரும் இப்படி ஆதரவா இல்லேன்னு, என் கதி அதோ கதிதான்... அதோ கதிதான்;

பொன் நீ கொடுத்து வச்சவ காமு. இரண்டு மகனுங்க போதாதுன்னு மூணுவது மகளு மருமகன் வந்திருக்காரு. எனக்கென்னமோ, உன் பையன் சீக்கிரமா வந்துடுவான்னு என் மனசுல படுது...

காமா: உன் வாய்க்கு சர்க்கரைதான் போடணும். ஆ... (நினைவுக்கு வந்தவளாய்) பொன்னு, இரு, உனக்கு நல்ல மோரா கலக்கிட்டு வர்ரேன்.

(பணத்தையும், பில்லையும் எடுத்து இடுப்பில் செருகிய வாறு உள்ளே போகிருள். பொன்னம்மா டானிக் பாட்டிலே எடுத்துப் பார்க்கிருள்)

பொன்: நான் சாப்பிட்ட டானிக்பாட்டில்போல இருக்குது விலே 10 ரூபாதானே. சிங்காரம் ஏன் 15 ரூபாய்னு சொன்னுன்? ஒருவேளே இவனும் காமாட்சியை ஏமாத்துருனே? ஓகோ, படிக்காதவ தாயா

இருந்தாலும் பாசமுள்ள மகனும் ஏமாத்துவாங்கறது நிஜமாதான் இருக்குது. ம்... என்ன உலகம் இது!

காமா: (இரண்டு கைகளிலும் டம்ளரை ஏந்தியபடி)

என்ன உலகமா? பூலோகம்தான். என் வீட்டுல காலடி வச்சதுமே உலகமே மறந்து போச்சு பார்த்தியா? இது என் வீட்டுக்குள்ள ராசி... பார்த்துகிட்டியா...

பொன்: பார்த்துகிட்டுதான் இருக்கேன். ஆனு விலேதான் அதிகமா இருக்கு.

காமா: விலையா! உலகத்துக்கே விலைபோடுறியா? ரொம்ப படிச்சாலே புத்தி குழம்பிப் போயிடுங்கறது சரியாதான் இருக்குது ம்...அது போதை பாட்டில் இல்லே...டானிக் பாட்டில்... கீழே வச்சிட்டு இந்த மோரை சாப்பிடு... எல்லாம் சரியா போயிடும்.

பொன்: (மோரைக் குடிக்கிருள். குடித்த பிறகு)

எல்லாம் சரியா போகணும்னுதான் நினைக்குறேன். ஆனு ஆண்டவன் ஏன்தான் உன்னே இப்படி அதிகமா சோதிக்கிருனே தெரியலே. உன்னுலே எப்படித்தான் இதையெல்லாம் தாங்கிக்க முடியுதோ?

காமா: ஏன் இப்படி மூடுமந்திரமா பேசுற? நான் உள்ளே போயிட்டு வர்ரதுக்குள்ளே உனக்கு என்ன ஆச்சு? சரி! நீ சீக்கிரம் வீட்டுக்குப் போ. நீ வந்த நேரம் சரியில்லே!

பொன்: நான் வந்த நேரம் நல்ல நேரம். வெள்ளம் வர்ரதுக்கு முன்னே அணைகட்டி வைக்குறது புத்திசாலித் தனம். வெள்ளம் வந்த பிறகு கட்ட முயற்சி பண்றது முட்டாள்தனம். காமு! நீ யாரை ரொம்ப நல்லவன்னு நம்புறியோ... அவன் உன் பெரிய பையனே ரொம்ப நல்லவனு ஆக்கிடுவான் போலிருக்கே! [பதறுகிருன்]

காமா: (அதிர்ச்சியுடன்) நீ என்ன சொல்றே? சிங்காரம் பெரியசாமியைவிட மோசம்னு சொல்றியா? கொஞ்சம் விவரமா சொல்லும்மா... நான் மோசம் போயிடுவேன் போலிருக்கே!

பொன்: இந்த டானிக் விலே 10 ரூபாதான். ஆனு உன் பையன் 15 ரூபான்னு சொன்னுனே, ஏன்?

காமா: (படபடப்புடன்) இந்தா பில் இருக்குதே... எப்படி என்னே ஏ-மாத்த முடியும்? ஒவ்வொரு தடவையும் பில் கொண்டு வந்து தர்ரானே!

(பில்லே எடுத்து பொன்னம்மாவிடம் தருகிருள்).

பொன்: (வாங்கிப் பார்த்துவிட்டு) இது மூணு மாசத்துக்கு முன்னே வாங்கின ஒரு மருந்தோட பில். அதைக்காட்டி உன்கிட்ட பொய்சொல்லி ஏமாத்தியிருக்கான். ஆமா... புது பில் இப்படியா கசங்கியிருக்கும். ஒவ்வொரு தடவையும் இந்த பில்லேக் கொடுத்து ஏமாத்துவானே என்னமோ?

காமா: (ஏதோ யோசித்தவாறு, ஒரு முடிவுக்கு வந்து) ஆமா! நான் மாடத்துல வைக்குற பில்லு காணுமே போயிடும், அது ஒரு வேளே காத்துல போயிருக்கும், கை மறதியாக எங்கேயாவது வச்சிருப்பேன்னு நினேச்சுக்குவேன், இப்பதாம்மா புரியுது! சிங்காரம் பண்ணியிருக்கிற சில்மிஷம்...ம் நான் இதுக்கு மேல என்ன செய்ய முடியும்...

பொன்: காமு, நீ படிக்காம இருக்கறதால உன்னே ஏமாத்த அவங்களுக்கு எவ்வளவு சுலபமா இருக்குது பார்த்தியா; ரொம்ப நாளா நீயும் ஏமாந்திருக்கே...ம் (முகர்ந்தபடி)

லே மரிஇரி

காமா: ஆமா ... அரை லிட்டர் பாலை அடுப்புல போட்டிருந்தேன். அதுதான் நல்லா காஞ்சி, தீஞ்சி போய்... அவ்வளவு நேரமா பேசிட்டோம்... வா... வா (உள்ளே போகிறாள்).

பொன்: சீக்கிரமா போ...

(இருவரும் உள்ளே போகின்றனர்).

(காட்சி முடிவு).

காட்சி-2

இடம்: காமாட்சி வீடு

உள்ளே: கந்தன், பெரியசாமி, காமாட்சி, பொன்னம்மா சிங்காரம்.

[பெரியசாமியின் ஒரு கையைமுறுக்கிப் பிடித்து முதுகில் அடிக்கிறான் கந்தன். அவன் கூப்பாடு போட்டு அழுகிறான்]

கந்தன்: பணத்தை தூக்கிக்கிட்டா ஓடுறே! படவாராஸ்கல், வயித்தை கட்டி, வாயை கட்டி மாடா உழைச்சி உங்க அம்மா காப்பாத்துறாங்க! அறிவு இல்லாம பணத்தோட ஓடுறியே! நீ உருப்படுவியா! உன் குடும்பம்தான் உருப்படுமா!

பெரி: அடிக்காதீங்க மாமா! நான் செஞ்சது தப்பு தான். இனிமே இந்த மாதிரி ஓடமாட்டேன். கையை விடுங்க. இழுக்கி பிடிக்குற மாதிரி வலிக்குது.

கந்: உன்னே விடமாட்டேன். உன்! அம்மா கையுல ஒப்படைச்ச பிறகுதான் விடுவேன் உன்னேத் தேடித் தேடி நாயா அலேஞ்சி என் உள்ளங்காலெல்லாம் தேஞ்சு போச்சுடா பாவி!

பெரி: (கிண்டலாக) செருப்பு போட்டுகிட்டிருந்தா கால் தேயுமா? அந்தப் பழக்கம்தான் இல்லியே!

கந்: கிண்டலா பண்றே? கழுத்தை உறிஞ்சுபுடுவேன்! கழுதே! அத்தே! அத்தே! வாங்க! வந்து பாருங்க! உங்க புத்திர சிகாமணி வந்துட்டான்.

(காமாட்சியும் பொன்னம்மாளும் உள்ளேயிருந்து வருகின்றனர். பொன்னம்மாளின் ஆச்சரியம் காமாட்சியின் மிக சாந்தமான பார்வை. இதைப் பார்த்த பெரியசாமி பதறிப்போய்)

பெரி: அம்மா நான் திரும்பி வந்துட்டேம்மா! இனிமே ஒழுங்கா உனக்கு உதவியா இருக்குறேம்மா! என்னேப் பார்த்ததும் திட்டுவீங்க, அடிப்பீங்க, வீட்டை விட்டு வெளியே போடான்னு விரட்டுவீங்கன்னு நினேச்சேன் ஆனு, நீங்க பேசாம இருக்குறதை பார்த்தா எனக்கு பயமா இருக்கும்மா, எனக்கு பயமாயிருக்குது.

காமா: எனக்கும்தான் மகனே பயமா இருக்குது. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாம, பால் வியாபாரத்துக்கு உதவியா இருக்க உன்னே வச்சுகிட்டேன், ஆனு, நீயோ பொய் சொன்னே. ஏமாத்துனே, திருடுனே! பாக்கிப் பணத்தோட ஓடினே... இனிமே, நீ கொலே கூட செஞ்சிடுவியோன்னு எனக்கு பயமா இருக்குதப்பா...,

பெரிய: இல்லேம்மா! திருந்திட்டேன்... சத்தியமா, உன் மேலே ஆணையா திருட மாட்டேன், ஏமாத்த மாட்டேன்.

(இந்த நேரத்தில் சிங்காரம் அவசரமாக வருகிறான், அண்ணனைப் பார்த்ததும், கிண்டல் செய்கிறான்.)

சிங்கா: அடடே, போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோட...அண்ணே! ஏன் வந்துட்டே! காசு தீர்ந்து போயிடுச்சா...

கந்: அவன் எங்கடா வந்தான்! ஓட்டேரியில ஒரு ஓட்டல் முன்னால் பசியில பரிதாபமா பாத்துகிட்டு நின்னான். போய் பக்குன்னு பிடிச்சி கொண்டாந்துட்டேன். கால கண்டன் கிட்டயிருந்து தப்பலாம். இந்த கந்தன் கிட்டயிருந்து தப்ப முடியுமா!

பெரிய: கைய விடுங்க மாமா...நான் இந்த வீட்டுக்கு தலை புள்ளே...இனிமே புத்திசாலியா பொழைக்குறேன் பாரு...(திமிறிக் கொண்டு உள்ளே போகிறான்).

சிங்கா: அம்மா! அண்ணன் வந்தாச்சு. பார்த்தாச்சா... ரொம்ப அவசரம், 5 ரூபா வேணும். இல்லேன்னா, வாத்தியார் வகுப்புக்குள்ளே விட மாட்டாரு. அப்புறம் பரிட்சை எழுத முடியாது. அப்புறம் நான் பெயிலாயிடுவேன். சீக்கிரம் தாம்மா...ஏன் அப்படி பார்க்குறே?

காமா: சிங்காரம்! நீ பள்ளிக்கூடம் போகவும் வேணும், பரிட்சை எழுதவும் வேணும், பெயிலா போகவும் வேணும், நான் கவலைப்படவும் வேணும், ஏன் பொன்னம்மா, (கேலியாக)

பொன்: 10 ரூபா டானிக்... 15 ரூபாயாச்சு: 5 ரூபா அவசரம். எந்த வாத்தியார்ப்பா ரூபா தரலேன்னா வகுப்புக்கு விடலே! நான் வர்ரேன். வா போவோம். (கந்தன் சிங்காரத்தைப் பிடித்துக் கொள்கிறான்).

கந்: நிசத்தை சொல்லு. டானிக்ல ஏமாத்துனியா... சொல்லு. இல்லே பல்லே கழட்டி பல்லாங்குழி ஆடுடி வேன்...ம்...(கையை முறுக்குதல்).

சிங்கா: ஆமா...பழைய பில்லே வச்சி அம்மாகிட்டே அப்பப்பொ ரூபாய் எடுத்துக்குவேன், ஐஸ் விக்கிறவன் கிட்ட 5 ரூபாய் கடன், அவன்தான் என்னே விரட்டுறான், தரலேன்னு, அடிச்சு கொண்ணுடுவான். (பெரியசாமி உள்ளேயிருந்து வந்து)

பொன்: என் தம்பியும் என்னே மாதிரிதான் இருக்குறான். ஒரு நல்ல அம்மாவுக்கு இரண்டு பேரும் இப்படி அவதாரமா வந்து புறந்திருக்கோமே! அவமானம்... இந்த கெட்ட பேரு போறதுக்கு இன்னும் எத்தனே வருஷம் ஆகுமோ?

பொன்: கெட்ட பேரு எடுக்க ஒரு நிமிஷம் போதும், நல்ல பேரு எடுக்க ஒரு நாள் இல்லேப்பா. . வாழ்நாள் பூராவும் ஒழுங்கா இருக்கனும், நம்ம தேசத் தந்தை காந்தி மாதிரி.

கந்த: இந்த ரெண்டு பசங்களும் திருந்த மாட்டாங்க, என்கிட்ட ஒரு மாசம் இருந்தா போதும். அடிச்சு வளர்க்காத புள்ளேயும், முறுக்கி வளர்க்காத மீசையும் உருப்படியாகாது...

காமா: இனிமே உங்க பொறுப்பிலேயே விட்டுடுறேன். ஏங்க? பசங்களே அழைச்சுக்கிட்டு நீங்களே உள்ளே போய் ஒரு டம்ளர் பால் சாப்பிட்டுட்டு வாங்க... நீங்கதான் இன்னேயிலேலிருந்து அவங்களுக்கு எல்லாம்.

(மூவரும் உள்ளே போகின்றனர்).

பொன்: காமு, நான் வந்து ரொம்ப நேரமாச்சு, வந்த வேலையை ஞாபகம்இருக்கும்பொழுதேசொல்லிடுறேன்.

காமா: ஆமா பொன்னு. சீக்கிரம் சொல்லு, அதுக்குள்ளே வேற விவகாரம் ஏதாவது வந்துடப் போவுது!

பொன்: போன மாசம் எனக்கு அவசரம்னு என் தங்க சங்கிலியை கொடுத்து, அடகுக் கடையில பணம் வாங்கச் சொல்லுலே...இந்தா 200 ரூபாய்... வட்டி 6 ரூபாய், , இப்பவே எனக்கு அவசரமா வேணும், ஒரு முக்கியமான கல்யாணம்,

காமா: அதுக்கென்ன. நம்ம மருமகப்பிள்ளை தான் வச்சி வாங்கிட்டு வந்தாரு, அவரும் இங்கதான் இருக்காரு! நல்ல வேளை...ரசீதும் இங்கே தான் இருக்கு. (பெட்டியில் இருந்து எடுக்கிருள்)

கந்தன் வாயை துண்டால் துடைத்தபடி வெளியே வருகிருன்),

கந்: அத்தே! நல்லா பசங்களுக்கு புத்திமதி சொல்லியிருக்கேன், இனிமே ஒழுங்கா, யோக்கியமா இருப்பானுங்க, நான் போய் பெரியசாமி வந்த விஷயத்தை பாப்பாத்தி. கிட்ட சொல்லி அழைச்சுகிட்டு வந்துடுறேன்,

காமா: சரிங்க...அதுக்கு முன்னே ஒரு அவசரம், போன மாசம் நகை ஒன்னு அடகு வைக்குலே, நம்ப பொன்ன மாளுதுதான். இந்தாங்க வட்டியும், பணமும், இப்பவே திருப்பித் தந்துடுங்க......

கந்: (தடுமாறுகிருன்) இப்பவே வா...எனக்கு கொஞ்சம் அவசர வேலை...நாளைக்கு...சாயங்காலம் தான்... தோதுபடும்...நான் போய்ட்டு...வந்துடுறேனே...

பொன்: அப்படின்ஞ, நானும் உங்க கூட வர்ரேன், அந்தக் கடையில கையெழுத்து போட்டுட்டு போங்க... நான் இருந்து வாங்கிகிட்டு போயிடுறேன், ஏன்ஞ,

சங்கிலி இல்லாம எந்தக் கல்யாணத்துக்கும் நான் போற பழக்கம் இல்லே... வாங்க போகலாம்... (பணத்தை அவன் எண்ணும் பொழுது, கை நடுங்கி ரசீது கீழே விழ, அதை எடுத்துப் பார்க்கிருள் பொன்னம்மாள்)

பொன் : காமாட்சி, 400 ரூபாய்க்கு ரசீது இருக்கு...

காமா : 400 ரூபாய்க்கா! வேறு ரசீது ஒண்ணும் இல்லியே! இது மட்டுந்தானே இருக்குது. ஏங்க... நீங்க 200 ரூபாய்தானே தந்தீங்க. இதுல 400 ரூபாய் எப்படி வரும். கடைக்காரன் தப்பா பில் போட்டுட்டாரு! வாங்க கடைக்கு போவோம்...

கந் : அத்தை மன்னிச்சுடுங்க! நான் 400 ரூபா தான் வாங்கினேன், உங்ககிட்ட கொடுத்தது. 200 ரூபாதான். திருப்பித் தரும்போது அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்னு உங்ககிட்ட சொல்லுலே. இப்ப அவங்களே நேரில வந்ததுனலதான் நிலைமை மாறிப்போச்சி.

காமா : ஏங்க! நீங்களுமா என்னே ஏமாத்திஙிங்க! ஐயோ கடவுளே! இந்த உலகத்துல நான் யாரைத்தான் நம்புறதுன்னு தெரியலியே!

[பெரியசாமியும் சிங்காரமும் ஓடிவந்து, கந்தனின் ஆளுக்கொரு கையைப் பிடித்துக்கொண்டு]

இரு : மாமாவும் நம்ம கேஸ்தான் (சிரிக்கின்றனர்)

கந் : கைய விடுங்கடா! நான் போறேன், வீட்டுக்குப் போய் பணத்தோட வர்றேன்,

இரு ; அம்மா! மாமா கூட நாங்களும் போறோம்!

காமா : யாரும் யாரோடயும் போக வேணும், நானே போறேன், நான் போறதுக்கு நேரம் வந்தாச்சு.

இனிமே நான் இங்கேயிருந்தா—அவமானம் தாங்க முடியாமே செத்தே போயிடுவேன், இவ்வளவு தூரம் நடந்த பிறகு நான் இங்கே இருக்குறது நியாயமில்லே! நியாயமேயில்லே!

[பொன்னம்மாள் நடப்பவளைத் தடுக்கிறாள்.]

வழியை விடு பொன்னு! நான் ரொம்ப மானஸ்தி, நான் பால்காரிதான். என் மனசும் பால் மாதிரிதான். பால்ல மோரு விழுந்தா தயிரா போகும். அது உபயோகமா இருக்கும். விஷம் விழுந்துட்டா, அப்படித் தான் என் வாழ்க்கையும் வீணா போயிடுச்சே! நான் வர்ரேன்,

[சிங்காரமும் பெரியசாமியும் ஆளுக்கொரு காலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தடுக்கின்றார்கள்]

இரு : நாங்களும் வர்ரோம்,

காமா : வேணும். இத்தனை நாளும் என்னைக் கட்டிப் போட்டிருந்த குடும்பம், பந்தபாசம் எல்லாம் இன்னி யோட முடிஞ்சு போச்சு...எனக்கு நேரம் வந்தாச்சு...

கந் : அத்தே! என்னாலதான் நீங்க இந்த முடிவுக்கு வந்திட்டீங்க...நாங்க எல்லோருமே பாவிங்கதான்... எங்களை மறந்து மன்னிச்சுடுங்க...

காமா : அதெப்படி முடியும்...நீங்க எல்லோரும் பாவிங்க இல்லே...சாமிங்க...என் கண்ணை திறந்து விட்ட சாமிங்க...இந்த உலகத்தை புரிய வச்ச தெய்வங்க...

இரு : போகாதீங்க...போகாதீங்க...

காமா : போகத்தாண்டா போறேன்...இத்தனை நாளு படிக்காத ஜென்மமா இருந்த காமாட்சி, புது ஜென்மம்

எடுக்கப் போறேன்டா...நானும் போய் நாலு வார்த்தை கத்துகிட்டு வந்து...

மூவரும் : நாலு எழுத்தா...

காமா : ஆமா...முதியோர் கல்வின்னு நீதானே பொன்னு சொன்னே...அங்கே போய்...படிச்சுகிட்டு வந்து... உங்களை என்ன பண்றேன் பாரு...

எல்லோ : அப்படியா...[ஆச்சரியத்துடன்]

காமா : ஆமா! நேரம் வந்தாச்சு! என்னை போல காமாட்சிங்க இந்த நாட்டுலே ஏராளமா இருக்காங்க...அவங்களுக்கும் கத்துக்குற நேரம் வந்தாச்சு...இனிமே நிற்க நேரம் இல்லே...போய்ட்டு வரேன்,

இரு : மகராசியா போய்ட்டு வாம்மா,

எல்லோரும் சிரிக்கின்றார்கள்.
(காட்சி முடிகிறது)

கொஞ்சம் பொறுங்க

கதை மாந்தர்கள்

1. ஏகாம்பரம் — வியாபாரி
2. சரஸ்வதி — ஏகாம்பரத்தின் மனைவி
3. சுந்தரி — ஏகாம்பரத்தின் மகள்
4. வேல் முருகன் — சுந்தரியின் மாமன் மகன்
5. வரதன் ... சுந்தரியின் அத்தை மகன்
6. சுப்ரமணியன் ... விவசாயி

கொஞ்சம் பொறுங்க

காட்சி 1

உள்ளே! சுந்தரி, வேல் முருகன், வரதன்: ஏகாம்பரம்: சரஸ்வதி.

சுந்தரி, தன் பெற்றோர்களை எதிர்பார்த்த வண்ணம் வாசலுக்கும் வீட்டுக்கும் நடந்து கொண்டிருக்கிறாள். நாற்காலியில் உட்காருகிறாள், பின் பெருமூச்சுடன் எழுந்து வெளியில் பார்க்கிறாள்.

சுந்தரி: ஏழு மணியாச்சு! இன்னும் வரலே! கூட்டத்துலே பேசப்போனா. பேசுனோம், முடிச்சோம்னு வந்துட வேண்டியதுதானே! இன்னும் காணோம்! கூட்டமோட கூட்டமா ஒன்னு கலந்துட்டாங்க போல இருக்கு.

பேச ஆளு கிடைச்சா அப்பா விடமாட்டாரே! அம்மாவும் கூட போனாங்களே! வாங்கன்னு கைய பிடிச்சு இழுத்துக்கிட்டு வந்துடக் கூடாது, வரவர அம்மாவும் மோசம்—

நான் வீட்டில தனியா இருக்குறேன்னு ஒரு கவலே இருந்தாதானே. (கையில் வைத்திருக்கும் புத்தகத்துடன் எட்டிப் பார்க்கிறாள். வேல் முருகன் வருகிறான்)

வேல்முருகன்: என்ன சுந்தரி! என்ன பார்க்கிறே? யாரையோ எதிர்பார்க்கு மாதிரி இருக்கு..., நிச்சயம் அது நானா இருக்க முடியாது...ம் என்கிட்ட சொல்லு... எதைவேணுமின்னாலும் தைரியமா சொல்லலாம்,

சுந்தரி: உங்ககிட்டே சொன்னா கேட்கத்தான் செய்வீங்க போய் தூக்கிகிட்டா வந்துட முடியும்.

வேல்முருகன்: [சிரித்துக்கொண்டே] நான் அனுமாரும் இல்லே. நீ சஞ்சீவி. மலையைத் தூக்கிக் கொண்டு வான்னு கேட்கப் போறதும் இல்லே! ஆத்திர அவசரத்துல ஒருத்தருக்கு ஒருத்தர் ஒத்தாசைதான். நீ ஆசைப்படுறதை சொல்லு. முடிஞ்சா டிரைபண்றேன் இல்லேன்னா...

சுந்: சாரின்னு சொல்லிட்டு போயிடுவீங்க... எனக்கு நல்லா தெரியும். நீங்க அப்படி சொல்லமாட்டிங்க... ஏன்னா, நீங்க என் அத்தை பையனாச்சே...,. அந்த நினைப்பு கூடவா உங்களுக்கு இருக்காது...

[சுந்தரியின் மாமன் மகன் வரதன் வேகமாக வந்து கொண்டிருக்கிறான். கையில் பேப்பர் ஒன்றை சுருட்டியவாறு வருகிறான்.]

நீங்க என்னை மறந்தாலும் என் மாமன் மகன் எனக்கு உதவாமலா போவாரு...அதோ பாருங்க! வர்ர வேகத்தைப் பாரீத்திங்களா!

வேல்: அவனும் என்னை மாதிரி அசமந்தமா இருந்தா என்ன செய்வே!

சுந்: நானே போய் பார்க்கிறேன், பெண்ணுன்னா பேயும் இறங்குமின்னு சொல்வாங்க. அதோ வந்தாச்சு!

வர: [வந்து கொண்டே] பேய் இரங்குதோ இல்லியோ நான் இரங்குவேன். கவலைப்படாதே சுந்தரி. இந்த வேல்முருகன் ஏதாவது உன்கிட்ட வம்பு பண்ணுனு! சொல்லு, எனக்கு இந்தப் பெண்களை வம்பிழுக்கிறதே புடிக்காது, பெண்கள் தெய்வத்துக்கு சமம்னு என் பாட்டி அடிக்கடி சொல்லுவா.

[அசட டுத்தனமாக சிரிக்கிருன்.

வேல்: பக்தர் வந்திருக்காரு....... பார்த்து சொல்லுங்க. நான் எப்பவுமே பெண்களை பெண்களாகத்தான் நினைக்குறது. வேற மாதிரி நினைப்பான்னு கத்துத் தர்ரதுக்கு எனக்கு பாட்டி இல்லே..., அவ பாதியி லேயே போயிட்டா [புறப்படுகிருன்]

சுந்: பாதியிலே நீங்களும் போயிட்டா எப்படி? கூட்டத்துக்கு போன அப்பாவையும் அம்மாவையும் இன்னம் காணும். என்ன ஆச்சோ தெரியலே! எனக்கு பயமா இருக்கு

வேல்: கண்ணுபின்னுன்னு உங்க அப்பா ஏதாவது பேசியிருப்பாரு எவனுவது கல்லெடுத்து வீசியிருப்பான்?

வர: அவன் எவண்டா என் மாமனை கல்லால் அடிக்கிறவன்? கையில கிடைச்சா காலை கைய பார்ட் பார்ட்டா பிச்சிடமாட்டேன்!

சுந்தரி! நீ கவலைப்படாதே. இந்த வட்டாரத்துலே வரதன்னு சொன்னுலே வஸ்தாதுகளே சலாம் போட்டுட்டு ஓரம் கட்டிக்குவாங்க, என் மாமனே ஏகாம்பரத்தை எவனுவது டச் பண்ணுனன்! தொலைஞ்சான். நீ பயப்படாதே! நான் போய் இரண்டு பேரையும் கொண்டாந்துடறேன்,

[வேகமாக போகிருன்]

வல்: அனுமாரு உனக்குக் கிடைச்சாச்சு. இனிமே கவலையை விடும்மா.... சுந்தரி! ஏதாவது புதுசா புத்தகம் இருந்தா கொடேன்! வாங்கலாம்ன்னு வந்தேன்... இருந்தா கொடும்மா... நீ கொடுத்த புத்தகம் ரொம்ப நல்லாயிருந்தது, தாங்ஸ் [புத்தகத்தைத் தர அவள் வாங்கி கொள்கிறாள்]

கந்: வரதனை பார்த்தீங்களா! மனுஷாளுக்கு வேகம் இருந்தா மட்டும் போதுமா! விவேகம் வேண்டாமா எங்கே மீட்டிங்ன்னு தெரியாம இவரு எப்படித் தேடி கண்டு பிடிப்பாரு?

வேல்: ஆமாம்! அட மடப்பயலே! இப்படி ஒருத்தன் இருப்பானா! சுந்தரி! எந்த இடம்னு சொல்லு! நான் போய் பார்த்துட்டு வர்றேன். அவர் உனக்கு அப்பாவா இருக்கலாம்! ஆனா எனக்கு தாய் மாமன் தெரியுமா...!

கந்: ஆமாம்! இரத்த பாசம் எப்படின்னு எனக்குத் தெரியும் [கேலியாக சிரித்தவாறு] இந்தாங்க அழைப்பிதழ்.

வேல்: அழைப்பிதழை படித்தபடி ..

வியாபார மேதை ஏகாம்பரம் தலைமை தாங்குகிறார். திருமதி ஏகாம்பரம் பரிசுகள் வழங்குவார். அடி சக்கை! உங்க அப்பா அம்மா புகழ் கன்னாபின்னான்னு ஊரெல்லாம் பரவிகிட்டு இருக்கு. வர்ரேன்.

[வேல்முருகன் போனதும், சுந்தரி வீட்டிற்குள் வந்து கடிகாரத்தைப் பார்க்கிறாள். புத்தகத்தை அங்கிருக்கும் மேசை மேல் வைத்துவிட்டு திரும்பும் பொழுது, ஏகாம்பரம் வேக வேகமாக வீட்டிற்குள் நுழைகிறார்]

[ஏகாம்பரம் கோபமாக துண்டைத் தூக்கி எறிகிறார். கையிலிருந்து மாலையை வீசி எறிகிறார்]

சுந்: என்னப்பா இது! மூச்சு வாங்குற வேகத்தைப் பார்த்தா உயிருக்கு பயந்து ஓடி வர்ர மாதிரி இருக்கு! என்ன நடந்தது! ஏன் இப்படி? [கீழே கிடப்பதை எடுக்கிறாள்]

ஏகா: போச்சு! என் மானம், கௌரவம் எல்லாமே போச்சு! இதுக்கு மேலே ஒண்ணும் கேட்காதே சுந்தரி! அப்புறம் ஏதாவது சொல்லிடுவேன். என்னை கொஞ்ச நேரம் தனியே விட்டுடு.

சுந்: இரண்டு பேரா ஜோரா புறப்பட்டு போயிட்டு. இப்ப தனியா வந்து நிற்குறீங்களே! ஏன்? கேட்குறேன். என் அம்மா எங்கேப்பா? முத முதலா உங்க கூட வந்து மேடையில உட்கார்ந்தாங்களே! அதனாலே வெட்கப் பட்டுகிட்டு வெளியே நிற்குறாங்களா...இல்லே...

ஏகா: (கேலியுடனும் எரிச்சலுடனும்) வெட்கப் பட்டுகிட்டே என்கூட வந்தா...வெட்கப்பட்டுகிட்டே மேடையில் என் பக்கத்தில உட்கார்ந்தா...இப்பவும் வெட்கப்பட்டுகிட்டேதான் வெளியில நிக்குறா...ஐயோ! அவமானம் பிடுங்குத் திங்குது...பேசாம சன்னியாசியா போயிடலாம் போல தோணுது......

சுந்தரி: அம்மா வெளியில நிற்குறாங்களா......ஏன்? ஏன்? அம்மா! அம்மா! [வெளியில் சென்று அம்மாவை அழைத்துக் கொண்டுவருகிறாள்] அம்மா! இது உங்க வீடு! நான் வேற யாரும் இல்லே! உங்க மகதான் ஒரே மக...சுந்தரி! என்னை பார்க்க வெட்கப்பட்டுகிட்டு ஏம்மா வெளியே நின்னிங்க...

[சரஸ்வதி தலைகுனிந்தவாறு நிற்கிறாள். ஏகாம்பரம் அவளை முறைத்துப் பார்க்கும் பொழுது, ஓரக்கண்ணால்

தன் கணவனைப் பார்த்துவிட்டு, மறுபுறம் திரும்பிக் கொள்கிறாள்]

ஏகாம்: என்னை பார்க்காதே! எரிச்சலா இருக்குது. கூட்டத்தில் இருந்தவனெல்லாம் என்னை ஏளனமா பார்த்தானுங்க, எனக்கு எப்படி இருந்தது தெரியுமா! எரியுற வீட்டில என்னைத் தூக்கிப் போட்ட மாதிரி இருந்தது.

சரஸ்: நான் வரலேன்னு சொன்னேனே! கேட்டீங்களா! வரட்டுப் பிடிவாதமா வந்துதான் ஆகணும்னு கூட்டிக் கிட்டு போனிங்க...நல்லா வாங்கி கட்டிக்கிட்டிங்க... அதுக்கு என்னை என்ன பண்ணச்சொல்றீங்க...மன்னிப்பு கேட்டுக்குறேன்.... தப்பு... தப்பு... தப்பு... தப்பு...... (கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள்).

ஏகாம்: ஆயிரந்தான் சொல்லு...என் ஆத்திரம் அடங்காது. நடந்ததை சொன்னா நீயே நாக்கைப் புடுங்கிக்குவே... அந்த சிரமம் உனக்கு வேண்டாம்மா! சுந்தரி...இப்ப நான் கேட்கப்போற கேள்விக்கு, ஏன்னு கேட்காம பட்டு பட்டுன்னு பதில் சொல்லணும். நீ எத்தனாவது படிச்சிருக்கே!

சுந்தரி: என்ன கேள்விப்பா...ம்...பி. ஏ. படிச்சிருக்கேன்.

ஏகாம்: சரி! நான் எதுவரை படிச்சிருக்கேன்,

சரஸ்: நான் சொல்றேன்! படிக்க உங்களுக்கு ஏது நேரம் வியாபாரம்... வேலை... வேலை...பத்து வயசுல வேலைக்காரபையனா போனிங்க... படுத்துக் தூங்கக்கூட நேரம்? பத்தாம பாடுபட்டிங்க. பணத்தை சேர்த்திங்க. பெரிய பணக்காரரா ஆயிட்டிங்க.

அப்புறம் என்னோட அழகைப் பார்த்துட்டு, ஒத்தக்கால்ல நின்னு, கெஞ்சிக் கூத்தாடி, கண்ணாலம்

கட்டிக்கிட்டிடுங்க, உங்க வாழ்க்கை வரலாற்றை நானே சொல்லிட்டேன். போதுங்களா! புகழ் விளம்பரம்னு ஒவ்வொருத்தருக்கு எவ்வளவு ஆசை? ம்...இதையே ரெக்கார்டு எடுத்துட்டா, போட்டுப் போட்டு கேட்க லாம். பட்டி தொட்டியெல்லாம் பேசிக்கும், அதை முதல்ல செய்யுங்க.

ஏகாம்: என்னம்மா கிண்டல்!... பேரைப்பாரு சரஸ்வதியாம் சரஸ்வதி! சுந்தரி! நீ கேளும்மா! நான் படிக்காதவன் தான். பணம் சம்பாதிக்குற வேகத்துல, படிக்காம இருந்துட்டேன். அதுக்காக விட்டேனு! நானும் முயற்சி செய்து கையெழுத்து போட கத்துக்கிட்டேனு இல்லியா!

சுந்தரி: அதையும் நான் தானேப்பா கத்துச் கொடுத்தேன்! கையெழுத்துப் போட மட்டும் தெரிஞ்சா போதும்னு சொல்றிங்களா!

ஏகாம்: நாச்சிமுத்து மகன்! ஏகாம்பரம்னு சொல்றதுக்கு. நா. ஏன்னு கத்துகிட்டு, கையெழுத்துப் போட்டேன்.

சரஸ்: (சிரித்துக் கொண்டே) பார்த்தவன் எல்லாம் நாயன்னு படிச்சான், கூப்பிட்டவன் எல்லாம்...

ஏகாம்: நாயேன்னு கூப்பிட்டான். ஏண்டி கப்சா உடுறே! என்னபண்றது?என் தலை எழுத்து அப்படி வந்துசேருதே. அதுக்காக விட்டேனு! கஷ்டப்பட்டு கத்துக்கிட்டேன். கையெழுத்தை முழுசா போட்டேன், புஸ்தகம் படிக்க ஆரம்பிச்சேன், இப்ப மேடையேறி பேசவும் பேசுறேன்!

சரஸ்: ரொம்ப சந்தோஷம். படிக்காம படிச்ச மேதை அதிசயமான மேதைன்னு பட்டம் கொடுத்துட்டேன். போதுமா! சுந்தரி! உள்ளே போய் தாம்பாளத்துல மஞ்சத்தண்ணீ கொண்டுவந்து ஆரத்தி எடும்மா! அப்பதான் திருஷ்டி கழியும்,

ஏகாம்: கொஞ்சம் பொறும்மா! இவ்வளவு பேசுருளே! நான் ஏன் இப்படி குதியா குதிக்கிறேன். தவியா தவிக்கிறேன்னு! ஒரு நிமிஷம் நினேச்சுப் பார்த்தா இப்படி பேசுவாளா! மேடையில ஸ்டெயிலா நின்னு பரிசுகளே வாங்கி சிரிச்சிக்கிட்டே உங்க அம்மா குடுத்தா...ஆகா! ரொம்ப அழகா இருந்தது. எனக்குப் பெருமை யாவும் இருந்தது. ஆளு நாலேஞ்சி பேரு வந்து, ஆட்டோகிராப்ல கையெழுத்து கேட்டு நோட்டை நீட்டுனுனுங்க. அப்ப...உங்கம்மா முழிச்சாளே ஒருமுழி... ஆடுதிருடிய கள்ளி மாதிரி! ஐயோ! அதை நினேச்சா தான் எனக்கு ஆழ்ந்தாநிது போகுது! பேரு சரஸ்வதி! ஆளு தற்குறி! கையெழுத்துப் போடத் தெரியாத ஜென்மம், ஜடம்! ஜடம்! (தலையிலடித்துக் கொள்கிருர்).

சரன்: அவர் இப்படிதான்! இடம் குடுத்தா மடம் பிடுங்குவாரு. ஜடமாம் ஜடம்...போம்மா! தலே வலிக்குது! காபி கொண்டுவாம்மா...ஸ்ட்ராங்கா...

சுந்தரி: அம்மா! முதல்ல தேவை காபியா... திருஷ்டி கழிக்க மஞ்சத் தண்ணியா...உங்க ரெண்டு பேருக்குள்ள சண்டை வந்தா ஏன் இப்படி என்னேப் போட்டு உருட்டி எடுக்குறிங்களோ தெரியலே! நீங்க ரெண்டு பேரும் சண்டை முடிஞ்சு சமாதானம் ஆனபிறகு கூப்பிடுங்க. வர்ரேன்! அதுவரைக்கும் உங்களுக்கு வணக்கம் கூறி விடைபெறுவது உங்க ஒரே மகள் சுந்தரி!

(உள்ளே போகிருள்)

ஏகாம்: ஏண்டி! சுந்தரியை அனுப்பிட்டே! நாம போடுற சண்டைக்கு நீதிபதியா இல்லாட்டியும், வேடிக்கை பார்க்கவாச்சும் ஒரு ஆள் வேண்டாமா? அப்பத்தானே சுவாரஸ்யமா இருக்கும்.

சரஸ்: இதோ பாருங்க நான் படிக்காதவதான். படிக்காத மூடம்தான். மட ஜென்மந்தான். அதுக்காக நான் வருத்தப்படலே, வேதனைப்படலே. உங்க முன்னேற்றம் தான் எனக்கு பெரிசு. உங்க புகழ்தான் எனக்கு லட்சியம். உங்களை புகழ்ந்தா அதுவே எனக்கு சந்தோஷம். உங்க வியாபாரம், உங்களோட வாழற வாழ்க்கை இதுதான் எனக்கு உலகம். போதுங்களா! நீங்க அடிக்கடி ஒண்ணு சொல்லுவிங்களே. அதை மட்டும் சொல்றேன். பிறகு உங்க இஷ்டம்!

ஏகாம்: பெரிய பிரசங்கமே பண்ணிட்டே! அப்புறம் என்ன! படிக்கிறதுதானே!

சரஸ்வதி: ஒரு ஆணோட முன்னேற்றத்தின் பின்னால, ஒரு பெண்ணோட தியாகம் மறைஞ்சு கிடக்குதுன்னு நீங்க அடிக்கடி சொல்வீங்களே! அது உண்மைன்னு, நான் படிக்காததுக்கு வெட்கப்படலே, இப்படியே இருந்து உங்களுக்கு ஒத்தாசையா வாழ்ந்து, இந்த பிறவியை முடிச்சுக்குறேன். அடுத்த பிறவியில நான் படிச்சு பெரிய மேதையாகிடுறேன்.

(வெளியிலிருந்து ஒரு குரல் கேட்கிறது)

சுப்ர: ஐயா இருக்காங்களா... சுப்ரமணியம் வந்திருக்கேன்

ஏகா; வாப்பா சுப்ரமணியம்! என்ன இந்த நேரத்துல... பாண்டை பைசல் பண்ணிட்டேன். வாங்கிகிட்டியா... வேற ஏதாவது கடன் வேணுமா?

சுப்ர: இப்போதைக்கு வேண்டாங்க. நான் என் பத்திரத்தைக் கேட்டேன். அம்மா கொடுத்த பாண்டு, வேற ஒருத்தரோடது. அதை நானும் பார்க்கல்லே. இப்பத்தான் என் தம்பி சொன்னான். தெரிஞ்சதும் ஓடோடி வந்தேன்.

ஏகா: இப்படிக் கொண்டாப்பா! ஆமா.! இது ஆறுமுகம் எழுதிக் கொடுத்த பாண்டு.

சுப்ர: என் கடன் 500 ரூபாய்ங்க, ஆனா, ஆறுமுகத்தோட கடன் 5000 ரூபாய்னு போட்டிருக்கு! அது என்கிட்ட வந்துடுச்சி.

ஏகா: ரொம்ப நல்லதா போச்சு! உன்கிட்ட கிடைச்ச மாதிரி, யார் கிட்டேயாவது இது கிடைச்சிருந்தா எப்படி எப்படியோ பண்ணியிருப்பான். நீ போய் நாளைக்குக் காலையில் வா! எடுத்து வைக்கிறேன்.

சுப்ர: ரொம்ப உதவிங்க... நான் காலையில வந்து பார்க்குறேங்க. (போகிறான்)

(அவன் போன பிறகு, ஏகாம்பரம் தன் மனைவியை அலட்சியமாகவும் பிறகு கோபமாகவும் பார்த்து)

கா: பார்த்தியா சரஸ்வதி! பாண்டு பத்திரத்தை பார்க்காம எடுத்துக் கொடுத்திருக்கியே, இதற்கு என்ன சொல்றே?

சரஸ்: நீங்க சொன்ன அடையாளப்படிதான் எடுத்துக் கொடுத்தேன்: நீங்க சரியா சொல்லியிருந்தா நானும் சரியா எடுத்துக் கொடுத்திருப்பேன். இருந்தாலும் என் தப்புத்தாங்க, இந்நேரம் 5000 ரூபாய் நஷ்டம் ஆகியிருக்குமே!

ஏகா: படிப்போட அருமை புரியுதா... போய் அந்தப் பத்திரக் கட்டை எடுத்துகிட்டு வா. இதை வச்சிட்டு அதை எடுத்துத் தர்றேன். நாளைக்கு நீயே கொடுத்திடு!

[பீரோவைத் திறந்து சரஸ்வதி ஒருகட்டினை எடுத்துக் கொண்டுவந்து தருகிறாள். அதை ஏகாம்பரம் பிரித்து பார்க்கிறார், அதில் சுப்ரமணியத்தின் பாண்டினைக் காணவில்லை.]

என்ன ஆச்சரியமா இருக்கு! சுப்ரமணியத்தோட பாண்டைக் காணோம்

சரஸ்: எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க.

ஏகா: கையை பிசைஞ்சுகிட்டே நின்னுகிட்டு இந்த விவ காரத்தை கைகழுவிட்டே! இப்ப அவஸ்தை படுறது நான் தானே! ஒரு குடும்பத்துல தலைவி படிச்சவளா இருந்தா, அது ஓராயிரம் டீச்சருக்கு சமம்னு பெரியவங்க சொல்வாங்க! படிக்காத பெண் இருக்கிற குடும்பத்துல, பட்டு பட்டுன்னு கஷ்டமும் கலக்கமும் வரும்னு சொல்லுவாங்க. அவ்வளவு சரியா இருக்கு பார்த்தியா!

வேல்: சுந்தரி! சுந்தரி! அடேடே! உங்களை தேடித்தான் மாமா போனேன். நீங்களே வந்துட்டீங்க, ஏன் மாமா லேட்டு!டீ பார்ட்டியா! டின்னரா...குருப்போட்டாவா? (ஏகாபரம் ஒரு புத்தகத்தை விரித்துப் பார்த்து பிறகு மூடி வைக்கிறார். அவர் முகம் மாறுகிறது.)

ஏகா: குசலம் விசாரிச்சது போதும். மரியாதையா கேட்கறதுக்குப் பதில் சொல்லு. தங்கச்சி பையன்னு நான் உன்னே வீட்டுக்கு வர போக அனுமதிச்சேன். எத்தனே நாளா இந்த திருட்டு வேலை...

(வேல்முருகனுக்கு விஷயம் புரியாது விழிக்கிறான்)

புஸ்தகம்னு ஆரம்பிச்சே...இப்ப கள்ளத்தனமான வேலையெல்லாம் பண்ண ஆரம்பிச்சிட்டே! இனிமே இந்த வீட்டுலே நுழையாதே!

வேல்: [பதறியபடி] நான் ஒன்னும் தப்பு தவறு நடந்துக் கலியே! மாமா! யாரோ உங்களுக்கு தப்பா தகவல் கொடுத்திருக்காங்க! நான் ரொம்ப நேர்மையானவன். என்னே உங்க வீட்டுக்குள்ளே நுழையாதேன்னு சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு! ஆனு அயோக்கியன்னு சொல்ல உரிமையில்லே.

ஏகா: உரிமை இல்லேன்னு எப்படி? நாங்க இல்லாத சமயத்தில வீட்டுக்கு வந்தே! சுந்தரிகிட்டே புஸ்தகம் கொடுத்தே!

வேல்: அதுவரையில் உண்மை, அப்புறம் என்ன நடந்ததுன்னு நீங்க நினைச்சுகிட்டு இருக்கிறது கற்பனை...

ஏகா: கற்பனை இல்லேப்பா...என் கண்ணாலயே பார்த்ததை தான் நான் சொல்றேன்...

வேல்: சுந்தரி... இதெல்லாம் உன் வேலைதானா? வீட்டுக்கு வராதேன்னு வரலே! அதுக்காக பழி சுமத்தறியே! இது உனக்கே நியாயமா படுதா?

சுந்: உங்க திருட்டுலே நான் ஏன் கூட்டு சேரணும்? நீங்க என் மாமன் மகன்தான். உறவு உரிமை எல்லாம் உண்டு. ஆனா, திருடிட்டு கையும் களவுமா பிடிபட்டு நிற்குறீங்களே !நான் எப்படி உங்களுக்கு உதவ முடியும்?

வேல்: ஒண்ணும் புரியலையே!

ஏகா: இந்தப் புத்தகத்தைப் பார்த்திருக்குறியா?

வேல்: நான்தான் கொண்டு வந்து கொடுத்தேன். அது தப்புன்னு ?

சர: அது தப்பில்லேப்பா... அந்த புஸ்தகத்து உள்ளாற எங்க வீட்டுல காணாமப் போன பாண்டு இருக்குதே! இதுக்கு என்ன சொல்றே!

ஏகா: நீ ரொம்ப நல்ல பையன்னு சரஸ்வதி கிட்ட சொல்லி எங்க வீட்டுக்கு மருமகனா ஆக்கிக்கலாம்னு முடிவு பண்ணியிருந்தோம்! இப்படி ஒரு திருட்டுவேலை பண்ணி மாட்டிகிட்டியே! போ! உனக்கு அவ்வளவுதான் கொடுத்து வச்சது... எங்கே, யாருக்கு, என்ன

கொடுப்பனே இருக்குதோ. அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்... தயவுசெய்து நீ போப்பா!...

சுந்: அப்பா...

ஏகா: ஒருத்தன் முரடனுயிருக்கலாம்மா! ஆனு திருடனு யிருக்கக் கூடாது, புரியுதா?

வேல்: மாமா! அத்தே! இப்ப நான் எது சொன்னுலும் தப்பாதான் தெரியும். கடவுள்தான் இதற்கு ஒரு தீர்ப்பு சொல்லணும். அதுவரைக்கும், நான் காத்திருக் கிறேன்! வர்ரேன் மாமா!

(வெளியே சத்தம், பேச்சுக் குரல், கோபமாகக் கேட்கிறது)

சுப்ர: வரதா! நீ பேச்சு மாறிட்டே! முப்பது ரூபா தர்ரேன்னு சொல்லிட்டு, பத்து ரூபா தர்றியே! எனக்கு நீயும் வேண்டாம், உன் ரூபாயும் வேண்டாம்.

வர: டேய் டேய்! காரியம் முடியட்டும்டா! கேட்டதுக்கு மேலயே தரேன், சத்தம் போடாதே! அவங்க காதில விழப்போகுது.

சுப்ர: வாசல் வரை வந்தாச்சு. இனிமே யோசிக்க ஒண்ணு மில்லே, நான் போய் ஏகாம்பரம் அய்யா கிட்ட சொல்லத்தான் போறேன்,

ஏகா: [கத்துகிருர்] ரெண்டு பேரும் இங்கே வாங்கடா! (வேல் முருகன் ஓடிப் போய் வரதனைப் பிடித்துக் கொள்கிருன்) என்ன விஷயம்! உண்மைய சொல்லு. இல்லே போலீஸ்ல பிடிச்சுக் கொடுத்துடுவேன்.

வர: ஒண்ணுமில்லே மாமா! கொஞ்சம் பணம் கேட்டான். அப்புறம் வாங்கித் தர்றேன்னு சொன்னேன். இப்பவே வேணுமுன்னு அவசரப்படுகிருன், அதுதான்...

வேல் : வரதா! நீ தான் இதுல ஏதோ சூழ்ச்சி பண்ணி யிருக்கே! சொல்றியா... இல்லை...

வர : எனக்கென்ன தெரியும்! உன் பாடு! உங்க மாமா பாடு! நீ திருடி மாட்டிக்கிட்டா என்னை என்ன பண்ணச் சொல்றே! ஏன்டா சுப்பு...சீ! கைய எடு...ஏதோ ரௌடியை புடிக்கிற மாதிரி இல்லே புடிச்சிக் கிட்டிருக்கிற...வாடா சுட்பு! போகலாம்!

ஏகா : வாடா சுப்பு—உனக்கு எவ்வளவு பணம் வேணும், நான் தர்ரேன்! ஏன்? வரதன் முழிக்கிறான்!

சுப்ர : வேறு ஒண்ணும் இல்லீங்க...ஒரு சின்ன விஷயத் துக்கு 30 ரூபா தர்ரேன்னு சொன்னாரு...இப்ப மாட் டேன்னு சொல்றாரு...

வர : என்ன? சின்ன விஷயம்னு என்னடா! ஒண்ணு மில்லியே! உளறித் தொலைச்சே...அப்புறம் இந்த ஊருக்குள்ளே நடமாட மாட்டே!

சுப்ர : ஒண்ணு தப்பும் செய்யலே அவரு... ஒருத்தர் வீட்டுக்குப் போயி, ஒரு புத்தகத்துல ஒரு பேப்பரை வச்சுட்டு வரச் சொன்னாரு. நானும் அதைப் பிரிச்சு பார்க்காம, யோக்கியமா வச்சுட்டு வந்தேன். ஆனா, வரதன் யோக்கியமா சொன்ன மாதிரி பணம் தரலிங்க.

நீங்க வாங்கித் தந்திடுங்கய்யா...நாளைக்குக் காலேல வர்ரேன்...

(போகிறான்)

வர : டேய்! டேய்! நல்லா மாட்டிவிட்டுட்டு போயிட்டி யேடா! மாமா! அவன் சொன்னதெல்லாம் நிஜம்தான்! சுந்தரியை முருகனுக்குத் தர்ரதா நீங்க முடிவு பண்ணுன

தெல்லாம் கேள்விப்பட்டேன், அவன் மேல திருட்டுப் பட்டம் கட்டிட்டா. உங்க மனசு மாறிப் போயிடும்னு நினைச்சேன்.

இன்னைக்கு மத்தியானம் வீட்டுக்கு வந்தப்ப, அத்தை பத்திர கட்டை பிரிச்சுக்கிட்டு இருந்தாங்க! அதுக்குள்ளே உள்ளேயிருந்து சுந்தரி கூப்பிடுற சத்தம் கேட்டு உள்ளே போனாங்க.

நான் வந்து சுப்ரமணியம் பாண்டை எடுத்துக்கிட்டு போய். அவன் படிச்ச புத்தகத்து உள்ளே வைக்கச் சொன்னேன், நான் நினைச்ச மாதிரிதான் நடந்தது.

வேல் : அதுக்கு மேல கடவுளுக்கே பொறுக்கல உன்னைய கையோட கூட்டிட்டு வந்துட்டாரு. எப்படியோ என் மேல உள்ள திருட்டுப் பழி போயிடுச்சு.

வர : என்னை எல்லோரும் மன்னிச்சிடுங்க [ஓடுகிறான்]

வேல் : எல்லாம் முடிஞ்சு போச்சு. நான் வர்ரேன் மாமா! [புறப்படுகிறான்]

சுந் : அம்மா! அவர் கோபமா போறாரும்மா!

ஏகா : போகட்டும்மா! தண்ணியை தடியாலே அடிச்சாலும் தண்ணி பிரியாதும்மா. திரும்பவும் சேர்ந்துடும். தகராறு வந்தாலும் உறவு பிரியாதும்மா! நம்ம முருகன். ஏப்பா! ஏதாவது கோபமா?

சர : தம்பீ! கொஞ்சம் பொறுங்க. போறதுக்கு முன்னே ஒரு சேதி! நான் படிக்காம இருந்ததுனாலதான் அவருக்கும் உங்களுக்கும் இந்தக் கஷ்டம், இன்னும் ஒரு வாரத்துல கையெழுத்துப் போடக் கத்துக்கறேன். அப்புறம் முகூர்த்தம் ஏற்பாடெல்லாம் பண்ணிடுவா.

வேல் : நீங்க சொன்னு நான் என்ன மாட்டேன்னு சொல்லப் போறேன்.

ஏகா : அடுத்த வாரம் நான் என்ன சொல்வே தெரியுமா?

சுந் : என்ன சொல்வீங்க?

ஏகா : ஒரு ஜடம் சரஸ்வதியாயிட்டான்பேன், எப்படி?

சர : ஆமா, இனிமே நான் சரஸ்வதிதான்.

[ஸ்டெயிலாக நிற்பதைப் பார்த்து எல்லோரும் சிரிக்கின்றனர்].

நானும் வர்ரேன்!

கதை மாந்தர்கள்

ராமையா ... (45 வயது)

சின்னப்பன் ... (வயது 45)

மங்காத்தா ... (38 வயது)

சரோஜா ... (18 வயது).

நானும் வர்ரேன்!

காட்சி 1

இடம் : கிராமப்புற வீடு...முன் பகுதி,

காலம் : மாலை

உள்ளே : சின்னப்பன், ராமையா, மங்காத்தா.

[சின்னப்பன் கையில் அரிச்சுவடி சிலேட்டு புத்தகத்துடன் வீட்டிற்குள் நுழைகிறார், தலைக் குடுமியை அள்ளிக்கட்டிக் கொண்டிருக்கும் ராமையா, ஆர்ப்பாட்டத்துடன் அவரை வரவேற்கிறார்].

ராமையா : அடடே, சின்னப்பாவா! என்னப்பா இது சினிமா பாட்டுப் புத்தகமா! இது எப்பத்துல இருந்து? வரவர வயசையே மறந்துடுவே போல இருக்குகே.

சின்ன : இது பாட்டுப் புத்தகம். இல்ல ராமையா! பாடப் புத்தகம். ஆன்னா ஆவன்னா புத்தகம். இங்க பாரு! அரிச்சுவடி தெரியாதா...

ராமையா : என்னது! பேரப்பிள்ளைய தூக்குற வயசுலபாடப் புஸ்தகமா! ஆமா! உன் பையனும் பேரன்களும் தான் காஷ்மீருல இருக்குறாங்களே. அங்க கிடைக்காத புஸ்தகமா இந்தப் பட்டிக்காட்டுல கிடைக்குது: கண்ட புத்தகத்தை வாங்கி அனுப்பி, உன் பேரன்களை கெடுத்துடாதேப்பா!

சின்ன : பேரன்களுக்கு இல்லேப்பா! சாட்சாத் எனக்குத் தான்! என் வாத்தியார் எனக்குப் படிக்கக் குடுத்த புஸ்தகம்! என்ன முழிக்குறே? அசல் ஆடு திருடுன கள்ளன் மாதிரியே முழிக்கிறியேப்பா!

ராமையா : காலங்கெட்டுப் போச்சு. கலி பூந்து விளையாடு கிறுன். கட்டையில போற வயசுல புத்தக முட்டைய தூக்குறே! ஏன்பா! உனக்கு மூளைகீளை கலங்கிடுச்சா! இல்லே... தெரியாமத்தான் கேக்குறேன்... மேலே நட்டுலூசா போயிடுச்சா...

சின்ன : எல்லாம் நல்லாவே இருக்கு. கவலைப்படாதே! ம்...என் கவலை உனக்கெங்கே தெரியப் போகுது. இந்தக் கிராமத்துல ஒண்டிக்கட்டை. உன் கிட்ட சொன்னு தான், எனக்கும் கொஞ்சம் பாரம் குறைஞ்ச மாதிரி இருக்கும்.

ரா : சும்மா சொல்லுப்பா, இப்ப நேத்து பழக்கமா நாற்பது வருஷமா கூட்டாளிங்க! நமக்குள்ளே என்ன ரகசியம் இருக்கு. கூச்சப் படாம சொல்லு.

சின்ன : வேற ஒண்ணும் இல்லே! நாம ரெண்டு பேரும் ஒன்னுங்கிளாசுல போய் முதன் முதலா உட்கார்ந்தது உனக்கு ஞாபகம் இருக்கா! பச்சை மரத்துல ஆணி பாஞ்ச மாதிரி, இன்னைக்கும் எனக்கு ஞாபகம் இருக்குது!

ரா : ஏன் இல்லே! வாத்தியார் அடிச்சாருன்னு திட்டி புட்டு ஓடி வந்துட்டோமே! அப்புறம் பள்ளிக்கூடத்து பக்கமே போகலியே! அப்படி ஒதுங்கி வந்துட்டது எவ்வளவு நல்லதா போச்சுன்னு இப்பதான் தெரியுது!

சின்ன : என்ன அப்படி சொல்றே! படிக்காம போனது நல்லதாவா படுது, நான் எவ்வளவு வேதனைப்பட்டு கண்கலங்கிகிட்டு இருக்குறேன் தெரியுமா? கேவலம்

கண்டவன் எல்லாம் நம்மை கைநாட்டுப் பேர் வழின்னு கிண்டல் பன்றாங்க.

ரா: அதை ஏன்பா காதுல போட்டுக்குறே! படிச்சவங்க எல்லாம் பசியும் பட்டினியுமா பட்டம் மாறி பறக்கிறது நமக்குத் தெரியாதா? படிக்காததுனால தான்! வேலைக்குப் போனோம். விவசாயம் வியாபாரம் செஞ்சோம். சொத்து சுகம் சேர்த்தோம். சுகமா இருக்குறோம். இது போதாதா?

சின்ன: என்னதான் சொத்து சுகம் இருந்தாலும், நாமெல்லாம் தற்குறி தானேப்பா! புத்தி இல்லாத ஜடந்தானே. சரஸ்வதி கடாட்சம் இல்லாத கபோதி தானே!

ரா: அதனால தான் நான் சொன்னேன். உனக்கு மூளை கலங்கிப் போச்சின்னு! இத்தனை நாள் இல்லாம, ஒனக்கு என்ன வந்துச்சு! படிக்காததுனால நீ என்ன பாழா போயிட்டே! ஆசைக்கு ஒரு பொண்ணு. ஆஸ்திக்கு ஒரு ஆணு. ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணிட்டே. அப்புறம் என்ன? .... கோயில் குளம்னு திரியறதை விட்டுட்டு...

என் பையன் காஷ்மீருல இருந்து பணம் அனுப்புறான். மாசம் 100 ரூபாய் மனியார்டர்... நான் என்ன பண்றேன், . வண்டியை எடுத்துக்கிட்டு போய், கைரேகை வைச்சுட்டு, காசை வாங்கிகிட்டு வர்ரேன், என் மகன் இதை கேவலமா நினைக்குறான், எனக்கும் ரொம்ப அவமானமா இருக்கு.

யார் யாரையோ தேடி புடிச்சி கெஞ்சிக் கூத்தாடி என் மகனுக்குக் கடுதாசி எழுதி அனுப்புறதுக்குள்ளே, எனக்கும் போதும் போதும்னு ஆயிடுது.. அதனால நான் இந்த முடிவுக்கு வந்தேன். பள்ளிக்கூடம்

போகனும், எழுதத் படிக்குனும் நானே கையெழுத்துப் போடனும்....கடுதாசி எழுதனும். என் மகன் மானத்தைக் காப்பாத்தணும். புரியுதா. .

ராமை: பைத்தியக்காரன் நீ. தலைய வலிக்குதுன்னு தைலம் வாங்கித் தேச்சுக்கலாம். அதை விட்டுட்டு, நான் ஆஸ்பத்திரியே கட்டப் போறேன்குறியே! உன்னைப் போல அசடு இந்த உலகத்துலயே இல்லே போ...

கைரேகை போடுறதுல என்னப்பா கேவலம்! இந்த வயசுல போய் படிக்குறேன்னு நிற்குறியே. படிச்சா மண்டையயிலதான் ஏறுமா, பாடந்தான் வருமா. அப்படியே வந்துச்சின்னு வச்சுக்கோ?...

சின்ன: மனுஷனு பொறந்திருக்கோம். . மிருகத்துக்கும் நமக்கும் என்னப்பா வித்தியாசம்? சோறும் தூக்கமும் மட்டும் வாழ்க்கை இல்லேப்பா எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்னு சொத்து வந்த வாத்தியாரு புட்டு புட்டு வச்சாரு.

டேய் ராமையா. இங்கே பாரு. புஸ்தகம் படிச்சா இது கண்ணு, இல்லேன்னு முகத்துல உள்ள புண்ணு. அப்படின்னு அந்த வாத்தியாரு அடிச்சிப் பேசிருப்பா. நான் பள்ளிக்கூடம் போறேன், நீயும் வர்ரியா.

(ராமையா சத்தமாக சிரித்துக்கொண்டே தன் மனைவியை அழைக்கிறான்).

ராமை: ஏ புள்ளே மங்காத்தா! இங்கே வா. உன் அண்ணன் சின்னப்பன் சொல்றதை கேட்டியா! என்னையும் பாடம் படிக்கக் கூப்புடுறான்.

மங்கா: (வந்து கொண்டே) கூப்பிட்டா போய்ட்டுவாங்க. புண்ணியம் தானே. நாலு எழுத்தைக் கத்துக்கிட்டா,

நாகரிகமா நடப்பிங்க...போற இடத்துல ராஜா மாதிரியும் இருப்பிங்க. அப்புறம்...எனக்கும் கௌரவமா இருக்கும்,

(கொஞ்சம் நாணிக் கொள்கிருள்)

ராமை: ஏண்டி! படிச்சாதான் புத்தி வரும்ங்கறியா. இந்தக் கட்டுக் குடுமியை அவிழ்த்து ஒரு தட்டு தட்டினு, கட்டுக் கட்டா யோசனே வந்து கொட்டும்ண்டி. இந்த உலகத்துல பணம்தான் பெருசு... படிப்பு இல்லே. இதை நான் நிரூபிக்கட்டுமா?

சின்ன: எப்படி?

ராமை: என் பொண்ணு சரோஜா...படிக்காதவதானே, அதுக்கு படிச்ச வாத்தியாரையே கொண்டு வந்து கட்டி வைக்குறேன் பாரு...இப்பவே பட்டணம் போறேன், மாப்பிள்ளையை கையோட கூப்பிட்டுகிட்டு வர்ரேன்,

சின்ன: என்ன சொல்றே நீ? ஏற்கனவே தீர்மானம் பண்ணுன மாப்பிள்ளைதானே அவரு.

ராமை: ஆமா! என் பணத்துக்காகவும், என் பொண்ணு ஞோட அழகுக்காகவும் அவன் ஆமாம் போட்டுத்தான் ஆகணும்...சரணுகதி அடைஞ்சுதான் ஆகணும்...ஏய் மங்கா...ஆயிரம் ரூபாவை அள்ளிக்கிட்டு வா! மாப்பிள்ளெய போயி காரிலயே கூட்டியாரேன்...

மங்கா: இப்ப என்ன அவசரம்...ஆர அமர நாளைக்குப் போகலாமே!

ராமை: இல்லே. இதே வேகத்துல மெயில்ல ஏறி பட்டணம் போறேன்...படிப்பு பெரிசுல்ல, பணம் தான் பெரிசுன்னு

சின்னப்பனுக்கு புத்தி புகட்டணும் ஒரே கல்லுல ரெண்டு மாங்காய், எப்படி?

சின்ன: போய் வா. வந்த பிறகு பேசிக்குறேன்...

ராமை: ஏ ஒன்ணுங்கிளாஸ்...நீ பள்ளிக்கூடம் போ. நான் பட்டணம் போறேன்...மங்கா! துண்டை எடு!...பையை குடு...நேரம் ஆகுது. (உள்ளே போகிறான்...மங்கா பின்னால் போகிறாள்).

சின்ன: (மெதுவாக) பட்டணமா போறே! என்கிட்ட சவாலா விடுறே... போய்ட்டு வா...அப்பதான் உனக்கு புத்தி வரும், எனக்கும் சக்தி வரும், (மர்மாக சிரித்துக் கொண்டே செல்கிறான்.

காட்சி-2

இடம் : அதே வீடு.

காலம் : காலை

உள்ளே: மங்காத்தா, சரோஜா, ராமையா, சின்னப்பன்.

மங்காத்தா முறத்தில் உள்ள அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருக்கிறாள். வெளியிலிருந்து வெறும் குடத்துடன் சரோஜா, கவலையுடன் வருகிறாள், அவளை நிமிர்ந்து பார்த்து எரிச்சலுடன்)

மங்கா: சரோஜா! ஏய் சரோஜா! ஏண்டி, நான் கூப்பிடுறது காதில விழுதா. எதையோ பறிகொடுத்தவ மாதிரி வர்றே! என்ன நடந்துச்சு, தண்ணி கொண்டு வர்றேன்னு வேகமா குளத்துக்குப் போனே, இப்பொ வெறும் குடத்தோட வர்றே? ஏன்? குளத்துல தண்ணி இல்லாமலா போச்சா...

சரோ: (சலிப்புடன்) குளத்துல தண்ணி இருக்கு...என் கண்ணுலதான் இல்வாம போச்சு. இருந்திருந்தா, இன்னும் கொஞ்ச நேரம் அங்கே இருந்து உட்கார்ந்து அழுதுட்டு வந்திருப்பேன்.

மங்கா: குத்துக்கல்லு மாதிரி பெத்தவ இருக்கிறேன்! நீ ஏண்டி அழணும்? உட்கார்ந்து அழறதுக்கு ஊர் கோடி தான் கிடைச்சுதா... நம்ம வீடு மொட்டை மாடி இல்லே? அப்படி என்ன நாங்க அநியாயம் பண்ணிட்டோம்... அங்கே போய் ஆங்காரமா அழுதே...

சரோ: இன்னும் என்ன பண்ணனும்? உதிய மரம் மாதிரி எதுக்குமே உதவாம, என்னை இப்படி வளர்த்து வச்சிருக்கிங்களே...

மங்கா: யாருடி சொன்னா, ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணுன்னு இருக்குறே. உயிரைக் கொடுத்து வளர்க்குறோம்! நீ உதியமரம் இல்லேடி...எலுமிச்சங் கொடி, இளம் வாழைத்தண்டு. தாமரைக்குளம், தனிக்காட்டு ராஜாத்தி. புரியுதா! உதிய மரமாம் உதியமரம்... சொன்னவ யாருன்னு சொல்லு. பல்லே உடைச்சி கையில கொடுத்துட்டு வர்றேன். பட்டுக் கெடப்பாளுங்க...

சரோ: ஊரைத் திட்ட, வேண்டம்மா. உங்களையே நல்லா திட்டிக்கங்க. 22 வயசாச்சு எனக்கு. நான் இருந்து என்ன புண்ணியம்...

மங்கா: ஏம்மா அப்படி கேட்குறே...யாராவது ஏதாவது சொன்னாளா...சீக்கிரமாச் சொல்லு. பெத்த வயிறு பத்தி எரியுது... சொல்லமாட்டியா...கண்ணுல நெருப்பு

விழுந்த மாதிரி நான் துடிக்குறேன்! நீ மனசுக்காரி... உம்முன்னு நிக்குறியே...

சரோ: சொல்றேம்மா சொல்றேன். சொன்னாத்தான் உங்களுக்கும் புரியும் எனக்கும் விடியும்... இப்ப அப்பா பட்டணம் போயிருக்காரே! ஏன் போனாரு?...

மங்கா: என்னம்மா இப்படி கேட்குறே! திருவிழா சமயத்துல பீரங்கி வெடி மாதிரி வெடிச்சுட்டு போனாரே. தெரியாதா! பட்டணம் போய், உன் முறை மாப்பிள்ளை ராஜமாணிக்கத்தைப் பார்த்து, பேசி, கையோட கூட்டிக்கிட்டு வந்து... (நிதானத்துடன்) ஏய். இந்த சமாசாரத்தை என் வாயாலயே கேட்கணும்னு உனக்கு ஆசையா...

சரோ: (சலிப்புடன்) ஆமா. ஆசை ஆலவட்டம் போடுது! நீ ஒண்ணும்மா! உறியில வெண்ணையை வச்சிகிட்டு ஊரெல்லாம் நெய்க்கு அலையுற மாதிரி, மாப்பிள்ளைய பக்கத்துல வச்சுகிட்டு, பட்டணத்துல போய் தேடப் போயிருக்காரு அப்பா.

மங்கா; யாரு? மாப்பிள்ளையா? உண்மையாவா! என்னடி கரடி விடுறே...

சரோ: கரடியில்லேம்மா! மாப்பிள்ளை! என் ரெண்டு கண்ணாலயும் பார்த்தேன்! இந்த வாயால தான் பேசுனேன். நம்ப மாட்டியே! பெரிய மாப்பிள்ளை. உலகத்துநீ ஒன்பதாவது அதிசயமான ஆம்பல... ம்க்கும்... (வெறுப்புடன் பேசுகிறாள்) மூஞ்சியும் முகரையும்...

மங்கா: (பதட்டத்துடன்) அப்படியெல்லாம் பேசாதேடி... உன்னை கட்டிக்கப் போறவன்... எதையாவது தப்பா பேசி காரியத்தை கெடுத்துடாதே... ஆமா...

சரோ: காரியத்தை நான் கெடுக்கலேம்மா. நீங்கதான் கெடுத்திட்டீங்க...இனிமே நீங்க நினைக்குற மாதிரி கல்யாணம் நடக்காது, அப்பாவும் அம்மாவும் நீங்களே பேசி சந்தோஷப் பட்டுக்கங்க...நான் போறேன்

மங்கா: இருடி...என்னை போட்டு ஏன் இப்படி குழப்புறே? நீயும் புலம்பறே, அவரை எங்கே பார்த்தே? என்ன பேசுனே? ஏன் அவர் நம்ப வீட்டுக்கு வரலே...நம்ம மேல ஏதாவது கோபமா?

சரோ: ஆமா! கோபந்தான். நம்ம வீட்டுக்கு வர்ர வழியில, குளத்தங்கரையில அவரைப் பார்த்தேன்... என்னை பார்த்ததும் அவருக்குச் சந்தோஷம் தாங்கலெ... அவருக்கு பதவி உயர்ந்து போய், நம்ம ஊருக்கு மாற்றலாகி வந்ததைப் பத்தி பிரமாதமா பேசுனரு... பத்திரிகையில வந்த அவரோட போட்டோவையும் காட்டுனரு... நானும் பார்த்தேன்... அப்புறம் (சோகத்துடன்) அவரைப் பத்தி எழுதியிருந்ததை என்கிட்ட காட்டி, படிக்கச் சொன்னரும்மா...

மங்கா: (திகைப்புடன்) படிச்சியா...ஐயையோ...நீ என்ன பண்ணுனே!

சரோ: பத்திரிகைய வாங்கி திருப்பி திருப்பி பார்த்தேன். பாம்பு கடிச்ச மாதிரி உடம்பெல்லாம் விர்றுன்னு ஏறுது. என் கண்ணுலயிருந்து ஆறு கண்ணீர் வழிஞ்சது. அவரோ? உன் ஆனந்தக் கண்ணீரை நிறுத்திட்டு. அழாம படின்னு சொன்னரு. எனக்குப் படிக்கத் தெரியாதுன்னு சொன்னேன், பத்திரிக்கையை வெடுக்குன்னு பிடுங்கிகிட்டு, வேகமா போய்ட்டாரும்மா பேசாமலே போய்ட்டாரு... இனிமே அவர் திரும்பியே வரமாட்டாரும்மா... வரமாட்டாரு. (அழுகிருள்).

மங்கா: (தலையைத் தடவி ஆறுதல் கூறுகிருள்). நீ ஒண்ணுக்கும் கவலைப்படாதே. உயிரை கொடுத்தாவது அவரை வர வைக்கிறேன். அப்பா வரட்டும். நீ போய் முகம் கழுவிக்கம்மா... போ... போ...

(சரோஜா போகிருள். மங்காத்தா அங்குமிங்கும் நடந்து கொண்டே பேசுகிருள்).

போன உடனே வந்துடரேன்னு சொல்லிட்டுப் போன மனுஷனை மூணு நாளாச்சு. இன்னும் காணேம். ஏன்... போன வேலேய மறந்துட்டு சினிமா கம்பெனிய சுத்திக்கிட்டு அலேயுதோ... ம்... வீட்டை விட்டு போய்ட்டா வீட்டையே மறந்துட வேண்டியது... இந்த ஆம்பளைங்களே இப்படித்தான். வரட்டும்... பேசிக்குறேன்.

(ராமையா தலையில் துண்டைப் போட்டபடி, தள்ளாடி தள்ளாடி நடந்து வருகிருன். மங்காத்தா அவனைப் பார்த்து கேலியாக)

வாங்கு...றேன்... ஒரு மாதிரியா வர்ரீங்களே... ஏங்க... பட்டணம் போய்ட்டு வர்ரீங்க...ஒரு பொட்டணம் கூட கிடைக்கலே... எங்க நினைப்பு உங்களுக்கு எப்படி வரும்! ஏரோப்ளேன்ல போற மாதிரி நினைப்பு!...சும்மா ஜல்லி கட்டு காளை மாதிரியில்லே டவுனை சுத்தியிருப்பீங்க!

ராமை: (துண்டை விலக்கியவாறு) நீ ஒருத்தி! வந்ததும் வராததுமா இராமாயணத்தை ஆரம்பிச்சிட்டே. பட்டணம் போய் கெட்டு வந்திருக்கிறேனடி...

மங்: எனக்குத் தெரியுமே, ஆயிரம் ரூபாய் கையில இருக்கும் போது ஆடாத ஆட்டமெல்லாம் ஆடியிருப்பீங்களே... கேட்பாரு மேய்ப்பாரு இல்லாத இடம்... ம்... வயசாயிடுச்சே! கல்யாணம் ஆகுற மாதிரி பொண்ணு இருக்குதே! கொஞ்சம் கூட கவலையில்லாம கும்மாளம் போட்டுட்டு, இங்க வந்து கெட்டுப்

போய்ட்டேன், பட்டுப் போய்ட்டேன்னு பாட்டா பாடறீங்க!

ராமை: மங்கா! கொஞ்சம் தண்ணி குடு. நாக்கை நனைச்சுக் கறேன்! பச்சைத்தண்ணி குடிச்சே, ரெண்டு நாளாச்சு. நான் பட்டு வந்த வேதனையைச் சொல்றேன்.

மங்: சரோஜா... அப்பாவுக்கு மோர் கொண்டாம்மா... இப்படி உட்காருங்க... என்ன ஆச்சுங்க... சீக்கிரம் சொல்லுங்க...

ராமை: மங்கா! நான் பட்டணம் போனேனு. பையன் அட்ரசைக் கேட்டேன. கேட்கிறவன் எல்லாம் விலாசத்தைப் படின்னுதான் கேட்குறான். வீட்டைக் கண்டு புடிக்குறதுக்குள்ளே என் பொறுமையே போச்சு. வீட்டு விலாசம் இருக்குது, என்ன பண்ணுவேன். கடைசியில வீட்டைக் கண்டு புடிச்சேன். ஆனு, பையன் பட்டணத்துலயே இல்லே. வேற ஊருக்கு மாத்தலாகிப் போய்ட்டானும்,

ங்கா: எங்கேயும் போகலிங்க. .

ராமை: குறுக்கே பேசாதே... அப்புறம் கோவம் வந்துடும். அப்ப வந்த ஆத்துரத்துல வேகமா எக்மோருக்கு வந்தேன். டிக்கெட்டை வாங்கிகிட்டு போய் ஒரு பெட்டியில உட்கார்ந்தேன். ஒரு ஆள், சூட்டும் கோட்டும் போட்டுகிட்டு என் டிக்கெட்டை கேட்டான். நானும் கொடுத்தேன். பார்த்துட்டு திருப்பித் தந்தான், அவன் போனதுக்கப்புறம், இன்னொருத்தர் கிட்டே டிக்கெட்டை காட்டுனேன். அது பிளாட் பாரம் டிக்கெட்டுன்னு அவன் சொன்னன், பதறி ஓடிப் போய் அவனை தேடிப்புட்டு வந்து பார்த்தா, ரயில் பெட்டியில இருந்த என் பை, பொட்டலம் ஒன்னை கூட காணும்.

மங்கா: அட பழிகாரப் பாவிங்களா.. நீங்கள்ளாம் உருப்படுவிங்களா...

ராமை: எல்லாம் அப்படித்தான் பேசிக்கிட்டாங்க.. அவனுங்க ஒரு கோஷ்டியாம், என்ன பன்றது. ரயிலே விட்டு இறங்கி வந்து, ஏதாவது தெரிஞ்ச முகம் இருக்குதான்னு தேடிப் பார்த்தேன், சர்க்கஸ்ல குரங்கை பார்க்குற மாதிரி, எல்லாம் என்னே வேடிக்கை பார்த்ததுதான் மிச்சம், ஒருத்தன் கூட தெரிஞ்சவன் இல்லேடி..

மங்கா: திருட்டு ரயில் ஏறி வர்றது தானே! புடிச்சா பணம் கட்டிக்குறது.

ராமை: தப்பு, தப்பு, (கன்னத்தில் போட்டுக் கொள்கிருன்)
அப்புறம் டேஷனே விட்டு வெளியே வந்து, லாரியை புடிச்சி, கடன் சொல்லி ஏறிகிட்டு வந்தேன். சின்னப் பையன் வெளியே நிற்கிருன். பத்து ரூபா பணம் கொடு.

மங்கா: (மடியில் இருந்து ரூபாயை அவிழ்த்து)இந்தாம்மா! சரோஜா.. இதைக் கொண்டு போய் குடுத்துட்டு வா. (சரோஜா மோரைக் கொடுத்துவிட்டு ரூபாயை வாங்கிக் கொண்டு வெளியில் செல்கிருள்).
நாலு எழுத்துப் படிக்கத் தெரிஞ்சிருந்தா, டிக்கெட் போயிருக்காதுல்லே,. காருல திரும்பி வர்ரேன்னு போயிட்டு, லாரியில வந்திருக்கிங்களே, ஏமாந்த சோனகிரின்னு மூஞ்சியில நல்லா எழுதி ஒட்டியிருக்குது.

ராமை: ஏமாந்தா என்ன? ஒரு நாளைக்கு என் கண்ணுல படாமலா போயிடுவான்...அந்தத் திருட்டுக் கையை காசப்பு கடைக்காரன் மாதிரி நறுக்கித் தள்ளிட மாட்டேன்., இதுக்காக போய் அலட்டிக்குறியே,
(சின்னப்பன் உள்ளே வருகிருன்.)

சின்ன: அடடெ, ராமையவா பட்டணப்பிரவேசம் எப்படி இருந்தது? முகத்தை பார்த்தா ஜோரா தெரியலியே? எங்கேயோ அடிபட்டு வந்த மாதிரி...

ராமை: இது அடிபட்ட புலி...ஒரு நாளைக்குப் பாயும்... புரியுதா...

சின்ன: எல்லாம் சரோஜா சொன்னது. சரோஜா! நீயும் வாம்மா. (வெளியிலிருந்து வருகிறாள்) ஏம்பா ராமையா! வெறும் கையால மீன் பிடிக்க வேகமா போனியே. என்னாச்சு. ஆழத்துக்கும் போய் தட்டு தடுமாறி தண்ணி குடிச்சு வயிறு வீங்கி வந்திருக்கே? மாப்பிள்ளையை இங்கேயே வச்சுகிட்டு இப்படியா அவஸ்தை படுவாங்க...

ராமை: என்னது, மாப்பிள்ளை பையன் நம்ம ஊரிலயா! என்னடப்பா புரளி விடுறே...

மங்கா: எங்கே என்னை பேச விட்டிங்க., ஆத்திரம் வருதாம்,, ஆத்திரம். திண்டுக்கல்லுல உதை வாங்கிகிட்டு, திருச்சி வந்த பிறகு ரோஷம் வந்ததாம். அந்த மாதிரி இருக்கு, உங்க கதை.

ராமை: அப்படியா. நம்ம ஊருக்கு வந்த பையன். உடனே வந்து என்னை பார்த்திருக்க வேண்டாமா, வந்து பார்த்திருந்தா., பணத்தை பறி கொடுத்துட்டு, பட்டணத்துல பசியும் பட்டினியுமா துடிச்சிருக்க மாட்டேனே!

சின்ன: காருல வரேன்னு போயிட்டு லாரியில வந்தியாமே! மாப்பிள்ளை வந்த விஷயம் எனக்கு முன்னமே தெரியும்! சவால் விட்டுட்டுப் போனியே. அதனாலே தான். நான், ஒன்னும் பேசாம இருந்தேன்.

ராமை: இப்ப என்ன ஆச்சு! நீ இப்பவும் போசாமலேயே இரு, கல்யாணத்தை நடத்திக் காட்டுறேன்,

சின்ன: அதெப்படி நடக்கும் உன் குடும்பத்தையே பையன் அளந்து வச்சிருக்கானே, உன் பொண்ணை பார்த்துட்டு ஓடிய பையன் இந்தப்பக்கம் இன்னம் திரும்பலியே!

ராமையா: சரோஜா! இங்கே வா! என்னம்மா நடந்தது? சீக்கிரம் சொல்லு [கோபமாக]

சரோஜா: படிக்காத பொண்ணுன்னு என்கிட்டே பேசாமலே போய்ட்டாருப்பா.

மங்கா: நம்ம வீட்டுக்கும் வரமாட்டாராம்!

சின்ன: ஏன் வரமாட்டாரு! ராமையா! நீ சரின்னு சொல்லு. பள்ளிக்கூடம் போவோம். படிப்போம் பையன் டான்னு பளிஞ்சி போயிடுவான்.

ராமையா: ஏன்பா! இது ஏற்கனவே தீர்மானம் ஆன கல்யாணம். திருட்டுத்தனமா கட்டப்போற தாலி இல்லே, எப்படியும் கல்யாணம் நடந்தே தீரும்

சின்ன: ராமையா! நீ விவரம் புரியாம பேசறே! உங்க மாப்பிள்ளைப் பையன், என் வாத்தியார் இருக்காரே, அவரு முதியோர் கல்வி அதிகாரி. , ஊரில உள்ள எல்லோரும் படிக்கணும்னு பாடுபட்டுக்கிட்டு இருக்காரு. ஓங்க குடும்பமோ படிக்காத குடும்பம். இதை கேள்விப்பட்டதும் அவரு சங்கடப்பட்டதைப் பார்த்தா, எனக்கே சங்கடமா இருந்தது,

'என் மனைவி படிக்காதவன்னு என் லட்சியம் என்ன ஆகிறது? வீட்டுக்காரியை படிக்க வேண்டாம்னு சொல்லிட்டு, ஊரையெல்லாம் கூப்பிட்டு படின்னு, என்னை யாராவது மதிப்பாங்களா... நாம் செய்யுற வேலைதான் உருப்படுமான்னு அந்தப் பையன் கேட்குது. நியாயந்தானே...

இந்தக் கல்யாணம் நடக்கணும்னு முதல்ல பாடம்... அப்புறம்தான் மற்றது.

ராமை: நான் படிக்கப் போகலென்னு கல்யாணம் நடக்காதா? . .

இதென்ன ஏட்டிக்குப் போட்டி...நான் மாட்டேன்.

மங்கா: நீங்க வராட்டி... நான் போறேன், என் பொண்ணையும் கூட்டிக்கிட்டு போறேன். நம்மை என்ன பாழுங் கிணத்துலயா விழச் சொல்ருரு!... படிங்கன்னு சொல்ருங்க. அது தப்பா!

(சின்னப்பனை பார்த்து)

வாங்கண்ணு போவோம். சரோஜா: வாம்மா! நீங்கன்னு வண்டியை மடியில கட்டிக்கிட்டு...கைரேகை போட்டுகிட்டே காலந் தள்ளுங்க. நான் போய் நாலு எழுத்தைக் கத்துக்கிட்டு வர்ரேன்.

ராமை: நாலு எழுத்தைக் கத்துக்கிட்டு என்னடி பண்ணப் போறே? (கோபமும் கிண்டலுமாக)

மங்கா: அன்புள்ள அத்தான்னு உங்களுக்கே கடுதாசி எழுதப் போறேன்.

(எல்லோரும் சிரிக்கின்றனர்).

சின்ன: அப்படி சொல்லும்மா. [தன் பையிலிருந்து ஆளுக்கொரு புத்தகம் சிலேட்டை எடுத்துத் தருகிருன்] . வாங்க போகலாம்!

மங்கா: கல்யாணம் மெதுவா நடக்கட்டும். முதல்ல கண்ணை துறந்துடுற மகராசனைப் பார்க்கப் போரோம். வாங்க.

(தன் கணவனைப் பார்த்து)

இத்தாங்க, வீட்டுச்சாவி, பத்திரமா பார்த்துக்கங்க; சமயற்கட்டு லசமான்ல்லாம் நிறைய இருக்கு, படிச்சுட்டு வர்ரோம். நல்லா சமைச்சு வையுங்க.,

ராமை: என்னடி! நானு சமையல் செய்யனும்? முடியாது. நானும் வர்ரேன். எதுக்காக இல்லாட்டியும் என் பொண்ணுக்காகவாவது நான் படிச்சே திருவேன். ஒரே கல்லுல ரெண்டு மாங்காய், எப்படி? ...

சின்ன: அப்பொ இந்தாப்பா சிலேட்டு, புத்தகம் புறப்படு,

சரோஜா: (கூச்சத்துடன்) அப்பா, நானும் வரணுமா...

சின்ன: நீ இங்கேயே இரு. மாப்பிள்ளையை இங்கேயே அனுப்பி வைக்குறேன். நல்லா பாடம் சொல்லித் தருவாரு...

சரோ: போங்க மாமா... (வீட்டிற்குள் ஓடுகிறாள்)

மங்கா: வாங்க போவோம்,. இன்னைக்குத்தான் கடவுள் கண்ணை தொறந்திருக்காரு!

சின்ன: ஆமாம்மா! இத்தனை நாளா உங்களுக்கு புண்ணு இருந்தது. இப்பதான் கண்ணு மாறியிருக்குது. வாங்க போலாம்!

சரோ: (வெளியே வந்து கொஞ்சலாக) நானும் வர்றேன்... மாமா!

சின்ன: நீ இல்லயாம கல்யாணமா...... வாம்மா, போகலம். வா! வா!

[எல்லோரும் சிரிக்கின்றனர்]

... திரை ...

திரு. எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தமிழ் இலக்கியத்தில் விளையாட்டுத்துறை நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும் என்ற முயற்சியில், இதுவரை 80க்கும் மேற்பட்ட நூல்களையும், 20க்கும் மேற்பட்ட கதை, கவிதை, நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவர் எழுதிய 'ஒலிம்பிக் பந்தயத்தின் கதை' எனும் நூல் 1977ம் ஆண்டும், விளையாட்டுக்களின் கதைகள் எனும் நூல் 1981ம் ஆண்டும் தேசிய விருதினைப் பெற்றிருக்கின்றன.

தமிழிலும், உடற்கல்வித் துறையிலும், முதுகலைப் பட்டம் (M.A., M. P. Ed.,) பெற்றுள்ள ஆசிரியர் வானொலி, டெலிவிஷன் வாரப் பத்திரிக்கைகளில் தொடர்ந்து விளையாட்டுத்துறை பற்றி பேசியும் எழுதியும் வருகிறார்.

தமிழில் முதன் முறையாக "விளையாட்டுக் களஞ்சியம்" எனும் விளையாட்டுத் துறை மாத இதழை 1977ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்தி பணியாற்றி வருகிறார்.